# 19.03.2025 புதன்கிழமை மற்றும்

# 21.03.2025 வெள்ளிக்கிழமை

# காலை 10.00 மணிக்கு

# நடைபெற்ற 2025-2026ஆம்

# ஆண்டு வரவு - செலவு திட்ட

# சாதாரண மன்றக்கூட்ட

# தீர்மானங்கள்

**நி.நி.பி.ந.க.எண்.பி1 / 3100 / 2024**

**ஆணையர் அவர்களின் 18.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:230 / 2025** **பொருள் எண்.01**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிதி நிர்வாகப்பிரிவு - வரவு செலவு திட்டம் 2025-2026க்கும், 2024-2025-ஆம் ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி.**

வரலாற்று சிறப்பு மிக்க பெருநகர சென்னை மாநகராட்சி, வளர்ந்து வரும் மாநகரத்தில் வசிக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை முன்னிறுத்தி பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. மக்களின் தேவைகளைத் தொடர்ந்து செயல்படுத்தும்வண்ணம் 2025-2026-ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, செயல்திட்டங்கள் மற்றும் அவைகளுக்கான நிதி ஆதாரங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிதிநிலை**

2025-2026-ஆம் நிதியாண்டின் வருவாய் கணக்கு தலைப்பில், வருவாய் வரவு ரூ.5145.52 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.5214.09 கோடியாகவும் இருக்கும். மூலதன வரவு ரூ.3121.65 கோடியாகவும், மூலதனச் செலவு ரூ.3190.61 கோடியாக இருக்கும்.

**வருவாய்கணக்கு**

2024-2025-ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி ரூ.4464.60 கோடியாக இருந்த வருவாய் கணக்கின் வரவுகள், இதே ஆண்டின் திருத்த மதிப்பீட்டின்படி ரூ.4987.09 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், 2025-2026-ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு ரூ.5145.52 கோடியாக இருக்கும்.

2024-2025-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4727.12 கோடியாக நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இனங்களின் செலவு, திருத்திய மதிப்பீட்டில் ரூ.5439.10 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2025-2026-ஆம் நிதியாண்டில் வருவாய் இனங்களின் செலவு ரூ.5214.09 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

**வருவாய் வரவினங்கள்**

**சொத்துவரி:**

பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் இனங்களில் முதன்மையான பங்கு வகிப்பது சொத்துவரியாகும். 2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.1900.00 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் இந்த வருவாய் ரூ.2020.00 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தொழில்வரி :**

2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.550.00 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2025-2026-ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத்தில் தொழில்வரியின் வருவாய் ரூ.600.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**அரசு ஒதுக்கீடு செய்யும் வருவாய்**

**முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி:** மாநகராட்சிக்கு மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி வருவாய் 2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.350.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு 2025-2026 ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் மீதான வருவாய் ரூ.400.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**மாநில நிதிக் குழு மானியம்:**

2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டின்படி மாநில நிதிக்குழு மானியம் அரசின் வரித்தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் வருவாய் ரூ.1063.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டு, 2025-2026-ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் மீதான மான்ய வருவாய் ரூ.1150.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**இதர வருவாய்**

2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டின்படி, தொழில் உரிமக் கட்டணம், கட்டட உரிமக் கட்டணம், மத்திய மற்றும் மாநில அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள், அங்காடி உரிமக் கட்டணம், வாகன நிறுத்தக் கட்டணம் மற்றும் ஏனைய வருவாய் இனங்களின் மூலமாக ரூ.1069.09 கோடி வருவாய் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், இந்த வருவாய் 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.919.53 கோடி அளவிற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**வருவாய் செலவினங்கள்**

**பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம்:**

மாதாந்திர சம்பளம், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியப் பயன்கள், பிற ஓய்வூதியப் பயன்கள், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு மாநகராட்சியின் பங்களிப்புத் தொகை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் நேரடியாக நியமிக்கும் தற்காலிகப் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் பிற செலவினங்கள் 2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டின்படி ரூ.2074.77 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவினங்கள் 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.2232.21 கோடியாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**நிர்வாகச் செலவு:**

இச்செலவினத்திற்கென *2024-2025*-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.*299.83* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2025-2026*-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.*297.01* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி செலவினங்கள்:**

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு, இயக்கச் செலவுகள், துப்புரவு பணிகளுக்கான செலவினம், திட்டச் செலவுகள், எரி பொருள் கொள்முதல் மற்றும் வாகனங்களுக்கு தேவையான உதிரி பாகங்கள் கொள்முதல் போன்ற பல்வேறு செலவினங்களுக்காக *2024-2025*-ஆம் நிதியாண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.*1949.08* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *2025-2026*-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.*1864.44* கோடி அளவிற்கு செலவினம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**கடனுக்கான வட்டி செலுத்துதல்:**

மூலதனப்பணிகளை மேற்கொள்வதற்காக பெறப்பட்ட கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டிக்காக *2024-2025*-ஆம் நிதியாண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.*82.33* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2025-2026*-ஆம் நிதியாண்டில் இச்செலவினத்திற்கென ரூ.*67.65* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மூலதன வரவுகள்**

*2024-2025*-ஆம் நிதியாண்டு நிதி நிலை அறிக்கையின்படி மூலதன வரவு திருத்த மதிப்பீட்டில் ரூ.*2548.00* கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. *2025-2026*-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் வரவு ரூ.*3121.65* கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**மூலதனச் செலவு**

பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு துறைகள் மேற்கொண்டு வரும் மூலதனப் பணிகளுக்காக *2024-2025*-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.*2953.17* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *2025-2026*-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் செலவினம் ரூ.*3190.61* கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## துறைவாரியாக 2025-2026 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள மூலதனத் திட்டங்கள்

**பேருந்துசாலைகள் :**

சிங்கார சென்னை 2.0 திட்டம் மற்றும் நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய தமிழ்நாடு அரசின் மான்யம் மற்றும் மாநகராட்சி மூலதன நிதி மூலம் புதிய நிழற்குடைகள் அமைத்தல், பேருந்து நிறுத்தங்களை தரம் உயர்த்துதல், பேருந்து முனையங்களை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு விதமான பணிகள் பேருந்து சாலை துறையின் மூலம் மேற்கொள்ள ஏதுவாக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.304.85 கோடியும், 2025-2026-ஆம் நிதியாண்டிற்கு ரூ.628.35 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மழைநீர் வடிகால்வாய்கள் :**

மாநில பேரிடர் தடுப்பு நிதி, கொசஸ்தலையார் பகுதி – ஆசிய வளர்ச்சி வங்கி நிதி (ADB), கோவளம் பகுதி – ஜெர்மன் வங்கி நிதி (KfW), மற்றும் பல்வேறு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்காக மழைநீர் வடிகால் துறையின் கீழ் 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.1050.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.1032.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை:**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்தல், குப்பை கொட்டும் கிடங்குகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தினை அகழ்ந்தெடுக்கும் பணி மற்றும் இதர பணிகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.87.78 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.352.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பாலங்கள்:**

உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் மூலதன நிதி ஆகியவற்றின் மூலமாக புதிய பாலங்கள் கட்டுமான பணிகள் மற்றும் பாலங்கள் விரிவுபடுத்தும் பணிகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.171.51 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.164.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கட்டடம் :**

பெருநகர சென்னை மாநகராட்சியில், *NUHM* திட்டம், சிங்கார சென்னை - *2.0* திட்டம், வடசென்னை வளர்ச்சி திட்டம் மற்றும் மூலதன நிதி ஆகியவற்றினை கொண்டு நகர்ப்புர சுகாதார மையங்கள், கழிப்பறைகள், வாகன இயக்கூர்தி நிலையங்கள் கட்டுதல், பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், வணிக வளாகங்கள் கட்டுதல், மாட்டுத் தொழுவம் அமைத்தல், அம்மா உணவகங்கள் மேம்படுத்தும் பணி மற்றும் பிற பணிகளுக்காக *2024-2025*-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.*185.05* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2025-2026*-ஆம் நிதியாண்டில் ரூ.*413.63* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்:**

அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணிப்பொறி, அச்சு கருவிகள், டிஜிட்டல் சர்வர்கள் மற்றும் வலைதள அமைப்புகள் உபகரணங்கள் ஆகியவற்றினை கொள்முதல் செய்வதற்காக *2024-2025*-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.*11.59* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2025-2026*-ஆம் நிதியாண்டில் ரூ.*9.00* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மின்சாரம் :**

பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி மூலம் புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைக்கும் பணி, மின்வடங்கள் புதியதாக மாற்றுதல், தகன மேடைகள் மற்றும் பள்ளிகளுக்கு தேவையான மின் ஆக்கிகள் *(Generator)* கொள்முதல் மற்றும் இதர பணிகளுக்காக *2024-2025*-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.*48.32* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2025-2026*-ஆம் நிதியாண்டில் ரூ.*50.40* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் *(ICCC)*:**

புதியதாக வீடியோ திரை அமைத்தல், மாநகரில் கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், வட்டார அலுவலகங்களில் கட்டுப்பாட்டு மையங்களை உருவாக்குதல் போன்ற பணிகளுக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டில் ரூ.*10.00* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இயந்திரப்பொறியியல் :**

சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான கனரக வாகனங்கள் கொள்முதல், அலுவலர்களுக்கான மகிழுந்துகள் *(Car)*, கடற்கரையை தூய்மைப்படுத்தும் இயந்திரம், மரம் வெட்டும் உபகரணங்கள் போன்றவைகளுக்காக *2024-2025*-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.*32.00* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2025-2026*-ஆம் நிதியாண்டில் ரூ.*22.00* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கல்வி:**

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு தேவையான சாய்வு மேஜைகள், ஆய்வக உபகரணங்கள் வாங்குதல், பள்ளிகளுக்கு தேவையான கணிப்பொறி, மின்னணு பலகைகள் கொள்முதல் செய்தல் போன்றவைகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.5.36 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரம்:**

பெருநகர சென்னை மாநகராட்சி பரிசோதனை கூடங்களை நவீனப்படுத்துதல் மற்றும் கொசு ஒழிப்பு பணியை மேற்கொள்ள ஏதுவாக கையில் எடுத்து செல்லத்தக்க புகைபரப்பும் இயந்திரம் மற்றும் வாகனத்தில் பொருத்தக்கூடிய புகைபரப்பும் இயந்திரம் கொள்முதல் செய்ய 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.3.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.4.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மருத்துவ சேவைகள் துறை :**

நவீனப்படுத்தப்பட்ட மகப்பேறு மருத்துவமனைகளுக்கு கூடுதலாக தேவைப்படும் அறுவை சிகிச்சை அரங்க உபகரணங்கள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்ய 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.30.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.40.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறப்பு திட்டங்கள் :**

உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி, சீர்மிகு நகரத் திட்டம், சிட்டீஸ் திட்டம், நிர்பயா திட்டம், சிங்கார சென்னை 2.0 திட்டம், சென்னை மாநகர பங்களிப்பு (உலக வங்கி நிதி) போன்ற பல்வகை நிதி ஆதாரங்களை கொண்டு மூலதனப் பணிகளை மேற்கொள்ள 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.100.72 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.179.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்:**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலங்களில் பூங்காக்கள், பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், விளையாட்டுத்திடல்களை அமைத்தல், உடற்பயிற்சி கூடங்களை அமைத்தல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் போன்ற பணிகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.50.18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.39.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மண்டலங்கள்:**

தமிழ்நாடு அரசின் சிங்கார சென்னை 2.0 திட்டம் மற்றும் நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தமிழக அரசு மான்யத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான பணிகள் மற்றும் இதர மூலதனப் பணிகளுக்காக மண்டலம் 1 முதல் 15 வரை அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள அனைத்து மண்டலங்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.899.89 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.279.01 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்டம் :**

2025-2026ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் :**

2025-2026ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2025-2026-ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்திற்கும், 2024-2025-ஆம் ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டிற்கும், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 17.03.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.03.2025 அன்று தீர்மான எண்.143/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

**“இதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கின்றது”.**

******

**நி.நி.பி.ந.க.எண்.பி1 / 3100-அ / 2024**

**ஆணையர் அவர்களின் 17.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:231/2025** **பொருள் எண்.02**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிதி நிர்வாகப்பிரிவு - தொடக்கக் கல்வி நிதி - வரவு செலவு திட்டம் 2025-2026க்கும், 2024-2025-ஆம் ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி.**

தமிழ்நாடு தொடக்கக் கல்வி சட்டம் 38-ன்படி தொடக்கக் கல்வி நிதியின் 2025-2026-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் மற்றும் 2024-2025-ஆம் ஆண்டிற்கான திருத்த திட்ட மதிப்பீட்டிற்கான அனுமதி கோரப்படுகிறது.

அரசாணை எண்:702, கல்வித்துறை, நாள்: 23.05.1996-ல் சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதவர்களை அரசு ஊழியர்களாக மாற்றம் செய்ய ஆணையிட்டது. அரசாணை எண்: 131, கல்வித்துறை, நாள்:01.02.1991-ல் சென்னை மாநகராட்சி ஆணையர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்கள் மாநகராட்சிப் பள்ளிகளை நடத்தி மற்றும் பராமரித்திட ஆணையிட்டது. சென்னை மாநகர தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் அரசே 01.04.1990 முதல் மாத சம்பளத்தை அரசாணை எண்:347, கல்வித்துறை, நாள்:09.03.1990-ன்படி வழங்கி வருகிறது. அதேபோல், 01.04.1990-க்குப் பின் கல்வித்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் 01.10.2002 முதல் மாத ஓய்வூதியத்தினை அரசு வழங்கி வருகிறது.

அரசு இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதவர்களுக்கு மாத சம்பளம் மற்றும் சில்லறை செலவினங்களை மட்டுமே வழங்கி வருகிறது. மழலைப் பள்ளி ஆசிரியர்களின் சம்பளம், மாநகராட்சி தொடக்கப்பள்ளிகளுக்கு ஆகும் செலவினங்கள், பள்ளி கட்டடங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல், பள்ளிகளின் சுற்றுபுறப் பகுதிகளில் தேவைப்படும் அடிப்படை வசதிகளை உருவாக்கி பராமரித்தல், ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் நிர்வாக செலவுகள் இந்த தொடக்கக் கல்வி நிதியிலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தொடக்கக் கல்வி நிதிக்கான முக்கிய ஆதாரம் சொத்து வரியோடு வசூலிக்கப்படும் தொடக்கக் கல்வி வரியேயாகும். மாநகராட்சி பள்ளிகளுக்கு கட்டடங்களை கட்டுதல், தளவாடங்கள் வாங்குதல், கணினிகள் வாங்குதல் போன்ற பல பணிகளை மாநகராட்சியே மேற்கொண்டு அதற்குரிய செலவுகளை இந்த நிதியிலிருந்து மேற்கொண்டு வருகிறது. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் கல்வி செலவினங்களுக்கும் தொடக்கக் கல்வி வரியினை கொண்டே மேற்கொள்ளப்படுகிறது. மேற்கூறியவற்றை கருத்திற்கொண்டு திருத்த திட்ட மதிப்பீடு 2024-2025 மற்றும் வரவு செலவு திட்டம் 2025-2026 தயாரிக்கப்பட்டுள்ளது.

<u>திருத்த திட்ட மதிப்பீடு 2024-*2025*</u>

*2024-2025*-ஆம் ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டின்படி தொடக்கக் கல்வி நிதிக்கு வரவு ரூ.383.09 கோடி மற்றும் செலவு ரூ.383.08 கோடி ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

<u>வரவு செலவு திட்டம் 2025-*2026*</u>

*2025-2026*-ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி தொடக்கக் கல்வி நிதிக்கு வரவு ரூ.407.28 கோடி மற்றும் செலவு ரூ.407.27 கோடி ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண்: 65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:02.03.1999-ல் அரசு தொடக்கக் கல்வி வரி மூலம் வசூலிக்கப்படும் தொகையை தொடக்கப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் மேம்பாட்டிற்கு செலவழிக்க ஆணையிட்டுள்ளது. அதன்படி பல முக்கிய பணிகளை மாநகராட்சி இப்பள்ளிகளில் நிறைவேற்றி வருகிறது. மாநகராட்சி பள்ளிகளின் கல்வி தரம் உயர்த்தும் நோக்கோடு பல நற்பணிகளையும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகளை மாணவர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு மாநகராட்சி கட்டுதல், ஏனைய மூலதனப் பணிகளும், கல்வி துறை சம்மந்தப்பட்ட பணிகளும் மேற்கொள்ள இந்த நிதியாண்டிலும் நிதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

*2025-2026*-ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்திற்கும், 2024-*2025*-ஆம் ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டிற்கும், நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 13.03.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.03.2025 அன்று தீர்மான எண்.38/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."
>
> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 17.03.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.03.2025 அன்று தீர்மான எண்.144/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கின்றது".**

* * * * * *

**ம.அ.1.ந.க.எண்.பி1 / 05110 / 2024**

**ஆணையர் அவர்களின் 20.02.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 232 / 2025** **பொருள் எண்.01**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1, வார்டு-14, புதுகாலனி 2வது தெருவில் உள்ள அங்கன்வாடி மைய (மைய எண்.81 & 82 புதிய மைய எண்.408 & 416) (பி சதானந்தபுரம்) கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-3, வார்டு-14க்குட்பட்ட புதுகாலனி 2வது தெருவில் உள்ள அங்கன்வாடி மையம் (மைய எண்.81 & 82 புதிய மைய எண்.408 & 416)(பி சதானந்தபுரம்) 1985 ஆம் ஆண்டு 39 வருடங்களுக்கு முன்னால் திருவொற்றியூர் நகராட்சியால் கட்டப்பட்டு செயல்பட்டு வந்த நிலையில் அங்கன்வாடி மையம் சிதிலம் அடைந்த நிலையில் இருப்பதால் தற்போது இக்கட்டிடம் புதுப்பிக்க முடியாத அளவிற்கு சிதிலம் அடைந்த நிலையில் இடிக்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள வார்டு-14க்குட்பட்ட புதுகாலனி 2வது தெருவில் புதிய அங்கன்வாடி மைய (மைய எண்.81 & 82 புதிய மைய எண்.408 & 416) கட்டடம் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்புதிய அங்கன்வாடி மையம் கட்ட, தற்போது உள்ள பழைய அங்கன்வாடி பழுதாகிய நிலையில் இருப்பதாலும், இந்த அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளின் எதிர்கால நலன் கருதியும் புதிய அங்கன்வாடி மையம் மிக அவசியமாகிறது. எனவே, பழைய அங்கன்வாடி கட்டடம் இடிக்கப்பட வேண்டும்.

எனவே, இதனடிப்படையில் பழைய அங்கன்வாடி சிதிலமடைந்து இருப்பதால் இடிப்பதற்கு பரிந்துரைத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-3, வார்டு-14க்குட்பட்ட புது காலனி 2வது தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்தின் (மைய எண்.81 & 82 புதிய மைய எண்.408 & 416) (பி சதானந்தபுரம்) விவரங்கள்**

| வ. எண். | மண்டலம்-1 | வார்டு-14 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-1, பகுதி-3, வார்டு 14க்கு உட்பட்ட புதுகாலனி 2வது தெருவில் உள்ள அங்கன்வாடி மையம், (மைய எண்.81 & 82 புதிய மைய எண்.408 & 416) (பி சதானந்தபுரம்) |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1985 ஆம் ஆண்டு திருவொற்றியூர் நகராட்சியால் கட்டப்பட்டது. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | தரை தளம் 988 சதுரஅடி |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 988 சதுரஅடி |

| | | |
|---|---|---|
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.55,211.33/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | இல்லை |
| 7. | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டப்படவுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | புதுகாலனி 2வது தெருவில் உள்ள பழைய அங்கன்வாடி மையம் (மைய எண்.81 & 82 புதிய மைய எண்.408 & 416) (பி சதானந்தபுரம்) மிகவும் சிதிலமடைந்து உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர், மண்டலம்-1 அவர்கள் |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-3, வார்டு14க்குட்பட்ட புதுகாலனி 2வது தெருவில் உள்ள பழைய அங்கன்வாடி மையம் (மைய எண்.81 & 82 புதிய மைய எண்.408 & 416) (பி சதானந்தபுரம்) கட்டிடம் சேதாரமாய் மிகவும் சிதிலமடைந்து உள்ளதால் சுவர் மற்றும் தரைதளத்தில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது, இடிந்து விழும் அபாயத்தில் உள்ளதால், இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"13.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.27/2025, நாள்.13.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.111 /2025, நாள். 14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3 / 0348 / 2025**

**ஆணையர் அவர்களின் 26.02.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 233 / 2025** **பொருள் எண்.02**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, வார்டு – 36, விவேகானந்தநகர் சுந்தரர் தெருவில் பழுதடைந்துள்ள பெண்கள் உடற்பயிற்சி கூடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ல் 11.12.2024 அன்று நடைபெற்ற வார்டுக்குழு கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர், கோட்டம்-36 அவர்கள் விவேகானந்தநகர் சுந்தரர் தெருவில் பழுதடைந்துள்ள பெண்கள் உடற்பயிற்சி கூடத்தை இடிக்க கோரியுள்ளார். எனவே, பெண்கள் உடற்பயிற்சி கூடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | மண்டலம்-4 | வார்டு-36 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-4, பகுதி-9, வார்டு-36, விவேகானந்தநகர் சுந்தரர் தெருவில் பழுதடைந்துள்ள பெண்கள் உடற்பயிற்சி கூடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 2009 ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | தரை தளம் – 122.36 ச.மீ. |
| 4. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.1,67,394/- |
| 5. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | இல்லை |
| 6. | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இக்கட்டிடத்தை இடித்து விட்டு, புதியதாக அறிவு மையம் (Knowledge Centre) கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 7. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்து பயனற்று, மக்களின் பயன் பாட்டில் இல்லாததால். |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | செயற்பொறியாளர் |
| 9. | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண்.7, நாள்.11.12.2024 |

எனவே, மண்டலம்-4, பகுதி-9, வார்டு-36, விவேகானந்தநகர் சுந்தரர் தெருவில் உள்ள பெண்கள் உடற்பயிற்சி கூடம் பழுதடைந்து பயனற்று, மக்களின் பயன்பாட்டில் இல்லாததால், இக்கட்டிடத்தை இடித்து விட்டு, புதியதாக அறிவு மையம் (Knowledge Centre) கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“13.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.25/2025, நாள்.13.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.109/2025, நாள்.14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3 / 1178 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.02.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:234 / 2025** **பொருள் எண்.03**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, வார்டு – 40, அம்மணி அம்மன் தோட்டம் 2வது தெரு அங்கன்வாடி மைய (மைய எண். 406) கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, பகுதி–10, வார்டு–40, அம்மணி அம்மன் தோட்டம் 2வது தெரு அங்கன்வாடி மைய (மைய எண்.406) கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | மண்டலம்-4 | வார்டு-40 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–4, பகுதி–10, வார்டு–40, அம்மணி அம்மன் தோட்டம் 2வது தெரு அங்கன்வாடி மைய (மைய எண்.406) கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1987ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | தரைத்தளம் – 71.25 ச.மீ. |
| 4. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | 16,753.55/- |
| 5. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் உள்ளது. |
| 6. | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 7. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | மிகவும் பழுதடைந்து, அபாயகரமாக உள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர்–4. |
| 9. | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண்.46, நாள்: 15.07.2024 |

மண்டலம்–4, பகுதி–10, வார்டு–40, அம்மணி அம்மன் தோட்டம் 2வது தெரு அங்கன்வாடி மைய (மைய எண். 406) கட்டிடம் மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளது. மேலும், இக்கட்டிடம் பழுதடைந்துள்ள காரணத்தினால் அங்கு பயிலும் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“13.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.28/2025, நாள்.13.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.112/2025, நாள்.14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.4ந.க.எண்.பி3 / 1218 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.02.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 235 / 2025** **பொருள் எண்.04**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, வார்டு – 42, சேனியம்மன் கோவில் தெருவில் உள்ள பழைய இளநிலை பொறியாளர் அலுவலக கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, பகுதி –10, வார்டு 42, சேனியம்மன் கோவில் தெருவில் உள்ள பழைய இளநிலை பொறியாளர் அலுவலக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பொருள் | விவரம் |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | சேனியம்மன் கோவில் தெருவில் உள்ள பழைய இளநிலை பொறியாளர் அலுவலக கட்டிடம். |
| 2 | இக்கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1960ஆம் ஆண்டு |
| 3 | இக்கட்டிடத்தின் பரப்பளவு | தரைத்தளம் – 79.10 ச.மீ மற்றும் முதல் தளம் - 79.10 ச.மீ |
| 4 | பழைய கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.11,892.84/- |
| 5 | பழைய கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ள தா? | பயன்பாட்டில் உள்ளது. |
| 6 | பழைய கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | மிகவும் பழுதடைந்து, அபாயகரமாக உள்ளது. |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | பழைய கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது | மண்டல அலுவலர் – 4. |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம) நாள்: | எண். 32 , நாள்: 13.09.2024 |

எனவே, மண்டலம்–4, பகுதி–10, வார்டு–42, சேனியம்மன் கோவில் தெருவில் உள்ள பழைய இளநிலை பொறியாளர் அலுவலக கட்டிடம் மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளது. மேலும், இக்கட்டிடம் பழுதடைந்துள்ள காரணத்தினால் அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.108/2025, நாள்.14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3 / 1219 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.02.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 236 / 2025** **பொருள் எண். 05**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, வார்டு – 42, கண்ணன் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி (புத்தா) கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, பகுதி–10, வார்டு–42, கண்ணன் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி (புத்தா) கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | மண்டலம்-4 | வார்டு-42 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-4, பகுதி-10, வார்டு-42, கண்ணன் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி (புத்தா) கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1967ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | நடுநிலைப்பள்ளி கட்டிடம்<br>தரைத்தளம் – 241.80 ச.மீ<br>முதல் தளம் - 241.80 ச.மீ மற்றும்<br>சத்துணவு கூடம் - 10 ச.மீ |
| 4. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | 46,633.52/- |
| 5. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் உள்ளது. |
| 6. | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதிய பள்ளி கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 7. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | மிகவும் பழுதடைந்து, அபாயகரமாக உள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர்–4 |
| 9. | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண். 60, நாள்: 09.01.2025 |

எனவே, மண்டலம்–4, பகுதி–10, வார்டு–42, கண்ணன் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளது. மேலும், இக்கட்டிடம் பழுதடைந்துள்ள காரணத்தினால் அங்கு பயிலும் மாணவ மாணவியருக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, அக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“13.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.26/2025, நாள்.13.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.110/2025, நாள்.14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**த.தொ.நு.மை.ந.க.எண்.சி1 / 596 / 2025**

**ஆணையர் அவர்களின் 12.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:237 / 2025** **பொருள் எண்.06**

**பெருநகர சென்னை மாநகராட்சி - தகவல் தொழில்நுட்ப மையம் - ஒரு வருடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் உள்ள அனைத்து வன் பொருள், மென் பொருள் மற்றும் நுகர் பொருட்களுடன் வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள குறுகிய திறந்த மின்னணு ஒப்பங்கள் கோர நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் வன்பொருள் மற்றும் மென் பொருள் பராமரிப்பு சேவைகள் மற்றும் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் *(FMS/AMC)* ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கான வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் *2025* மார்ச் மாதத்தில் முடிவடைய உள்ளதை முன்னிட்டு, பள்ளிகளின் வன்பொருள் மற்றும் மென்பொருள் பராமரிப்பு சேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு, இவ்வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பராமரிப்பு பணியை மேற்கொள்வதற்காக திறந்த *e-tender* கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, கீழ் வரும் வன்பொருள், மென்பொருள் மற்றும் நுகர்பொருட்களின் வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிக்கான தோராய செலவீனம், 2024 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட விகிதத்தை அடிப்படை விகிதமாக கொண்டு தயாரிக்கப்பட்ட செலவு விவரம் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

| Sl.No | Description | Qty in No's / person (A) | Unit rate for one year in Rs. (Inclusive of GST) | Total Amount for one year in Rs.(Inclusive of GST) |
|---|---|---|---|---|
| 1 | Dual Core / C2D | 401 | 799 | 320399 |
| 2 | Desktop i3 / i5 / i7/ Pentium Gold | 1989 | 2324 | 4622436 |
| 3 | Printers –Single side Laser Jet | 55 | 1728 | 95040 |
| 4 | Printers - Double side Laser Jet | 165 | 1728 | 285120 |
| 5 | Multi-Function Laser Jet | 62 | 1029 | 63798 |
| 6 | Inkjet Printers with head | 169 | 4860 | 821340 |
| 7 | Scanners | 5 | 540 | 2700 |
| 8 | Projector | 103 | 3406 | 350818 |
| 9 | Laptop | 445 | 1836 | 817020 |
| 10 | 600VA UPS | 205 | 324 | 66420 |
| 11 | 1 KVA UPS | 154 | 1800 | 277200 |
| 12 | 2 KVA UPS | 1 | 2500 | 2500 |
| 13 | 5 KVA UPS | 1 | 6000 | 6000 |
| 14 | LAN Cable | 3000 | 44 | 132000 |
| 15 | 7 AH Batteries | 250 | 896 | 224000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | FMS Engineer | 15 | 414546 | 6218190 |
| 17 | Project Leader | 1 | 714278 | 714278 |
| 18 | Non AC Delivery Vehicle | 1 | 440738 | 440738 |
| **Total Amount (Inclusive of GST)** | | | | **1,54,59,997** |

எனவே,

1. ஒரு வருடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் உள்ள அனைத்து வன்பொருள், மென்பொருள் மற்றும் நுகர்பொருட்களுடன் வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பரமாரிப்பு பணிக்கான தோராய மதிப்பு ரூ.1,54,59,997/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி நான்கு இலட்சத்தி ஐம்பத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்தி தொண்ணூற்றி ஏழு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட பணிகளுக்கு திறந்த மின்னனு ஒப்பங்கள் கோரவும்,

3. இதற்கான செலவினங்களை தகவல் தொழில்நுட்ப மையத்தின் பிரிவு எண்.000205 கணக்கு தலைப்பு எண் 220-53-02-02 (e-Gov - Development and customisation – Vendors) மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்படி மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**மஅ.1.நக.எண்.பி1 / 0063-1 / 2025**

**ஆணையர் அவர்களின் 13.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:238 / 2025** **பொருள் எண்.07**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1 பகுதி-1, 2 (ம) 3, கோட்டம்-1,2,3, 5,11,12 மற்றும் 14 வரையிலான பகுதிகளில் சிதிலமடைந்துள்ள சமுதாயகூடம், நகர்புற ஆரம்ப சுகாதார மையம், அங்கன்வாடி பள்ளிக்கட்டிடம் பொதுகழிப்பறை மற்றும் அலுவலக கட்டிடங்கள் - விரிசல்கள் ஏற்பட்டு இடிந்து விழும் அபாயத்தில் உள்ளதால் இக்கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 பகுதி- 1, 2 (ம) 3 கோட்டம்-1 முதல் கோட்டம்-1 2, 3, 5, 11, 12 மற்றும் 14 வரையுள்ள பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாடின்றி சிதிலமடைந்துள்ள சமுதாயகூடம், நகர்புற ஆரம்ப சுகாதார மையம், அங்கன்வாடி, பள்ளிக்கட்டிடம், பொதுகழிப்பறை மற்றும் அலுவலக கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் வட்டார துணை ஆணையர் வடக்கு அவர்களால் 18.02.2025 அன்று இப்பாழடைந்த கட்டிடங்களை இடிப்பதற்கு உரிய மன்ற அனுமதி பெறுமாறு அறிவுறுத்தப்பட்டது.

எனவே, அதனடிப்படையில் பழுதடைந்து மிகவும் சிதிலமடைந்துள்ள இக்கட்டிடங்கள் சுவர் மற்றும் தரைதளங்களில் விரிசல்கள் ஏற்பட்டு இடிந்து விழும் அபாயத்தில் உள்ளது. கீழ்காணும் பட்டியலில் உள்ள கட்டிடங்கள் இடிப்பதற்கு பரிந்துரைத்து சமர்ப்பிக்கப்படுகிறது

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1-பகுதி-1, 2(ம) 3, கோட்டம் 1, 2,3, 5, 11, 12 மற்றும் 14 வரை பழுதடைந்து சிதிலமடைந்துள்ள கட்டிடங்களின் விவரங்கள்**

| S. No. | Zone | Division | Location Of Dilapted Building | Category of Building | Sq.m | Year of construction (Approx) | Book Value ( Approx) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1 | CMS nettukupam main road | School | 292.55 | 2002-2003 | 558606.63 |
| 2 | 1 | 2 | Porkali amman koil street ( Kattukuppam) | COMMUNITY HALL | 118 | 2002-2003 | 286464.99 |
| 3 | 1 | 2 | Sivan padai veethi street | COMMUNITY HALL | 9.29 | 2002-2003 | 17187 |
| 4 | 1 | 2 | Sastri nagar 1st street | Anganwadi | 11.8 | 2004-2005 | 39102.47 |
| 5 | 1 | 3 | Annai sivakami nagar | School | 441.29 | 1983-1984 | 83624.46 |
| 6 | 1 | 3 | Kasi koil kuppam | Anganwadi | 85.2 | 1990-1991 | 41225.08 |
| 7 | 1 | 3 | As nagar 2nd street | Anganwadi | 85.2 | 1990-1991 | 41225.08 |
| 8 | 1 | 3 | As nagar 5th street | Anganwadi | 85.2 | 1990-1991 | 41225.08 |
| 9 | 1 | 3 | As nagar 9th street | Anganwadi | 85.2 | 1990-1991 | 41225.08 |
| 10 | 1 | 3 | As nagar 10th street | Anganwadi | 85.2 | 1990-1991 | 41225.08 |
| 11 | 1 | 5 | Bharathiyar nagar 6th street | Anganwadi | 85.2 | 1990-1991 | 41225.08 |
| 12 | 1 | 5 | Bharath nagar | COMMUNITY HALL | 118 | 2002-2003 | 286464.99 |
| 13 | 1 | 11 | Taluka office Ellaiamman koil Street | Office Building | 984 | 1980-1981 | 300000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | 11 | kaladipet market lane Block No3 | School | 112 | 1980-1981 | 50000 |
| 15 | 1 | 11 | kaladipet market lane Block No3 | PC | 112 | 1980-1981 | 50000 |
| 16 | 1 | 11 | Thiruvalluvar kalaiarangam | COMMUNITY HALL | 297.94 | 1985-1986 | 100000 |
| 17 | 1 | 12 | Wset mada street | Anganwadi | 83.24 | 1985-1986 | 65091.25 |
| 18 | 1 | 12 | North pragaram street -1 No | Anganwadi | 83.24 | 1985-1986 | 65091.25 |
| 19 | 1 | 12 | North pragaram street -1 No | Anganwadi | 83.24 | 1985-1986 | 65091.25 |
| 20 | 1 | 12 | Balakrishna Colny 2nd street | UPHC | 81 | 2004-2005 | 214187.67 |
| 21 | 1 | 14 | A Sadanathapuram | Office Building | 145 | 2000-2001 | 50000 |

எனவே, மேற்காணும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்களை இடிப்பதற்கான புத்தக மதிப்பு, புகைப்படம் மற்றும் விவரங்கள் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது இக்கோட்டங்களில் பழுதடைந்து மிகவும் சிதிலமடைந்துள்ள இக்கட்டிடங்கள் சுவர் மற்றும் தரைதளங்களில் விரிசல்கள் ஏற்பட்டு இடிந்து விழும் அபாயத்தில் உள்ளதால் இக்கட்டிடங்களை இடிப்பதற்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.122/2025, நாள். 14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>ம.அ.3.ந.க.எண்.968/1 /2025</u>**

**<u>ஆணையர் அவர்களின் 13.03.2025 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:239/2025** **பொருள் எண்.08**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம் – 3, பகுதி- 6, 7 மற்றும் 8, வார்டுகள் 23, 24, 25, 27, 30, 31 மற்றும் 32 -பல்வேறு தெருக்களில் உள்ள பழுதடைந்த இடிந்து விழும் நிலையில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பெரியசேக்காடு பெருமாள் கோயில் தெரு, வார்டு-27ல் உள்ள பழுதடைந்த சென்னை துவக்கப்பள்ளி ஆகிய கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – *3*, பகுதி – *6*, *7* மற்றும் *8*, வார்டுகள் *23*, *24*, *25*, *27*, *30*, *31* மற்றும் *32* எல்லைக்குட்பட்ட பல்வேறு தெருக்களில் உள்ள பழுதடைந்த இடிந்து விழும் நிலையில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பெரியசேக்காடு பெருமாள் கோயில் தெரு, வார்டு-27ல் உள்ள பழுதடைந்த சென்னை துவக்கப்பள்ளி ஆகியவற்றை இடித்து விட்டு புதிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தங்கள் மற்றும் தரை தளம், முதல் மற்றும் இரண்டாம் தளங்களுடன் கூடிய புதிய பள்ளிக் கட்டிடம் கட்டி பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என ஆணையர் அவர்களால் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள விவரங்களின்படி *12* இடங்களில் உள்ள *13* எண்ணிக்கையிலான மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பெரியசேக்காடு பெருமாள் கோயில் தெரு, வார்டு-*27*ல் உள்ள பழுதடைந்த சென்னை துவக்கப்பள்ளி ஆகியவற்றை இடிப்பதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 (மாதவரம்)

இடித்து அகற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் பேருந்து நிறுத்தங்களின் விவரம்

| வ. எண் | வார்டு எண் | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 23 | சிறைச்சாலை சிக்னல் பேருந்து நிறுத்தம் (சிறைச்சா | *1993-94* | *22.59* ச.மீ. | *22.59* ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | லை பின்புறம்) | | | | | | கட்டப்பட உள்ளது | | |
| 2 | 23 | காவாங்கரை சிக்னல் பேருந்து நிறுத்தம் (சிறைச்சாலை பின்புறம்) | *1993-94* | *22.59* ச.மீ. | *22.59* ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் கட்டப்பட உள்ளது | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |
| 3 | 24 | ஜி.என்.டி. சர்வீஸ் சாலை, சைக்கிள் ஷாப் | *1993-94* | *22.59* ச.மீ. | *22.59* ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் கட்டப்பட உள்ளது | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |
| 4 | 24 | ஜி.என்.டி. சர்வீஸ் சாலை, புழல் கேம்ப் | *1993-94* | *22.59* ச.மீ. | *22.59* ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் கட்டப்பட உள்ளது | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |
| 5 | 24 | ஜி.என்.டி. சர்வீஸ் சாலை, அம்பேத்கர் சிலை பின்புறம் | *1993-94* | *22.59* ச.மீ. | *22.59* ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் கட்டப்பட உள்ளது | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |
| 6 | 24 | ஜி.என்.டி. சர்வீஸ் சாலை, புழல் சிறைச் சாலை எதிரில் | *1993-94* | *22.59* ச.மீ. | *22.59* ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் கட்டப்பட உள்ளது | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |
| 7 | 25 | மாதவரம் பால் பண்ணை (மாதவரம் பால் | *1993-94* | *22.59* ச.மீ. | *22.59* ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பண்ணை பூங்கா எதிரில்) | | | | | | கட்டப்பட உள்ளது | | |
| 8 | 27 | காமராஜர் சாலை (மாத வரம் பால் பண்ணை மற்றும் காமராஜர் சாலை சந்திப்பு | 1993-94 | 22.59 ச.மீ. | 22.59 ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் கட்டப்பட உள்ளது | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |
| 9 | 27 | காமராஜர் சாலை (எம். எம்.டி.ஏ. 3வது பிரதான சாலை எதிரில்) | 1993-94 | 22.59 ச.மீ. | 22.59 ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் கட்டப்பட உள்ளது | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |
| 10 | 30 | ஜி.என்.டி. சாலை, ரிலையன்ஸ் சூப்பர் மார்க்கெட் அருகில் (2 எண்ணிக்கை) | 1993-94 | 22.59 ச.மீ. | 22.59 ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் கட்டப்பட உள்ளது | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |
| 11 | 31 | ஜி.என்.டி. சர்வீஸ் சாலை (சைக்கிள் ஷாப் அருகில்) | 1993-94 | 27.00 ச.மீ. | 27.00 ச.மீ. | ரூ.15567.39 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் கட்டப்பட உள்ளது | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |
| 12 | 32 | சூரப்பட்டு பிரதான சாலை (காட்சன் பள்ளி அருகில்) | 1993-94 | 22.59 ச.மீ. | 22.59 ச.மீ. | ரூ.13343.48 | ஆம் | புதிய ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தம் கட்டப்பட | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | உள்ளது | | |
| 13 | 27 | பெரிய சேக்காடு பெருமாள் கோயில் தெருவில் உள்ள சென்னை துவக்கப் பள்ளி | 2000 | 158 ச.மீ. | 520.51 ச.மீ. | ரூ.265512.76 | ஆம் | தரை தளம், முதல் மற்றும் இரண்டாம் தளங்களுடன் கூடிய புதிய பள்ளிக் கட்டிடம் கட்டப்பட உள்ளது | பழுதடைந்த நிலையிலும் இட வசதி குறைவாகவும் உள்ளது | ஆணையர் அவர்களின் ஆணை |

எனவே, மண்டலம்-3, பகுதி-6, 7 மற்றும் 8, வார்டுகள் 23, 24, 25, 27, 30, 31 மற்றும் 32 எல்லைக்குட்பட்ட பல்வேறு தெருக்களில் உள்ள பழுதடைந்த இடிந்து விழும் நிலையில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பெரியசேக்காடு பெருமாள் கோயில் தெரு, வார்டு-27ல் உள்ள பழுதடைந்த சென்னை துவக்கப்பள்ளி ஆகியவற்றை இடித்து விட்டு புதிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேருந்து நிறுத்தங்கள் மற்றும் தரை தளம், முதல் மற்றும் இரண்டாம் தளங்களுடன் கூடிய புதிய பள்ளிக் கட்டிடம் கட்ட, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.123/2025, நாள்.14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”**

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.3 ந.க.எண்.1229/1 /2025**

**ஆணையர் அவர்களின் 11.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:240/2025** **பொருள் எண்.09**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 3, வார்டு 25, தட்டான்குளம் சாலையில் அமைந்துள்ள பழைய பழுதடைந்த இடியும் தருவாயில் உள்ள மண்டல அலுவலகம்-3 கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3, பகுதி-7, வார்டு-25-ல் தட்டான் குளம் சாலையில் மண்டல அலுவலகம்-3 இயங்கி வருகிறது. இக்கட்டிடமானது 1050 ச.மீ பரப்பளவு நிலத்தில் 944.65 ச.மீ பரப்பளவில் இரண்டு கட்டிடங்களாக கட்டப்பட்டுள்ளது. மேற்படி, கட்டிடம் மாதவரம் நகராட்சியால் 2000 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டது என கள ஆய்வில் தெரியவருகிறது. இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து இடியும் தருவாயில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடிக்க வேண்டியுள்ளது.

ஆகவே, 2000 ஆம் ஆண்டு அப்போதைய மாதவரம் நகராட்சியால் கட்டப்பட்ட கட்டிடத்தின் விவரம் ஏதும் ஒப்படைக்கப்படாத நிலையில் தற்போது பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பீடு ரூ. 11,11,170.90 மற்றும் ரூ.7,00,624.43 /- ஆகும்.

| வ. எண் | கட்டிடத்தின் விவரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-3, பகுதி-7, வார்டு-25 தட்டான்குளம் சாலையில் அமைந்துள்ள பழைய பழுதடைந்த மற்றும் இடியும் தருவாயில் உள்ள மண்டல அலுவலகம்-3 கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | சுமார் 25 வருடங்களுக்கு முன்பு மாதவரம் ஊராட்சியில் கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 944.65 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 1050 ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ. 11,11,170.90 மற்றும் ரூ.7,00,624.43 /- |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | தற்போது பயன்பாட்டில் உள்ளது |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய மண்டல அலுவலகம் கட்டப்படவுள்ளது. |

| | | |
|---|---|---|
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர்/ம3 மற்றும் செயற்பொறியாளர்/ம-3 |
| 10 | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண் 1698 நாள்:12.02.2025 |

எனவே, மண்டலம் - 3, பகுதி - 7, வார்டு 25, தட்டான்குளம் சாலையில் அமைந்துள்ள பழைய பழுதடைந்த இடியும் தருவாயில் உள்ள மண்டல அலுவலகம்-3 கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 145/2025, நாள்.14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3 / 2335 / 2025**

**ஆணையர் அவர்களின் 13.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:241 / 2025** **பொருள் எண்.10**

**பெருநகரசென்னைமாநகராட்சி-மண்டலம் – 4 -பகுதி – 09,10 (ம) 11, வார்டு – 34 முதல் 48 வரை உள்ள பல்வேறு இடங்களில் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள கட்டிடங்களை இடிப்பதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 4, பகுதி - 09,10 (ம) 11, வார்டு - 34 முதல் 48 வரை உள்ள பல்வேறு இடங்களில் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள கட்டிடங்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு மறுவரையறைக்கு முன்னரே கட்டப்பட்ட கட்டிடங்களாகும், இக்கட்டிடங்களின் விவரங்கள் ஏதும் ஒப்படைக்கப்படாத நிலையில் தற்பொழுது தோராய புத்தக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள கட்டிடங்கள் இடிப்பதற்கு கீழ்கண்டவாறு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| Div | Location of Dilapidated Building | Category of Dilapidated Building | Sqm | Year of Construction (Approx) | Book Value (Approx) |
|---|---|---|---|---|---|
| 34 | Arul Nagar Main Road,Kodungaiyur, Chennai-118 | 16th Ceremony Hall | 582.15 | 1998 | 49,500.00 |
| 35 | Muthamil Nagar 2nd Block 38th Street | Anganwadi | 110.00 | 2001 | 2,65,512.76 |
| 35 | Muthamil Nagar 5th Block 3rd Main Road | Anganwadi | 110.00 | 2001 | 2,65,512.76 |
| 35 | Muthamil Nagar 7th Block 177th Street | Anganwadi | 110.00 | 2001 | 2,65,512.76 |
| 35 | Muthamil Nagar 8th Block 191th Street | Anganwadi | 110.00 | 2001 | 2,65,512.76 |
| 35 | KKD Nagar 4th Block 4th Street | Anganwadi | 120.00 | 2006 | 343757.99 |
| 37 | Mullai Nagar Playfield | Care Taker Room | 4100 | 2003 | 6,18,237.44 |
| 37 | MKB Nagar 14th east cross street | Noon meal kitchen shed (CPS) | 23.46 | 2000 | 22,999.12 |
| 37 | MGR NAGAR 7TH STREET | Anganwadi | 92.50 | 1994 | 77,902.74 |
| 39 | Cheriyan Nagar | Division Office Building | 153.58 | 1995 | 91079.60 |
| 39 | Chertiyannagar main road | Anganwadi | 69.19 | 1992 | 38442.92 |
| 40 | AmmaniAmmal 2nd Street | Anganwadi | 71.25 | 1987 | 16736.00 |
| 40 | AmmaniAmmal 2nd Street | Anganwadi | 71.25 | 1987 | 16736.00 |
| 41 | ANNA NAGAR KARUNATHITHI STREET | GYM | 76.60 | 2004 | 2,05,667.17 |
| 41 | SIVAJI NAGAR MAIN STREET | Anganwadi | 56.75 | 2003 | 1,71,878.99 |
| 41 | NEHRU NAGAR MAIN STREET | SI Office | 112 | 2003 | 3,43,757.98 |
| 41 | NEHRU NAGAR 14TH STREET | Anganwadi | 76.60 | 2004 | 2,05,667.17 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 41 | NEHRU NAGAR 14TH STREET | Anganwadi | 76.60 | 2004 | 2,05,667.17 |
| 41 | THOPPAI VINAYAGAR KOIL STREET | Anganwadi | 59.38 | 2004 | 1,76,286.15 |
| 41 | M.G.R NAGAR 4TH STREET | Anganwadi | 56.45 | 2004 | 1,76,286.15 |
| 41 | DEVIKARUMARIAMMAN NAGAR 5TH STREET | Anganwadi | 88.50 | 2004 | 2,20,357.68 |
| 41 | DEVIKARUMARIAMMAN NAGAR 5TH STREET | Anganwadi | 53.32 | 2004 | 1,76,286.15 |
| 41 | KAMARAJAR STREET IN EZHIL NAGAR | Anganwadi | 46.92 | 2003 | 1,71,878.99 |
| 43 | No:59, S.N chetty Street,Ch-13 | Anganwadi | 49.00 | 1982 | 80,420.95 |
**பெருநகர சென்னை மாநகராட்சி - நகரமைப்பு துறை -மண்டலம்-13, வார்டு-170 - T.S.No.4/95, Block No.16 அடையாறு கிராமம் - முருகப்பா சாலையும், ரஞ்சித் சாலையும் நேர்கோட்டில் அமைய திருமதி. Mallika Srinivasan அவர்களிடமிருந்து 7.036 சதுர மீட்டர் நிலத்தினை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக்கொள்ளவும், அதற்கு ஈடாக 5.967சதுர மீட்டர் நிலத்தினை நில பரிமாற்றம் செய்வதற்கும் அரசின் அனுமதி கோருவதற்கு - மன்றத்தின் அனுமதி**

திருமதி.Mallika Srinivasan அவர்கள் அளித்துள்ள கடிதத்தில்,

> "We are desirous of realigning the Western boundary of plot T.S.No.4/95 abutting Ranjith Road to achieve a better layout within the plot. In doing so, we would take to handover to Greater Chennai Corporation (GCC), land measuring 7.03 sq.m (75.73 sq.ft) In return, we would request GCC to allot to us 5.96 sq.m (64.2 sq.ft). Their will, therefore, be a net increase in the area handed over to GCC from our side. Needless to mention, we would like to convey that there would also be no disturbance to the footpath, stormwater drain or utilities above or below the road, in this realignment"

என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிவிப்பது யாதெனில், மண்டலம்-13, வார்டு-170ல் அடையாறு கிராமத்தில் அமைந்துள்ள T.S.No.4/95, Block No.16, நிலமானது 1260 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ளது. இந்நிலத்திற்கு வடக்கு பக்கத்தில் முருகப்பா சாலையும், மேற்கு பக்கத்தில் ரஞ்சித் சாலையும் அமைந்துள்ளது. ரஞ்சித் சாலையானது மனையினை ஒட்டி அமையும் பொழுது ஒரு நேர்கோட்டில் அமையாமல் வடமேற்கு பக்கத்தில் இருந்து தென்மேற்கு பகுதிக்கு வளைந்து அமைந்துள்ளது.

இந்த, தென் மேற்கு பக்கத்தில் உள்ள மனுதாரரின் நிலத்தில் 7.036 சதுர மீட்டர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டு அதற்கு ஈடாக வடமேற்கு பக்கத்தில் 5.967சதுர மீட்டர் சாலை நிலத்தினை மனுதாரருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி வழங்கினால் சாலையும் மற்றும் மனுதாரரின் மனையும் நேர் கோட்டில் அமையும்.

இவ்வாறு நில பரிமாற்றம் மேற்கொள்வதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சாலை நிலத்தில் இழப்பு ஏதுவும் ஏற்படவில்லை. மேலும், சாலையும் ஒரே நேராக அமைவதற்கு வாய்ப்புள்ளது.

இவ்வாறு நில பரிமாற்றம் செய்வதற்கு அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் இதற்கு மன்றத்தின் பரிந்துரையும் பெற வேண்டும்.

எனவே, திருமதி Mallika Srinivasan அவர்களின் கோரிக்கையான நில பரிமாற்றம் தொடர்பாக அரசிடம் பரிந்துரையினை மன்றத்தின் அனுமதி பெற்று சமர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-13, வார்டு-170ல் வடக்கு பக்கத்தில் உள்ள முருகப்பா சாலையும், மேற்கு பக்கத்தில் உள்ள ரஞ்சித் சாலையும் நேர்கோட்டில் அமையும் வகையில் அடையாறு கிராமத்தில் T.S.No.4/95, Block No.16ல் அமைந்துள்ள நிலத்தில் 7.036 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தினை திருமதி.Mallika Srinivasan அவர்களிடமிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கும்,
2. மண்டலம்-13ல் அடையாறு கிராமத்தில் அமைந்துள்ள T.S.No.5/1, Block No.16ல் ரஞ்சித் சாலையின் ஒரு பகுதியான 5.967சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தினை திருமதி.Mallika Srinivasan அவர்களுக்கு நில பரிமாற்றம் செய்வதற்கும்,
3. இதற்கான முன்மொழிவுகளை மன்றத்தின் பரிந்துரை பெற்று அரசுக்கு அனுப்பி வைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “18.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.34/2025, நாள்.18.03.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.துநக.எண்.எல்.இ1 / 273 / 2025**

**ஆணையர் அவர்களின் 06.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:292 / 2025** **பொருள் எண்.61**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - திரு. S. கார்த்திக், தலைமை செயல்பாட்டு அலுவலர் Carrom Ball Event & Marketing Pvt Ltd அவர்கள் மண்டலம்-10, கோட்டம்-134, ராமகிருஷ்ணாபுரம் 1-வது தெருவிற்கு "ரவிச்சந்திரன் அஷ்வின் சாலை" என பெயர் சூட்ட கோரியுள்ளது -- மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது - மன்றத்தின் அனுமதி வேண்டுவது.**

திரு. S. கார்த்திக், தலைமை செயல்பாட்டு அலுவலர், *Carrom Ball Event & Marketing Pvt Ltd* அவர்களின் மனுவில் திரு.ரவிச்சந்திரன் அஸ்வின் கிரிக்கெட் விளையாட்டில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, நம் நாட்டிற்காகவும் நமது தமிழ்நாடு மாநிலத்திற்காகவும் பல விருதுகளை வென்றுள்ளார் என்றும், அஸ்வின் உலகின் சிறந்த ஆல்ரவுண்டர்களில் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டவர் என்றும், அஸ்வின் நமது மாநிலமான தமிழகத்தை சேர்ந்தவர் என்பது பெருமைக்குரிய விஷயமாகும். நமது தமிழ்நாட்டிற்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவைகளை அங்கீகரிக்கும் வகையில், கீழ்கண்ட இரண்டு தெருக்களில் ஏதேனும் ஒரு சாலையை தேர்வு செய்து திரு.ரவிச்சந்திரன் அஸ்வின் சாலை என பெயர் மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

1. ஆர்யா கவுடா சாலை
2. ராமகிருஷ்ணாபுரம் 1வது தெரு

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ன் வழிமுறைகளை பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, கோட்டம்-134ல் உள்ள ராமகிருஷ்ணாபுரம் 1-வது தெருவிற்கு "ரவிச்சந்திரன் அஷ்வின் சாலை" என பெயர் மாற்றம் செய்வதற்கு மாமன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றிட, அரசின் அனுமதி வேண்டி அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு இவ்வலுவலக 18.02.2025 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, கோட்டம்-134ல் உள்ள ராமகிருஷ்ணாபுரம் 1-வது தெருவிற்கு "ரவிச்சந்திரன் அஷ்வின் சாலை" என பெயர் மாற்றம் செய்தல் குறித்த தீர்மானத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் முன் ஒப்புதலுக்கு வைத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-10, கோட்டம்-134ல் உள்ள ராமகிருஷ்ணாபுரம் 1-வது தெருவிற்கு "ரவிச்சந்திரன் அஷ்வின் சாலை" என பெயர் மாற்றம் செய்வதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> "17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 108/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/268-3/2025**

**ஆணையர் அவர்களின் 13.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:293/2025** **பொருள் எண்.62**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - முதல்வர் மருந்தகம் - 14.01.2025 முதல் தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்கள் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் மருந்தாளுநர்கள் மூலம் அரசின் மானிய வசதி மற்றும் கடன் உதவியோடு தொடங்குதல் - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டடங்களில் முதல்வர் மருந்தகங்கள் அமைத்திட அனுமதி வழங்கக் கோரியது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 15.08.2024 சுதந்திர தின சிறப்புரையில் அறிவித்த பல்வேறு அறிவிப்புகளில் ஒன்றான 1000 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, சென்னை மண்டலத்தில் சிறப்பான முறையில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, முதல்வர் மருந்தகங்கள் அமைப்பதற்கான இடங்கள் மற்றும் மருந்தாளுநர்களை தேர்வு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களால் சென்னை மண்டலத்தில் 100 முதல்வர் மருந்தகங்கள் அமைத்திட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கான இடங்கள் தற்போது தெரிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் அறிவிப்பினை விரைந்து செயல்படுத்திடும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டடங்களில், பின்வரும் முகவரியில் அமைந்துள்ள இடங்களில், முதல்வர் மருந்தகங்கள் அமைத்திட அனுமதி வழங்கப்படலாம்.

துணை ஆட்சியர் (நிமஉது) / மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம் அவர்களின் *05.03.2025* நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மத்திய வட்டார அலுவலகம், மண்டலம்-6 முதல் 10 வரைக்குட்பட்ட வார்டுகளில் முதல்வர் மருந்தகம் தொடங்க இடங்கள் தேர்வு செய்து தரும்படி நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலர் கேட்டுக்கொண்டதன் பேரில் உதவி வருவாய் அலுவலர் மற்றும் மண்டலங்களிலிருந்து முதல்வர் மருந்தகம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | கட்டிடங்களின் விவரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | கட்டிடங்களின் பயன்பாடு | முகவரி | தளம் | சதுர அடி |
| 1 | 6 | 67 | நியாயவிலைக்கடை அருகில் | பல்லவன் சாலை, கொளத்தூர் | GF | 110 |
| 2 | 6 | 69 | கோட்ட அலுவலக கட்டிடம் | ஜகன்நாதன் தெரு (கோட்ட அலுவலகம் அருகில்) | GF | 110 |
| 3 | 6 | 72 | உபயோகப்படுத்தாத | பிரைட்டன்ஸ் ரோடு, | GF | 258 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நீரேற்று நிலைய அறை *[Dilapidated Condition]* | கன்னிகாபுரம் | | |
| 4 | 6 | 78 | தாணா தெரு அம்மா உணவகம் | தாணா தெரு, புரசைவாக்கம் | GF | 110 |
| 5 | 7 | 80 | பயன்படுத்தாத உடற்பயிற்சி கூடம் | புதூர் மெயின் ரோடு | GF | 280 |
| 6 | 7 | 85 | *Health and Welness Centre* | காமராஜபுரம் | GF | 110 |
| 7 | 7 | 86 | *Health and Welness Centre* | *TNSCB* அருகில், அயனம்பாக்கம் மெயின் ரோடு | GF | 100 |
| 8 | 7 | 87 | வணிக வளாகம் | பாடி *MTH* ரோடு | GF | 100 |
| 9 | 7 | 89 | பயன்படுத்தப்படாத *Shed* | இளங்கோ நகர் | GF | 200 |
| 10 | 7 | 89 | பூங்கா மேற்பார்வையாளர் அலுவலகம் | பஜார் சாலை, திருமங்கலம் மெயின் ரோடு சந்திப்பு | GF | 180 |
| 11 | 7 | 91 | சமுதாய நலக்கூடம் *(Vacand Land)* | முகப்பேர் 3வது வடக்கு மெயின் ரோடு, முகப்பேர் (வடக்கு) | GF | 110 |
| 12 | 7 | 92 | கோட்ட அலுவலகம் எதிரில் | பட்டினத்தார் சாலை | GF | 150 |
| 13 | 7 | 93 | கோட்ட அலுவலகம் | பிள்ளையார் கோயில் தெரு, பாடிகுப்பம் | GF | 110 |
| 14 | 8 | 96 | கோட்ட அலுவலகம் | ஆபிசர்ஸ் காலனி, அயனாவரம், சென்னை-*23* | GF | 120 |
| 15 | 8 | 97 | கோட்ட அலுவலகம் | சோலை தெரு, அயனாவரம், செ-*23* | GF | 120 |
| 16 | 8 | 98 | பயன்படுத்தப்படாத மாநகராட்சி கட்டிடம் | புது நகர், 4வது தெரு, அயனாவரம், செ-*23* | GF | 200 |
| 17 | 8 | 99 | வணிக வளாகம் *(GCC)* | *EVR* நெடுஞ்சாலை, புரசைவாக்கம், செ-*84* | GF | 300 |
| 18 | 8 | 101 | சாலையோர மாநகராட்சி கட்டிடம் | மகாத்மா காந்தி ரோடு, கிழக்கு அண்ணா நகர் செ-*102* | GF | 437 |
| 19 | 9 | 109 | *UPHC* | செர்புதின் தெரு | GF | 100 |
| 20 | 9 | 110 | பயன்படுத்தப்படாத மாநகராட்சி கட்டிடம் | அப்பா சாமி தெரு | GF | 100 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | 9 | 111 | *UPHC* | மாடல் பள்ளி சாலை | GF | 100 |
| 22 | 9 | 112 | *wellness centre building* | புலியூர் 1வது மெயின் ரோடு | GF | 100 |
| 23 | 9 | 113 | *UPHC* | தர்மாபுரம் | GF | 100 |
| 24 | 9 | 114 | கோட்ட அலுவலகம் | அருணாசலம் தெரு | GF | 100 |
| 25 | 9 | 115 | கோட்ட அலுவலகம் | *West Cott* ரோடு | GF | 100 |
| 26 | 9 | 116 | *UPHC* | டாக்டர் பெசன்ட் ரோடு | GF | 100 |
| 27 | 9 | 117 | *UPHC* | விஜயராகவா ரோடு | GF | 100 |
| 28 | 9 | 118 | *UPHC* | அம்மையப்பன் சந்து | GF | 100 |
| 29 | 9 | 119 | கோட்ட அலுவலகம் | *CIT* காலனி, 6வது குறுக்கு தெரு | GF | 100 |
| 30 | 9 | 120 | *UPHC* | முத்தையா தெரு | GF | 100 |
| 31 | 9 | 121 | *wellness centre building* | அவ்வை சண்முகம் சாலை | GF | 100 |
| 32 | 9 | 122 | *UPHC* | *KB Dasan* ரோடு | GF | 100 |
| 33 | 9 | 123 | *UPHC* | *CP* ராமசாமி ரோடு | GF | 100 |
| 34 | 9 | 125 | பயன்படுத்தப்படாத கட்டிடம் | பேராசிரியர் சன்ஜீவ் தெரு | GF | 100 |
| 35 | 9 | 126 | பயன்படுத்தப்படாத கட்டிடம் | சாந்தோம் நெடுஞ்சாலை | GF | 100 |
| 36 | 10 | 128 | கோட்ட அலுவலகம் | எண்.77, காமராஜ் சாலை, விருகம்பாக்கம் | GF | 100 |
| 37 | 10 | 129 | கோட்ட அலுவலகம் | எண்.18, அருணாசலம் ரோடு, சாலிகிராமம் | GF | 100 |
| 38 | 10 | 131 | கோட்ட அலுவலகம் | எண்.23/8, ராம் காலனி, மேற்கு மாம்பலம், சென்னை-33 | GF | 110 |
| 39 | 10 | 132 | *Mini Clinic* | ரங்கராஜபுரம் மெயின் ரோடு | GF | 110 |
| 40 | 10 | 133 | *Mini Clinic* | துரைசாமி சுரங்கப்பாதை அருகில் | GF | 110 |
| 41 | 10 | 140 | கோட்ட அலுவலகம் | புதிய எண்.136, பழைய எண்.34, ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை, செ-15 | GF | 110 |
| 42 | 10 | 141 | அம்மா குடிநீர் | நியூ போக் ரோடு, கண்ணம்மாபேட்டை | GF | 110 |
| 43 | 10 | 142 | நியாய விலைக்கடை | வி.வி.கோயில் தெரு | GF | 110 |

THE TAMIL NADU URBAN LOCAL BODIES RULES, 2023, [G.O. Ms. No. 45, Municipal Administration and Water Supply (Election) Department, 12th April 2023-விதிகளின் படி,

**PART II**

**LICENSING OF IMMOVABLE PROPERTY OF MUNICIPALITY**

**316. Licencing or leasing of Immovable Properties.–** (1) The Municipal Council may grant licence or lease to any person for use and occupation of any land or building belonging to the municipality for a period of three years.

(2) After the completion of the period prescribed in sub-rule (1), no extension or renewal of the same lease shall be permitted and any applications for the same shall be considered afresh in accordance with provisions of the Act and Rules.

(3) The licence fee or lease rent for lands let out for public purpose or for use by Central Government or State Government Departments or Public Sector Undertakings shall be based on the guideline value of the land as per the following table:

**THE TABLE.**

| Usage | Lease Rate as percentage of Guideline Value |
|---|---|
| **(1)** | **(2)** |
| Charitable and Religious | 0.5% |
| Private schools | 3% |
| Aided schools where percentage of students in aided section is less than 50% of total school strength | 1.5% |
| Aided school, where the percentage of students in the aided section is more than 50% of total school strength. (In this category, aided school alone should be functioning in the premises leased and no other educational or related activities should be undertaken) | 0.5% |
| Lease to Central Government or State Government departments or Public Sector Undertakings other than Metro Rail Organisations | 3% |
| Metro Rail Organisations | 1% |

(4) The licence fee or lease rent for buildings let out for public purpose shall be based on the Annual Rental Value derived for the purpose of calculation of Property Tax.

(5) Licence or lease for land and buildings let out for commercial or residential purpose including shopping complexes or public markets belonging to the municipality shall be effected by public auction-cum-tender which shall be conducted by the Commissioner or by a person duly authorized in this behalf.

(6) The auction floor price shall be fixed as below:–

| Category | Auction Floor Price |
|---|---|
| **(1)** | **(2)** |
| Land - Commercial | 3% of Guideline Value of Land |
| Land - Residential | 1.5% of Guideline Value of Land |
| Land - Agricultural | 0.5% of Guideline Value of Land |
| Building - Commercial other than shopping complexes or public markets | Commercial Annual Rental Value as decided for Property Tax assessments |
| Building - Shopping complexes or public markets | Based on the actual rental value prevailing in the locality with such variations based on location of the shop in the market, demand, current vacancy levels, infrastructure facilities available, as may be decided by the council. |
| Building - Residential | Residential Annual Rental Value as decided for Property Tax assessments |

மேற்கண்ட *ULB* விதிகளின்படி, கீழ்கண்ட இடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | கட்டிடங்களின் விவரம் | | | மாத வாடகை ரூ. | *GST 18%* | 12 மாத வாடகை முன்பணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | முகவரி | தளம் | சதுர அடி | | | |
| 1 | 6 | 67 | பல்லவன் சாலை, கொளத்தூர் | GF | 110 | 825 | 148 | 9900 |
| 2 | 6 | 69 | ஜகன்நாதன் தெரு (கோட்ட அலுவலகம் அருகில்) | GF | 110 | 825 | 148 | 9900 |
| 3 | 6 | 72 | பிரைட்டன்ஸ் ரோடு, கன்னிகாபுரம் | GF | 258 | 1935 | 348 | 23220 |
| 4 | 6 | 78 | தாணா தெரு, புரசைவாக்கம் | GF | 110 | 825 | 148 | 9900 |
| 5 | 7 | 80 | புதூர் மெயின் ரோடு | GF | 200 | 1500 | 270 | 18000 |
| 6 | 7 | 85 | காமராஜபுரம் | GF | 110 | 746 | 134 | 8950 |
| 7 | 7 | 86 | *TNSCB* அருகில், அயனம்பாக்கம் மெயின் ரோடு | GF | 100 | 750 | 136 | 9000 |
| 8 | 7 | 87 | பாடி *MTH* ரோடு | GF | 100 | 899 | 162 | 10788 |
| 9 | 7 | 89 | இளங்கோ நகர் | GF | 200 | 1500 | 270 | 18000 |
| 10 | 7 | 89 | பஜார் சாலை, திருமங்கலம் மெயின் ரோடு சந்திப்பு | GF | 180 | 1618 | 292 | 19418 |
| 11 | 7 | 91 | முகப்பேர் 3வது வடக்கு மெயின் ரோடு, முகப்பேர் (வ) | GF | 110 | 989 | 178 | 11867 |
| 12 | 7 | 92 | பட்டினத்தார் சாலை | GF | 150 | 1125 | 202 | 13500 |
| 13 | 7 | 93 | பிள்ளையார் கோயில் தெரு, பாடிகுப்பம் | GF | 110 | 825 | 148 | 9900 |
| 14 | 8 | 96 | ஆபிசர்ஸ் காலனி, அயனாவரம், சென்னை-*23* | GF | 120 | 900 | 162 | 10800 |
| 15 | 8 | 97 | சோலை தெரு, அயனாவரம், செ-*23* | GF | 120 | 900 | 162 | 10800 |
| 16 | 8 | 98 | புது நகர், 4வது தெரு, அயனாவரம், செ-*23* | GF | 250 | 1875 | 338 | 22500 |
| 17 | 8 | 99 | *EVR* நெடுஞ்சாலை, புரசைவாக்கம், செ-*84* | GF | 300 | 4050 | 730 | 48600 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18 | 8 | 101 | மகாத்மா காந்தி ரோடு, கிழக்கு அண்ணா நகர் செ-102 | GF | 437 | 6555 | 1180 | 78660 |
| 19 | 9 | 109 | செர்புதின் தெரு | GF | 100 | 750 | 136 | 9000 |
| 20 | 9 | 110 | அப்பா சாமி தெரு | GF | 100 | 750 | 136 | 9000 |
| 21 | 9 | 111 | மாடல் பள்ளி சாலை | GF | 100 | 750 | 136 | 9000 |
| 22 | 9 | 112 | புலியூர் 1வது மெயின் ரோடு | GF | 100 | 750 | 136 | 9000 |
| 23 | 9 | 113 | தர்மாபுரம் | GF | 100 | 1125 | 202 | 13500 |
| 24 | 9 | 114 | அருணாசலம் தெரு | GF | 100 | 750 | 136 | 9000 |
| 25 | 9 | 115 | West Cott ரோடு | GF | 100 | 750 | 136 | 9000 |
| 26 | 9 | 116 | டாக்டர் பெசன்ட் ரோடு | GF | 100 | 750 | 136 | 9000 |
| 27 | 9 | 117 | விஜயராகவா ரோடு | GF | 100 | 1125 | 202 | 13500 |
| 28 | 9 | 118 | அம்மையப்பன் சந்து | GF | 100 | 750 | 136 | 9000 |
| 29 | 9 | 119 | CIT காலனி, 6வது குறுக்கு தெரு | GF | 100 | 1200 | 216 | 14400 |
| 30 | 9 | 120 | முத்தையா தெரு | GF | 100 | 750 | 136 | 9000 |
| 31 | 9 | 121 | அவ்வை சண்முகம் சாலை | GF | 100 | 900 | 162 | 10800 |
| 32 | 9 | 122 | KB Dasan ரோடு | GF | 100 | 900 | 162 | 10800 |
| 33 | 9 | 123 | CP ராமசாமி ரோடு | GF | 100 | 1050 | 190 | 12600 |
| 34 | 9 | 125 | பேராசிரியர் சன்ஜீவ் தெரு | GF | 100 | 900 | 162 | 10800 |
| 35 | 9 | 126 | சாந்தோம் நெடுஞ்சாலை | GF | 100 | 1050 | 190 | 12600 |
| 36 | 10 | 128 | எண்.77, காமாராஜ் சாலை, விருகம்பாக்கம் | GF | 100 | 750 | 136 | 9000 |
| 37 | 10 | 129 | எண்.18, அருணாசலம் ரோடு, சாலிகிராமம் | GF | 100 | 750 | 136 | 9000 |
| 38 | 10 | 131 | எண்.23/8, ராம் காலனி, மேற்கு மாம்பலம், செ-33 | GF | 110 | 825 | 148 | 9900 |
| 39 | 10 | 132 | ரங்கராஜபுரம் மெயின் ரோடு | GF | 110 | 825 | 148 | 9900 |
| 40 | 10 | 133 | துரைசாமி சுரங்கப்பாதை அருகில் | GF | 110 | 1238 | 224 | 14850 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 41 | 10 | 140 | புதிய எண்.136, பழைய எண்.34, ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை, செ 15 | GF | 110 | 825 | 148 | 9900 |
| 42 | 10 | 141 | நியூ போக் ரோடு, கண்ணம்மாபேட்டை | GF | 110 | 1238 | 224 | 14850 |
| 43 | 10 | 142 | வி.வி.கோயில் தெரு | GF | 110 | 825 | 148 | 9900 |

ஆணையர் அவர்களின் *07.03.2025* நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-6 முதல் 10 வரையிலான மேற்கண்ட இடங்களில் ***முதல்வர் மருந்தகம் அமைக்க*** கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் முதல்வர் மருந்தக திட்டத்திற்காக மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிட்., இணைப்பதிவாளர்/செயலாட்சியர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15 சதவீதம் உயர்த்தப்படும்,
2. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும்,
3. கட்டிடத்திற்கான மின் பயனீட்டு கட்டணத்தினை கூட்டுறவு நிறுவனமே செலுத்த வேண்டும்,

எனவே, மேற்படி கட்டிடங்களை நிபந்தனைகளின் அடிப்படையில் முதல்வர் மருந்தக திட்டத்திற்காக மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டமைக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 109/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6 / 268-3A / 2025**

**ஆணையர் அவர்களின் 13.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:294 / 2025** **பொருள் எண்.63**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - முதல்வர் மருந்தகம் - 14.01.2025 முதல் தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்கள் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் மருந்தாளுநர்கள் மூலம் அரசின் மானிய வசதி மற்றும் கடன் உதவியோடு தொடங்குதல் - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் முதல்வர் மருந்தகங்கள் அமைத்திட அனுமதி வழங்கக் கோரியது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 15.08.2024 சுதந்திர தின சிறப்புரையில் அறிவித்த பல்வேறு அறிவிப்புகளில் ஒன்றான 1000 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, சென்னை மண்டலத்தில் சிறப்பான முறையில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, முதல்வர் மருந்தகங்கள் அமைப்பதற்கான இடங்கள் மற்றும் மருந்தாளுநர்களை தேர்வு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களால் சென்னை மண்டலத்தில் 100 முதல்வர் மருந்தகங்கள் அமைத்திட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கான இடங்கள் தற்போது தெரிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் அறிவிப்பினை விரைந்து செயல்படுத்திடும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பின்வரும் முகவரியில் அமைந்துள்ள இடங்களில், முதல்வர் மருந்தகங்கள் அமைத்திட அனுமதி வழங்கப்படலாம்.

துணை ஆட்சியர் (நிமஉது) / மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம் அவர்களின் *05.03.2025* நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மத்திய வட்டார அலுவலகம், மண்டலம்-6 முதல் 10 வரைக்குட்பட்ட வார்டுகளில் முதல்வர் மருந்தகம் தொடங்க இடங்கள் தேர்வு செய்து தரும்படி நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலர் கேட்டுக்கொண்டதன் பேரில் உதவி வருவாய் அலுவலர் மற்றும் மண்டலங்களிலிருந்து முதல்வர் மருந்தகம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | இடத்தின் முகவரி | பரப்பளவு சதுர அடி | உரிமையாளர் |
|---|---|---|---|---|---|
| 1 | 6 | 64 | ஜம்புலிங்கம் மெயின் ரோடு | 500 | GCC |
| 2 | 6 | 65 | அஞ்சுகம் நகர், 4வது தெரு பூங்கா, ஆவின் பால் நிலையம் அருகில் | 250 | GCC |
| 3 | 6 | 66 | *SPR* கோயில் மெயின் ரோடு (காமாராஜ் திருமண மண்டபம் அருகில்) | 110 | GCC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 6 | 68 | ஜவகர் 1வது வட்ட சாலை (ஆவின் நிலையம் அருகில்) | 110 | GCC |
| 5 | 6 | 70 | ரமணா நகர், ஜவகர் தெரு (காவல் நிலையம் அருகில்) | 200 | GCC |
| 6 | 6 | 71 | பாரதி தெரு(Health & Wellness) | 120 | GCC |
| 7 | 6 | 73 | புதிய பேரன்ஸ் சாலை கோட்ட அலுவலகம் | 110 | GCC |
| 8 | 6 | 74 | புதிய வாழைமா நகர் 9வது தெரு | 110 | GCC |
| 9 | 6 | 75 | பராக்கா ரோடு, கோட்ட அலுவலகம் பின்புறம் | 110 | GCC |
| 10 | 6 | 76 | வெங்கடம்மாள் சமாதி தெரு (CHSS அருகில்) | 250 | GCC |
| 11 | 6 | 77 | PH ரோடு, TB மருத்துவமனை வளாகம் உள்ளே | 226 | GCC |
| 12 | 7 | 79 | ஒரகடம் UPHC | 110 | GCC |
| 13 | 7 | 83 | நியாயவிலைக் கடை, தாதன்குப்பம் | 110 | GCC |
| 14 | 8 | 94 | சிட்கோ நகர், 51வது தெரு (அங்கன்வாடி வளாகம் உள்ளே), வில்லிவாக்கம், சென்னை-49 | 110 | GCC |
| 15 | 8 | 95 | மண்ணடி தெரு, வில்லிவாக்கம், சென்னை-49 | 150 | GCC |
| 16 | 8 | 100 | KVN புரம் 2வது தெரு (அங்கன்வாடி முன்புறம்), கீழ்ப்பாக்கம், சென்னை-10 | 150 | GCC |
| 17 | 8 | 102 | கிரசன்ட் சாலை, செனாய் நகர், சென்னை-30 | 110 | GCC |
| 18 | 8 | 106 | விநாயகபுரம் மெயின் ரோடு, அரும்பாக்கம், சென்னை-106 | 150 | GCC |
| 19 | 8 | 108 | மங்களபுரம் 4வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை-31 | 120 | GCC |
| 20 | 9 | 124 | முண்டகன்னியம்மன் கோயில் தெரு | 100 | GCC |
| 21 | 10 | 136 | கோட்டம்-136, அலுவலக எண்.33, பொப்பிலி ராஜா சாலை, கே.கே.நகர், சென்னை-78 | 110 | GCC |
| 22 | 10 | 139 | கோட்ட அலுவலகம், R.R. காலனி 2வது தெரு | 110 | GCC |

THE TAMIL NADU URBAN LOCAL BODIES RULES, 2023, [G.O. Ms. No. 45, Municipal Administration and Water Supply (Election) Department, 12th April 2023-விதிகளின் படி,

**PART II**

**LICENSING OF IMMOVABLE PROPERTY OF MUNICIPALITY**

**316. Licencing or leasing of Immovable Properties.–** (1) The Municipal Council may grant licence or lease to any person for use and occupation of any land or building belonging to the municipality for a period of three years.

(2) After the completion of the period prescribed in sub-rule (1), no extension or renewal of the same lease shall be permitted and any applications for the same shall be considered afresh in accordance with provisions of the Act and Rules.

(3) The licence fee or lease rent for lands let out for public purpose or for use by Central Government or State Government Departments or Public Sector Undertakings shall be based on the guideline value of the land as per the following table:

**THE TABLE.**

| **Usage** | **Lease Rate as percentage of Guideline Value** |
|---|---|
| **(1)** | **(2)** |
| Charitable and Religious | 0.5% |
| Private schools | 3% |
| Aided schools where percentage of students in aided section is less than 50% of total school strength | 1.5% |
| Aided school, where the percentage of students in the aided section is more than 50% of total school strength. (In this category, aided school alone should be functioning in the premises leased and no other educational or related activities should be undertaken) | 0.5% |
| Lease to Central Government or State Government departments or Public Sector Undertakings other than Metro Rail Organisations | 3% |
| Metro Rail Organisations | 1% |

(4) The licence fee or lease rent for buildings let out for public purpose shall be based on the Annual Rental Value derived for the purpose of calculation of Property Tax.

(5) Licence or lease for land and buildings let out for commercial or residential purpose including shopping complexes or public markets belonging to the municipality shall be effected by public auction-cum-tender which shall be conducted by the Commissioner or by a person duly authorized in this behalf.

(6) The auction floor price shall be fixed as below:–

| **Category** | **Auction Floor Price** |
|---|---|
| **(1)** | **(2)** |
| Land - Commercial | 3% of Guideline Value of Land |
| Land - Residential | 1.5% of Guideline Value of Land |
| Land - Agricultural | 0.5% of Guideline Value of Land |
| Building - Commercial other than shopping complexes or public markets | Commercial Annual Rental Value as decided for Property Tax assessments |
| Building - Shopping complexes or public markets | Based on the actual rental value prevailing in the locality with such variations based on location of the shop in the market, demand, current vacancy levels, infrastructure facilities available, as may be decided by the council. |
| Building - Residential | Residential Annual Rental Value as decided for Property Tax assessments |

மேற்கண்ட *ULB* விதிகளின்படி, கீழ்கண்ட இடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | கட்டிடங்களின் விவரம் | | | மாத வாடகை ரூ. | *GST 18%* ரூ. | 12 மாத வாடகை முன்பணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | முகவரி | சதுர அடி | உரிமை-யாளர் | | | |
| 1 | 6 | 64 | ஜம்புலிங்கம் மெயின் ரோடு | 500 | GCC | 6,875 | 1,238 | 82,500 |
| 2 | 6 | 65 | அஞ்சுகம் நகர், 4வது தெரு பூங்கா, ஆவின் பால் நிலையம் அருகில் | 250 | GCC | 2,750 | 496 | 33,000 |
| 3 | 6 | 66 | *SPR* கோயில் மெயின் ரோடு (காமாராஜ் திருமண மண்டபம் அருகில்) | 110 | GCC | 1,210 | 218 | 14,520 |
| 4 | 6 | 68 | ஜவகர் 1வது வட்ட சாலை (ஆவின் நிலையம் அருகில்) | 110 | GCC | 1,513 | 272 | 18,150 |
| 5 | 6 | 70 | ரமணா நகர், ஜவகர் தெரு (காவல் நிலையம் அருகில்) | 200 | GCC | 1,900 | 342 | 22,800 |
| 6 | 6 | 71 | பாரதி தெரு(*Health & Wellness)* | 120 | GCC | 810 | 146 | 9,720 |
| 7 | 6 | 73 | புதிய பேரன்ஸ் சாலை கோட்ட அலுவலகம் | 110 | GCC | 1,045 | 188 | 12,540 |
| 8 | 6 | 74 | புதிய வாழைமா நகர் 9வது தெரு | 110 | GCC | 743 | 134 | 8,910 |
| 9 | 6 | 75 | பராக்கா ரோடு, கோட்ட அலுவலகம் பின்புறம் | 110 | GCC | 2,118 | 382 | 25,410 |
| 10 | 6 | 76 | வெங்கடம்மாள் சமாதி தெரு (*CHSS* அருகில்) | 250 | GCC | 3,063 | 552 | 36,750 |
| 11 | 6 | 77 | *PH* ரோடு, *TB* மருத்துவமனை வளாகம் உள்ளே | 226 | GCC | 10,227 | 1,842 | 1,22,718 |
| 12 | 7 | 79 | ஓரகடம் *UPHC* | 110 | GCC | 688 | 124 | 8,250 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | 7 | 83 | நியாயவிலைக் கடை, தாதன்குப்பம் | 110 | GCC | 440 | 80 | 5,280 |
| 14 | 8 | 94 | சிட்கோ நகர், 51வது தெரு (அங்கன்வாடி வளாகம் உள்ளே), வில்லிவாக்கம், சென்னை-49 | 110 | GCC | 1,513 | 272 | 18,150 |
| 15 | 8 | 95 | மண்ணடி தெரு, வில்லிவாக்கம், சென்னை-49 | 150 | GCC | 1,425 | 256 | 17,100 |
| 16 | 8 | 100 | KVN புரம் 2வது தெரு (அங்கன்வாடி முன்புறம்), கீழ்ப்பாக்கம், சென்னை-10 | 150 | GCC | 1,238 | 224 | 14,850 |
| 17 | 8 | 102 | கிரசன்ட் சாலை, செனாய் நகர், சென்னை-30 | 110 | GCC | 3,025 | 544 | 36,300 |
| 18 | 8 | 106 | விநாயகபுரம் மெயின் ரோடு, அரும்பாக்கம், சென்னை-106 | 150 | GCC | 2,888 | 520 | 34,650 |
| 19 | 8 | 108 | மங்களபுரம் 4வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை-31 | 120 | GCC | 1,020 | 184 | 12,240 |
| 20 | 9 | 124 | முண்டகன்னியம்மன் கோயில் தெரு | 100 | GCC | 3,025 | 544 | 36,300 |
| 21 | 10 | 136 | கோட்டம்-136, அலுவலக எண்.33, பொப்பிலி ராஜா சாலை, கே.கே.நகர், சென்னை-78 | 110 | GCC | 2,118 | 382 | 25,410 |
| 22 | 10 | 139 | கோட்ட அலுவலகம், R.R.காலனி 2வது தெரு | 110 | GCC | 2,118 | 382 | 25,410 |

ஆணையர் அவர்களின் *11.03.2025* நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-6 முதல் 10 வரையிலான இடங்களில் ***முதல்வர் மருந்தகம் அமைக்க*** கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் முதல்வர் மருந்தக திட்டத்திற்காக மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிட்., இணைப்பதிவாளர்/செயலாட்சியர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15 சதவீதம் உயர்த்தப்படும்,
2. மேற்படி நிலத்தினை வழங்கப்பட்ட பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். உள்வாடகையோ (அ) பிற பயன்பாட்டிற்கோ பயன்படுத்த கூடாது.
3. மேற்படி இடம் பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்கு தேவைப்படும் பட்சத்தில் தங்கள் உடைமைகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் அகற்றி நிலத்தினை ஒப்படைக்க வேண்டும்.

எனவே, மேற்படி இடங்களை நிபந்தனைகளின் அடிப்படையில் முதல்வர் மருந்தக திட்டத்திற்காக மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டமைக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 110/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8 / 1507-2 / 2023**

**ஆணையர் அவர்களின் 13.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:295 / 2025** **பொருள் எண்.64**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் (ம) உடைமைத்துறை - Phase-II - சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்காக தேர்வு செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு 25வது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (25th HPC Meeting) ஒப்புதல் வழங்கப்பட்டது - மண்டலம்-11, வார்டு-151ல் மதுரவாயல் வட்டம், போரூர் கிராமம், புல எண்கள். 169 / 2 (ம) 169 / 3-ல் உள்ள 956 ச.மீ நிலத்தினை நிரந்தர அடிப்படையில் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது - சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகளுக்காக நிலம் ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.**

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் அரசு கூடுதல் தலைமை செயலாளரின் 15.06.2023 நாளிட்ட நேர்முக கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு இணை செயலாளரின் *16.06.20*23 நாளிட்ட கடிதங்களில், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக தற்காலிக மற்றும் நிரந்தர அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்வது தொடர்பான விரைவான முடிவுகள் எடுப்பது தொடர்பாக அரசு தலைமை செயலாளர் அவர்களின் தலைமையில் 21.06.2023 அன்று மாலை 3.00 மணிக்கு தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10-ஆம் தளத்தில் அமைந்துள்ள கலந்தாய்வுக்கூட்ட அரங்கில் நடைபெற்ற *25*-ஆவது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (25th *High Power Committee Meeting)* வைக்கப்பட்ட இணைத்து அனுப்பப்பட்ட நிலங்களின் விவரங்களுக்குரிய *(Lands Required by CMRL)* பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவான குறிப்புரைகளுடன் கலந்துகொள்ளப்பட்டது.

அதனை தொடர்ந்து தெற்கு வட்டார துணை ஆட்சியர்/தனி வட்டாட்சியரின் *14.07.2023* நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில், மேற்படி நிலமானது மதுரவாயல் வட்டம், போரூர் கிராமம், புல எண்கள். 169/2 (ம) 169/3 ஆற்காடு சாலையின் நடைபாதையில் அமைந்துள்ளது எனவும்,

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஆற்காடு சாலை |
| தெற்கு | : | நேதாஜி நகர் |
| கிழக்கு | : | இராமகிருஷ்ணாமடம் சாலை |
| மேற்கு | : | ஆபிசர் காலனி |

மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலம் வழங்கிட உயர்மட்டக்குழுக்கூட்டத்தில் ஒப்புதல் வழங்கலாம் எனவும், உயர்மட்டக் குழுக்கூட்ட முடிவுகளுக்கு பின் உரிய அரசாணை பெறப்பட்ட உடன் மண்டல அலுவலரின் கருத்துருவினை பெற்று உரிய நிலமதிப்பினை பெற்றும் மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலத்தினை வழங்கிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 125, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறை, நாள்: 29.09.2023-ல் மதுரவாயல் வட்டம், போரூர் கிராமம், புல எண்கள். 169/2 மற்றும் 169/3-ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் 956 சதுர மீட்டர் நிலத்தினை நிரந்தர அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு மாற்றுதல் மற்றும் முன்நுழைவு அனுமதி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் *26.10.2023, 29.12.2023, 14.02.2024, 22.07.2024* மற்றும் *14.11.2024* ஆகிய நாளிட்ட கடிதங்களில், மேற்படி நிரந்தர அடிப்படையில் கோரியுள்ள 956 சதுர மீட்டர் நிலத்தினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவது சம்பந்தமான விரிவான குறிப்புரையினை *(Detailed Remarks)* உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மண்டல அலுவலர்-*11* அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மாவட்ட வருவாய் அலுவலர்/சட்ட அலுவலரின் *28.11.2023* மற்றும் *09.01.2024* நாளிட்ட கடிதங்களில், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிலத்தினை நில ஒப்புகை சான்றின் மூலம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு உடன் ஒப்படைக்குமாறு மீண்டும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தனி வட்டாட்சியர்/நி.ம.உ.து (தெற்கு) அவர்களின் 06.01.2025 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், போரூர் கிராமங்களில் கீழ்க்கண்ட சர்வே எண்களில் சென்னை மெட்ரோ இரயில் திட்டப்பணிக்காக நிரந்தர அடிப்படையில் இட ஒதுக்கீடு குறித்த ஸ்தல ஆய்வு அறிக்கை கோரப்பட்டுள்ளது என்றும், அதன் விவரங்கள் பின்வருமாறு.

| வ. எ ண் | கிராமம் | புலஎண் | மொத்த பரப்பு (ச.மீட்டர்) | நிலமாறுதல் கோரும் பரப்பு (ச.மீட்டர்) | உபயோகம் |
|---|---|---|---|---|---|
| *1* | போரூர் | *169/2, 169/3* | 956 ச.மீட்டர் | 955 ச.மீட்டர் | பெருநகர சென்னை மாநகராட்சி |

மேலும், மேற்படி புலங்களை நில மாறுதல் செய்வது குறித்து இவ்வலுவலக உதவி பொறியாளர் /கோட்டம் 151, வட்டாட்சியர் மற்றும் சர்வேயர் / நிலம் மற்றும் உடைமைத்துறை ஆகியோர் முன்னிலையில் 18.11.2024 அன்று கூட்டுப்புலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் திட்டப்பணிக்காக நிலமாற்றம் செய்வது குறித்து ஆட்சேபணை ஏதும் இல்லை எனவும் மற்றும் தடையின்மை சான்று வழங்க பரிந்துரை செய்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே, மண்டலம்-11, வார்டு-151ல் அரசாணை (நிலை) எண். 125, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறை, நாள்: 29.09.2023-ல் மதுரவாயல் வட்டம், போரூர் கிராமம், புல எண்கள். 169/2 மற்றும் 169/3-ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் 956 சதுர மீட்டர் நிலத்தினை வழங்க ஆணையிடப்பட்ட போதிலும், நிலமாறுதல் அறிக்கை

சான்றின்படி 955 சதுர மீட்டர் நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிலத்திற்கான வழிகாட்டு விலை மதிப்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள நிலக்கிரயத் தொகையான *(955 sq.mtr x GLV 65125 = 62194375)* ரூ.*6,21,94,375/-*ஐ (ரூபாய் ஆறு கோடியே இருபத்தோரு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து முன்னூற்று எழுபத்து ஐந்து மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடன் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் அப்புலத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ளும் பொழுது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் தகுந்த பாதுகாப்புடனும், கட்டிட இடுபாடுகளை உடனுக்குடன் அகற்றிடவும், சாலையில் ஏற்படும் பள்ளங்களை உடனுக்குடன் சரி செய்திட வேண்டுமென்ற அடிப்படையிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்டப் பணிகளுக்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 111/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8 / 1507-4 / 2023**

**ஆணையர் அவர்களின் 13.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:296 / 2025** **பொருள் எண்.65**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் (ம) உடைமைத்துறை - *Phase*-II - சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்காக தேர்வு செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு 25வது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (25th HPC Meeting) ஒப்புதல் வழங்கப்பட்டது - மண்டலம்-6, வார்டு-64ல் அயனாவரம் வட்டம், கொன்னூர் கிராமம், பிளாக் எண். 5, புல எண்கள். 91 pt (ம) 93 pt-ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலத்தினில் 20 ச.மீ நிலத்தினை நிரந்தர அடிப்படையில் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது - சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகளுக்காக நிலம் ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.**

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் அரசு கூடுதல் தலைமை செயலாளரின் 15.06.2023 நாளிட்ட நேர்முக கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு இணை செயலாளரின் 16.06.2023 நாளிட்ட கடிதங்களில், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக தற்காலிக மற்றும் நிரந்தர அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்வது தொடர்பான விரைவான முடிவுகள் எடுப்பது தொடர்பாக அரசு தலைமை செயலாளர் அவர்களின் தலைமையில் 21.06.2023 அன்று மாலை 3.00 மணிக்கு தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10-ஆம் தளத்தில் அமைந்துள்ள கலந்தாய்வுக்கூட்ட அரங்கில் நடைபெற்ற 25-ஆவது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (25th *High Power Committee Meeting)* வைக்கப்பட்ட இணைத்து அனுப்பப்பட்ட நிலங்களின் விவரங்களுக்குரிய *(Lands Required by CMRL)* பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவான குறிப்புரைகளுடன் கலந்துகொள்ளப்பட்டது.

அரசாணை (நிலை) எண். 126, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறை, நாள்:29.09.2023-ல் அயனாவரம் வட்டம், கொன்னூர் கிராமம், பிளாக் எண். 5, புல எண்கள். 91 *pt* (ம) 93 *pt*-ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலத்தினில் 20 சதுர மீட்டர் நிலத்தினை நிரந்தர அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு மாற்றுதல் மற்றும் முன்நுழைவு அனுமதி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் *26.10.2023, 29.12.2023, 14.02.2024, 22.07.2024* மற்றும் *14.11.2024* ஆகிய நாளிட்ட கடிதங்களில், மேற்படி நிரந்தர அடிப்படையில் கோரியுள்ள 20 சதுர மீட்டர் நிலத்தினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவது சம்பந்தமான விரிவான குறிப்புரையினை *(Detailed Remarks)* உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மண்டல அலுவலர்-6 அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மாவட்ட வருவாய் அலுவலர்/சட்ட அலுவலரின் *28.11.2023* மற்றும் *09.01.2024* நாளிட்ட கடிதங்களில், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிலத்தினை நில ஒப்புகை சான்றின் மூலம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு உடன் ஒப்படைக்குமாறு மீண்டும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய வட்டார தனி வட்டாட்சியரின் 14.07.2023 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில், மேற்படி கோரியுள்ள திறந்தவெளி நிலமானது அயனாவரம் வட்டம், கொன்னூர் கிராமம் பிளாக் எண்.5, புல எண்கள். 91 *pt* மற்றும் 93 *pt* கொளத்தூர் பிரதான சாலையில் அமைந்துள்ளது எனவும்,

| | | |
|---|---|---|
| வடக்கு | : | கொளத்தூர் மெயின் ரோடு |
| தெற்கு | : | மயான பூமி |
| கிழக்கு | : | செயின்ட் ஜோசப் கல்வி நிலையம் |
| மேற்கு | : | மின்மாற்றி |

மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலம் வழங்கிட உயர்மட்டக் குழுக்கூட்டத்தில் ஒப்புதல் வழங்கலாம் எனவும், உயர்மட்டக்குழு கூட்ட முடிவுகளுக்கு பின் உரிய அரசாணை பெறப்பட்ட உடன் மண்டல அலுவலரின் கருத்துருவினை பெற்று உரிய நிலமதிப்பினை பெற்றும் மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலத்தினை வழங்கிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை (நிலை) எண். 126, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறை, நாள்: 29.09.2023-ல் குறிப்பிடப்பட்டுள்ள மண்டலம்-6, வார்டு-64ல் அயனாவரம் வட்டம், கொன்னூர் கிராமம், பிளாக் எண். 5, புல எண்கள். 91 *pt* (ம) 93 *pt*-ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலத்தினில் 20 சதுர மீட்டர் நிலத்தினை நிரந்தர அடிப்படையில் நிலத்திற்கு வழிகாட்டு விலை மதிப்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள நிலக்கிரயத் தொகையான (20 *sq.mtr x GLV 59205 = 1184100)* ரூ.*11,84,100/*-ஐ (ரூபாய் பதினொரு இலட்சத்து எண்பத்தி நான்காயிரத்து நூறு மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடன் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் அப்புலத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ளும் பொழுது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் தகுந்த பாதுகாப்புடனும், கட்டிட இடுபாடுகளை உடனுக்குடன் அகற்றிடவும், சாலையில் ஏற்படும் பள்ளங்களை உடனுக்குடன் சரி செய்திட வேண்டுமென்ற அடிப்படையிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்டப் பணிகளுக்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 112/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8 / 1507-5 / 2023**

**ஆணையர் அவர்களின் 13.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:297 / 2025** **பொருள் எண்.66**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் (ம) உடைமைத்துறை - Phase-II – சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்காக தேர்வு செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு 25வது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (25$^{th}$ HPC Meeting) ஒப்புதல் வழங்கப்பட்டது - மண்டலம்-11, வார்டு-150ல் மதுரவாயல் வட்டம், காரம்பாக்கம் கிராமம், புல எண்கள். 44 / 10, 44 / 12, 44 / 13, 45 / 48A7-ல் உள்ள 195 ச.மீ நிலத்தினை நிரந்தர அடிப்படையில் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது - தனி வட்டாட்சியர்/நி.ம.உ.து (தெற்கு) அவர்களின் அறிக்கை பெறப்பட்டது - சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகளுக்காக நிலம் ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.**

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் அரசு கூடுதல் தலைமை செயலாளரின் 15.06.2023 நாளிட்ட நேர்முக கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு இணை செயலாளரின் 16.06.2023 நாளிட்ட கடிதங்களில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக தற்காலிக மற்றும் நிரந்தர அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்வது தொடர்பான விரைவான முடிவுகள் எடுப்பது தொடர்பாக அரசு தலைமை செயலாளர் அவர்களின் தலைமையில் 21.06.2023 அன்று மாலை 3.00 மணிக்கு தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10-ஆம் தளத்தில் அமைந்துள்ள கலந்தாய்வுக்கூட்ட அரங்கில் நடைபெற்ற *25*-ஆவது உயர்மட்டக்குழு கூட்டத்தில் (25$^{th}$ *High Power Committee Meeting)* வைக்கப்பட்ட இணைத்து அனுப்பப்பட்ட நிலங்களின் விவரங்களுக்குரிய *(Lands Required by CMRL)* பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவான குறிப்புரைகளுடன் கலந்துகொள்ளப்பட்டது.

அதனைதொடர்ந்து தெற்கு வட்டார துணை ஆட்சியர்/தனி வட்டாட்சியரின் *14.07.2023* நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில், மேற்படி நிலமான.து மதுரவாயல் வட்டம், காரம்பாக்கம் கிராமம், புல எண்கள். 44/10, *44/12, 44/13, 45/48A7* போரூர் ஜங்ஷன் சாலையின் நடைபாதையில் அமைந்துள்ளது எனவும்,

| | | |
|---|---|---|
| வடக்கு | : | *Karambakkam 1$^{st}$ Street* |
| தெற்கு | : | *Arcot Road* |
| கிழக்கு | : | *Karambakkam Mahalakshmi Nagar Main Road* |
| மேற்கு | : | *Mount Poonamallee Road* |

மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலம் வழங்கிட உயர்மட்டக் குழுக்கூட்டத்தில் ஒப்புதல் வழங்கலாம் எனவும், உயர்மட்டக்குழுக்கூட்ட முடிவுகளுக்கு பின் உரிய அரசாணை பெறப்பட்ட உடன் மண்டல அலுவலரின் கருத்துருவினை பெற்று உரிய நிலமதிப்பினை பெற்றும் மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலத்தினை வழங்கிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 127, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறை, நாள்: 29.09.2023-ல் மதுரவாயல் வட்டம், காரம்பாக்கம் கிராமம், புல எண்கள். 44/10, 44/12, 44/13, *45/48A7*-ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் 195 சதுர மீட்டர் நிலத்தினை நிரந்தர அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு மாற்றுதல் மற்றும் முன்நுழைவு அனுமதி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் *26.10.2023, 29.12.2023, 14.02.2024, 22.07.2024* மற்றும் *14.11.2024* ஆகிய நாளிட்ட கடிதங்களில், மேற்படி நிரந்தர அடிப்படையில் கோரியுள்ள 195 சதுர மீட்டர் நிலத்தினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவது சம்பந்தமான விரிவான குறிப்புரையினை *(Detailed Remarks)* உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மண்டல அலுவலர்-11 அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மாவட்ட வருவாய் அலுவலர்/சட்ட அலுவலரின் *28.11.2023* மற்றும் *09.01.2024* ஆகிய நாளிட்ட கடிதங்களில், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிலத்தினை நில ஒப்புகை சான்றின் மூலம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு உடன் ஒப்படைக்குமாறு மீண்டும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தனி வட்டாட்சியர்/நி.ம.உ.து (தெற்கு) அவர்களின் *06.01.2025* நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், காரம்பாக்கம் கிராமத்தில் கீழ்க்கண்ட சர்வே எண்களில் சென்னை மெட்ரோ இரயில் திட்டப்பணிக்காக நிரந்தர அடிப்படையில் இட ஒதுக்கீடு குறித்த ஸ்தல ஆய்வு அறிக்கை கோரப்பட்டுள்ளது என்றும், அதன் விவரங்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண் | கிராமம் | புல எண் | மொத்த பரப்பு (ச.மீட்டர்) | நிலமாறுதல் கோரும் பரப்பு (ச.மீட்டர்) | உபயோகம் |
|---|---|---|---|---|---|
| *1* | காரம்பாக்கம் | *44/10, 44/12, 44/13* | 195 ச.மீட்டர் | 81 ச.மீட்டர் | பெருநகர சென்னை மாநகராட்சி |

மேலும், மேற்படி புலங்களை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நில மாறுதல் செய்வது குறித்து இவ்வலுவலக உதவி பொறியாளர் /கோட்டம் 150, வட்டாட்சியர் மற்றும் சர்வேயர் / நிலம் மற்றும் உடைமைத்துறை ஆகியோர் முன்னிலையில் 18.11.2024 அன்று கூட்டுப்புலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் திட்டப்பணிக்காக நிலமாற்றம் செய்வது குறித்து ஆட்சேபணை ஏதும் இல்லை எனவும் மற்றும் தடையின்மை சான்று வழங்க பரிந்துரை செய்து, நிலமாறுதல் சான்றுடன் அறிக்கை *(Land Delivery Receipt-81 Sq. Mtr.)* கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே, மண்டலம்-11, வார்டு-150ல் அரசாணை (நிலை) எண். 127, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறை, நாள்: 29.09.2023-ல் மதுரவாயல் வட்டம், காரம்பாக்கம் கிராமம், புல எண்கள். 44/10, 44/12, 44/13, *45/48A7*-ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் 195 சதுர மீட்டர் நிலத்தினை வழங்க ஆணையிடப்பட்ட போதிலும், நிலமாறுதல் அறிக்கை சான்றின்படி புல எண்கள். 44/10, 44/12, 44/13ல் 81 சதுர மீட்டர் நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிலத்திற்கான வழிகாட்டு விலை மதிப்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள நிலக்கிரயத் தொகையான (81 *sq.mtr x GLV 65125 = 5275125)* ரூ.*52,75,125/-*ஐ (ரூபாய் ஐம்பத்தி இரண்டு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரத்து நூற்று இருபத்து ஐந்து மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடன் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் அப்புலத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ளும்பொழுது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் தகுந்த பாதுகாப்புடனும், கட்டிட இடுபாடுகளை உடனுக்குடன் அகற்றிடவும், சாலையில் ஏற்படும் பள்ளங்களை உடனுக்குடன் சரி செய்திட வேண்டுமென்ற அடிப்படையிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்டப் பணிகளுக்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> “17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.113/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9 / 1035 / 2023**

**ஆணையர் அவர்களின் 15.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:298 / 2025** **பொருள் எண்.67**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம்-5, பகுதி- 13, வார்டு – 57, புரசைவாக்கம் வட்டம், பிளாக் எண்.68, சர்வே எண்.7878, உட்பிரிவு எண்.1 மாற்று திறனாளிகளுக்கான மறு வாழ்வு மையம் மற்றும் இரத்த சுத்திகரிப்பு மைய கட்டிடம் கட்டி பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைத்திட பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டது - கூடுதல் நிலம் வழங்க முன்நுழைவு அனுமதி கடிதம் அனுப்பப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

மன்ற தீர்மான எண்.271/2023, நாள்.28.04.2023-ன்படி, மண்டலம்-5, வார்டு-57, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி கிராமம், தண்ணீர் தொட்டி தெரு, பிளாக் எண்.68, திருவல்லியன் பேசின் சவுத் தெரு, சர்வே எண்.7878 உட்பிரிவு-1, கதவிலக்கம்-2 மாநகராட்சி (தனி) நிலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதியிலிருந்து ரூபாய்.10.00 கோடி மதிப்பீட்டில் 6180 சதுர அடியில் மாற்று திறனாளிகளுக்கான மறு வாழ்வு மையம் மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையம் அமைக்க தகுந்த கட்டிடம் கட்டி அதனை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைத்திட நிபந்தனைகளுக்குட்பட்டு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் 04.05.2023 நாளிட்ட செயல்முறை ஆணை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு 10.05.2023- அன்று அனுப்பப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம் - 5 அவர்களின் 20.02.2025-நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-5, பகுதி - 13, வார்டு - 57க்கு உட்பட்ட தண்ணீர் தொட்டி தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதியதாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் புதியதாக இரத்த சுத்திகரிப்பு மையம் மற்றும் மறுவாழ்வு மையம் கட்டிடம் கட்டப்பட்டு வருவதாகவும், இப்பணியினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுடன், அரசு கூடுதல் தலைமை செயலாளர் (H&UDD) மற்றும் உறுப்பினர் செயலாளர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்கள் மூலம் 12.02.2025 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், களஆய்வு மேற்கொள்ளும் போது இரத்த சுத்திகரிப்பு மையம் மற்றும் மறுவாழ்வு மையம் கட்டிடம் கட்டும் பணியின் உபயோகத்திற்காக வாகன நிறுத்தம் மற்றும் இதர பணிகள் செய்ய அக்கட்டிடத்தின் பின்புறம் உள்ள காலி இடத்தினையும் மற்றும் உரம் தயாரிக்கும் இடமான MCC ஆகிய இடங்களை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது. என்றும்,

| வ எண் | இடத்தின் விவரம் | இடத்தின் தோராய அளவு | சர்வே எண் |
|---|---|---|---|
| 1 | காலி இடம் | 430 சதுர மீட்டர் | பிளாக் எண்.68,<br>சர்வே எண்.7878/1 |

| | | | |
|---|---|---|---|
| 2 | உரம் தயாரிக்கும் இடம் (MCC) | 410 சதுர மீட்டர் | பிளாக் எண்.68, சர்வே எண்.7878/1 |

மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம் மற்றும் மறுவாழ்வு மையம் கட்டிடத்தின் உபயோகத்திற்காக வாகன நிறுத்தம் மற்றும் இதர பணிகள் செய்ய அக்கட்டிடத்தின் பின்புறம் உள்ள காலி இடத்தினையும் மற்றும் உரம் தயாரிக்கும் இடமான MCC ஆகிய இடங்களை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலம் மற்றும் உடைமைத்துறையின் மூலமாக முன் நுழைவு அனுமதி அளித்தல் சம்மந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே, மண்டலம்-5, பகுதி- 13, வார்டு-57, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி கிராமம், தண்ணீர் தொட்டி தெரு, பிளாக் எண்.68, திருவல்லியன் பேசின் சவுத் தெரு, சர்வே எண்.7878 உட்பிரிவு – 1 மாநகராட்சி (தனி) நிலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம் மற்றும் மறுவாழ்வு மையம் கட்டிடத்தின் உபயோகத்திற்காக வாகன நிறுத்தம் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள அக்கட்டிடத்தின் பின்புறம் உள்ள காலி இடத்தினையும் (430 ச.மீ) மற்றும் உரம் தயாரிக்கும் இடமான MCC (410 ச.மீ) ஆகிய பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கூடுதல் இடங்களை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கிட கீழ்கண்ட நிபந்தனைகளுடன் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 06.03.2025 நாளிட்ட ஆணை பெறப்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டமைக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள் :-**

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இந்நிலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினரால் கட்டிடம் கட்டி முடித்த பின்பு தொடர் பராமரிப்புக்காக பெருநகர சென்னை மாநகராட்சி வசம் கட்டிடத்தை ஒப்படைக்க வேண்டும்.
2. மேற்படி நிலம் எக்காரணம் கொண்டும் எதிர் காலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்படாது.
3. மேற்படி நிலம் எத்தகைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படுகிறதோ அத்தகைய பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.

“17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.125/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**இ.பொ.து.ம.வா.ப. எண்.சி1 / 548 / 2024**

**ஆணையர் அவர்களின் 03.02.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:299 / 2025** **பொருள் எண்.68**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய வட்டாரம் - மத்திய சென்னை வாகன பணிமனை - மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு 2025-2026 ஆம் ஆண்டுக்கான டீசல் கொள்முதல் செய்வது - பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் மொத்த கொள்முதல் விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்ற தீர்மான எண்.180/78, நாள்.26.02.78ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல் மற்றும் இதர எரிபொருட்களை ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, ஒன்றிய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஆகிய நிறுவனங்களிடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று நேரடி கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய காலக்கட்டத்தில், 10 மண்டலங்களுக்காக வட சென்னை (1 முதல் 5) மற்றும் தென்சென்னையில் (6 முதல் 10) வாகன இயக்கூர்தி நிலையங்கள் அமைக்கப்பட்ட பின்னர், ஒன்றிய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு கலன்கள் மற்றும் பம்புகள் இந்த வாகன நிலையங்களில் சிலவற்றில் நிறுவப்பட்டன. சென்னை மாநகராட்சி 15 மண்டலங்களாக விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் வடசென்னை, மத்திய சென்னை, மற்றும் தென்சென்னை என பிரிக்கப்பட்டன. மத்திய வட்டாரமாக மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள மண்டலங்கள் கொண்டதாக பிரிக்கப்பட்டது.

மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள லாரி நிலையங்களில் அசோக் லைலேண்ட், சிவாராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறிய வகை முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொக்லைன், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் 226 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், நலத்துறையின் மலேரியா பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக வேன்பாக் போன்ற வாகனங்களுக்கும் மின்வெட்டின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் வெள்ளநீரை இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம் 6 லாரி நிலைய வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், புகை பரப்பும் வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம்-7 புகை பரப்பும் வாகனங்களுக்கும் தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம்

நிரப்பப்படுகின்றன. இந்த பங்க் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரால் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

| நிறுவனங்களின் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் | மண்டலம்-6 லாரி நிலையம், பிளாக் எண். ப.எண்: 340, சந்திர யோகி சமாதி சாலை, ஜமாலியா, சென்னை-12 | மண்டலம்-6 லாரி நிலைய வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பும் வாகனங்கள் மற்றும் இதர பணிகளுக்கு |

மத்திய ஆயில் நிறுவனத்தின் மொத்த கொள்முதல் விலை விவரம் நாள்:03.01.2025-ன்படி மொத்த கொள்முதல் விலை ரூ.91.98/-ம் சந்தை விலை ரூ.92.49/-ம் ஆகும். எனவே மொத்த கொள்முதல் விலை சந்தை விலையை காட்டிலும் ஒரு லிட்டர் ரூ. 0.51/- (03.01.2025 தேதியின்படி) குறைவாக இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கை பராமரிக்கும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது மத்திய அரசு ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதால், இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 கிலோ லிட்டருக்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட) | மொத்த தேவை கிலோ லிட்டர் (2025-2026 ஆம் ஆண்டிற்கு) |
|---|---|---|---|
| பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் அல்லது மத்திய அரசு ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள். | டீசல் | ரூ. 91,983/- (நாள். 03.01.2025) | 1,060 |
| மொத்த தொகை | 1,060 Kilo ltrs x ரூ.91,983/-= ரூ.9,75,01,980/- (ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து ஐந்து இலட்சத்து ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) | | |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலையாக செலுத்த வேண்டும் என்றும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை அளித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதாலும், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின் படியே டீசலை வழங்கி வருவதாலும், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மேலும், மண்டலம்-6 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2025-2026ஆம் ஆண்டின் எரிபொருள் தேவைக்கு தோராயமாக கணக்கிடப்பட்ட, 1,060 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு ரூ.9,75,01,980/- (ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து ஐந்து இலட்சத்து ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) தேவைப்படுகிறது. இச்செலவீனம் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 – கணக்கு எண். 230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும். இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் எரிபொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருளை, மேற்கண்ட மத்திய அரசு நிறுவனத்திடமிருந்து அல்லது மத்திய அரசு ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து அவர்கள் தற்போது அளித்த விலைப்புள்ளியின்படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலையின்படி வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102, நாள்.09.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஆணையினை அமல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01, நாள். 18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, நடப்பு நிதியாண்டில் 2025-26 ஆம் ஆண்டிற்கு, மண்டலம் 6 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் டீசலை கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-6 லாரி நிலையத்தின் வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்ப அனுமதியும்,

2. மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருள் 2025-2026ஆம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற 1,060 கிலோ லிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு தேவையான மொத்த தொகையான ரூ.9,75,01,980/- (ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து ஐந்து இலட்சத்து ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) தற்போதைய விலையில் அல்லது கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவைக்கேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களின் ஆணை பெற்று, பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு அல்லது மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
4. பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் அல்லது அதன் அங்கீகரிக்கபட்ட முகவர்கள் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்புத்தொகை கட்டுவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
5. ஒன்றிய அரசு நிறுவனங்கள் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது RTGS மூலமாக அளிக்கவும்,
6. இதற்கான செலவீனத்தை 2025-2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 – கணக்கு எண். 230-20- 03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,
7. ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல் செய்யவும்,
8. அதிகாரப் பகிர்ந்தளிப்பு சுற்றறிக்கை, நாள்.08.11.2024-ன்படி இயந்திர பொறியியல் துறை பரவலாக்கப்பட்ட பின்பு மன்ற தீர்மான எண்.229/2024, நாள்.30.08.2024-ன்படி இயந்திர பொறியியல் துறை மேற்பார்வை பொறியாளர் அவர்களின் ஆணைக்கு பதிலாக மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களின் ஆணை பெற்று 03.12.2024 முதல் டீசல் கொள்முதல் செய்ததற்கு பின்னேற்பு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.038/2025, நாள்.14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

> “17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 121/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**இ.பொ.து.ம.வா.ப. எண்.சி1 / 549 / 2024**

**ஆணையர் அவர்களின் 30.01.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:300 / 2025** **பொருள் எண்.69**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய வட்டாரம் - மத்திய சென்னை வாகன பணிமனை - மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு 2025-2026 ஆம் ஆண்டுக்கான டீசல் கொள்முதல் செய்வது - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் மொத்த கொள்முதல் விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்ற தீர்மான எண்.180/78, நாள்.26.02.78ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல் மற்றும் இதர எரிபொருட்களை ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, ஒன்றிய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஆகிய நிறுவனங்களிடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று நேரடி கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய காலக்கட்டத்தில், 10 மண்டலங்களுக்காக வட சென்னை (1 முதல் 5) மற்றும் தென்சென்னையில் (6 முதல் 10) வாகன இயக்கூர்தி நிலையங்கள் அமைக்கப்பட்ட பின்னர், ஒன்றிய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு கலன்கள் மற்றும் பம்புகள் இந்த வாகன நிலையங்களில் சிலவற்றில் நிறுவப்பட்டன. சென்னை மாநகராட்சி 15 மண்டலங்களாக விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் வடசென்னை, மத்திய சென்னை, மற்றும் தென்சென்னை என பிரிக்கப்பட்டன. மத்திய வட்டாரமாக மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள மண்டலங்கள் கொண்டதாக பிரிக்கப்பட்டது.

மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள லாரி நிலையங்களில் அசோக் லைலேண்ட், சிவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறிய வகை முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொக்லைன், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் 226 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், நலத்துறையின் மலேரியா பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக வேன்பாக் போன்ற வாகனங்களுக்கும் மின்வெட்டின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் வெள்ளநீரை இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம் 7, 8 லாரி நிலைய வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பும் வாகனங்கள் மற்றும் மண்டலம்-9 மற்றும் 10 க்கு உட்பட்ட வாகனங்களுக்கும் மற்றும் புகைபரப்பும் வாகனங்களுக்கும் தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம்-8 லாரி

நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்படுகின்றன. இந்த பங்க் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரால் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

| நிறுவனங்களின் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் | மண்டலம்-8 லாரி நிலையம், எண். 5 C, ப்ரூவரி சாலை, செனாய் நகர், சென்னை-30 | மண்டலம்-7,8,9 மற்றும் 10 லாரி நிலைய வாகனங்கள், பிற மாநகராட்சி பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், புகை பரப்பும் வாகனங்கள் மற்றும் இதர பணிகளுக்கு |

இந்நிலையில் மத்திய அரசு ஆயில் நிறுவனத்தின் மொத்த கொள்முதல் விலை விவரம் நாள்.02.01.2025-ன்படி மொத்த கொள்முதல் விலை ரூ92.36/-ம் சந்தை விலை ரூ.92.49/-ம் ஆகும். எனவே மொத்த கொள்முதல் விலை சந்தை விலையை காட்டிலும் ஒரு லிட்டர் ரூ.0.13/- (03.01.2025 தேதியின்படி) குறைவாக இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கை பராமரிக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது மத்திய அரசு ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதால், இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 கிலோ லிட்டருக்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட) | மொத்த தேவை கிலோ லிட்டர் (2025-2026 ஆம் ஆண்டிற்கு) |
|---|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் அல்லது மத்திய அரசு ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் | டீசல் | ரூ. 92,366/- (நாள். 03.01.2025) | 1,060 |
| மொத்த தொகை | 1,060 Kilo ltrs x ரூ.92,366/-= ரூ.9,79,07,960/- (ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) | | |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலையாக செலுத்த வேண்டும் என்றும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை அளித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதாலும், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின் படியே டீசலை வழங்கி வருவதாலும், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மேலும், மண்டலம்-8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2025-2026 ஆம் ஆண்டின் எரிபொருள் தேவைக்கு தோராயமாக கணக்கிடப்பட்ட, 1,060

கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு ரூ.9,79,07,960/- (ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) தேவைப்படுகிறது. இச்செலவீனம் 2024-2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 – கணக்கு எண்.230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும். மேலும் இது ஒரு இந்திய அரசின் நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால், பிணை வைப்புத்தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரிபொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருளை, மேற்கண்ட மத்திய அரசு நிறுனத்திடமிருந்து அல்லது மத்திய அரசு ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து அவர்கள் தற்போது அளித்த விலைப்புள்ளியின்படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலையின்படி வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102 நாள்.09.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஆணையினை அமல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01, நாள். 18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, நடப்பு நிதியாண்டில் 2025-2026ஆம் ஆண்டிற்கு மண்டலம்-8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் டீசலை கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்..

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-7,8,9 மற்றும் 10 லாரி நிலையங்களின் வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்ப அனுமதியும்,

2. மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருள் 2025-2026 ஆம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற 1,060 கி.லோ லிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு தேவையான மொத்த தொகையான ரூ.9,79,07,960/-

(ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) தற்போதைய விலையில் அல்லது கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள விலைக்கு திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவைக்கேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களின் ஆணை பெற்று, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு *RTGS* மூலம் முன்பணமாக செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் அல்லது அதன் அங்கீகரிக்கபட்ட முகவர்கள் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்புத்தொகை கட்டுவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்

5. ஒன்றிய அரசு நிறுவனங்கள் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது *RTGS* மூலமாக அளிக்கவும்,

6. இதற்கான செலவீனத்தை 2025-2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை *40-41-09*– கணக்கு எண். 230-*20- 03-06* எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

7. ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல் செய்யவும்,

8. இயந்திர பொறியியல் துறை பரவலாக்கப்பட்ட பின்பு மன்ற தீர்மான எண்.300/2024, நாள்.30.08.2024-ன்படி இயந்திர பொறியியல் துறை மேற்பார்வை பொறியாளர் அவர்களின் ஆணைக்கு பதிலாக மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களின் ஆணை பெற்று 03.12.2024 முதல் டீசல் கொள்முதல் செய்ததற்கு பின்னேற்பு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.039/2025, நாள்.14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

> "17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 122/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**இ.பொ.தும.வா.ப.நக.எண்.சி1 / 065 / 2025**

**ஆணையர் அவர்களின் 13.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:301 / 2025** **பொருள் எண்.70**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய வாகன பணிமனை - இயந்திர பொறியியல் துறை - மண்டலம்-7 லாரி நிலையத்தில் உள்ள வாகனங்கள் இயக்குவதற்கு - 48 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது - ஒப்பந்தம் 31.05.2025 அன்றுடன் நிறைவுபெறுகிறது - துப்புரவு பணியினை தொய்வின்றி மேற்கொள்ள தற்பொழுது தேவைப்படும் 57 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் 180 நாட்களுக்கு பணியமர்த்த நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி. இயந்திர பொறியியல் துறை, மத்திய வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள லாரி நிலையங்களில் துப்புரவு, கட்டிடகழிவுகள், சுகாதாரத்துறை, பூங்கா துறை மற்றும் இன்னபிற பணிகளை மேற்கொள்ள மொத்தம் 226 கனரக, இலகுரக வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை பராமரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் வாகனங்கள் மூன்று வேளைகளிலும் இயக்க துறை சார்ந்த ஓட்டுநர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதையொட்டி தேவைக்கேற்ப அந்தந்த மண்டல லாரி நிலையங்களுக்கு ஒப்பந்ததாரர் மூலம் ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி மண்டலம்-7 லாரி நிலையத்தில் துப்புரவு, கட்டிடகழிவுகள், சுகாதாரத்துறை மற்றும் இன்னபிற பணிகளை மேற்கொள்ள ஓட்டுநர் பற்றாக்குறைகளை களைய 48 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்கள் 11.03.2024 நாளிட்ட பணிஆணையின்படி பணியமர்த்தப்பட்டனர். இந்த ஆணை வரும் 31.05.2025 அன்றுடன் முடிவு பெறுகிறது.

காலை, மதியம் மற்றும் இரவு வேளைகளில் ஏற்கனவே அனுப்பப்பட்டுக் கொண்டிருந்த வாகனங்களின் அடிப்படையிலும், அயல் பணிகள் செய்வதற்காகவும் சேர்த்து மொத்தம் 88 ஓட்டுநர்கள் ஒரு நாளைக்கு தேவைப்படுகின்றனர். இதில் 27 நிரந்தர ஓட்டுநர்களும், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஒப்பந்ததாரர் மூலம் 08 ஓட்டுநர்களும் உள்ளனர். மேலும், 11 ஓட்டுநர்கள் அயல் பணியிலும் மாற்று பணி அடிப்படையில் உள்ளனர். எனவே, 27 நிரந்தர ஓட்டுநர்களில் 16 ஓட்டுநர்கள் மட்டுமே லாரி நிலையத்தில் பணி செய்கின்றனர். மேலும், நிரந்தர ஓட்டுநர்கள் அனுமதிக்கப்பட்ட வார விடுப்பு, தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பில் செல்லும்போது அவ்விடத்தில் தற்காலிக மாற்று ஓட்டுநர்களை பணிக்கு அமர்த்த வேண்டி உள்ளது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு மண்டலம்-7லாரி நிலையத்திற்கு தேவையான ஓட்டுநர்களை கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| DRIVER REQUIREMENT LIST | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| SL. No | TYPE OF VEHICLES | AM Shift | PM Shift | Night shift | Total Marchout | Available Drivers | | Shortage of Drivers |
| | | | | | Driver Requirement | O&M | GCC | |
| 1 | HMV Compactor | 7 | 3 | 5 | 15 | 0 | 2 | 13 |
| 2 | LMV Compactor | 6 | 1 | 5 | 12 | 0 | 0 | 12 |
| 3 | HMV Tipper (Garden Garbage) | 2 | 1 | 0 | 3 | 0 | 0 | 3 |
| 4 | HMV Tipper (Garbage) | 7 | 2 | 2 | 11 | 0 | 4 | 7 |
| 5 | HMV Tipper (Plastic) | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |
| 6 | Tata Ace | 3 | 0 | 0 | 3 | 0 | 2 | 1 |
| 7 | Front End Loader (Aiema) | 1 | 1 | 0 | 2 | 0 | 0 | 2 |
| 8 | Skid Steer Loader (O&M) | 4 | 0 | 0 | 4 | 4 | 0 | 0 |
| 9 | Cattle Catcher | 2 | 1 | 0 | 3 | 0 | 1 | 2 |
| 10 | Dog Van | 2 | 1 | 0 | 3 | 0 | 1 | 2 |
| 11 | Taurus | 3 | 0 | 0 | 3 | 0 | 0 | 3 |
| 12 | Mechanical Sweeper | 1 | 0 | 1 | 2 | 2 | 0 | 0 |
| 13 | SHE toilet | 1 | 1 | 0 | 2 | 0 | 0 | 2 |
| 14 | Truck mounted crane | 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 |
| 15 | Jatayu | 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 |
| 16 | Ambulance | 2 | 2 | 0 | 4 | 0 | 1 | 3 |
| 17 | Zonal officer Inspection Jeep | 1 | 1 | 1 | 3 | 0 | 0 | 3 |
| 18 | EE -1 Inspection Jeep | 1 | 1 | 1 | 3 | 0 | 3 | 0 |
| 19 | EE-2 Inspection Jeep | 1 | 1 | 0 | 2 | 0 | 2 | 0 |
| 20 | AHO Inspection Jeep | 1 | 1 | 0 | 2 | 0 | 2 | 0 |
| 21 | ZMO Inspection Jeep | 1 | 1 | 0 | 2 | 0 | 1 | 1 |
| 22 | TOTAL | 49 | 18 | 15 | 82 | 8 | 19 | 55 |
| 23 | Break Down Vehicle | 1 | 1 | 1 | 3 | 0 | 2 | 1 |
| 24 | Parking Duty | 0 | 1 | 1 | 2 | 0 | 1 | 1 |
| 25 | Receiving spares from CCD and Authorized dealers on general shift for maintenance of vehicles | 1 | | | 1 | 0 | 1 | 0 |
| 26 | GRAND TOTAL | 51 | 20 | 17 | 88 | 8 | 23 | 57 |

**<u>நிரந்தர ஓட்டுநர்களின் விவரம்</u>**

| | | |
|---|---|---|
| மண்டலம் -7 மொத்த நிரந்தர ஓட்டுநர்களின் எண்ணிக்கை | : | 27(-) |
| மாற்றுப்பணி அடிப்படையில் பணிப்புரியும் ஓட்டுநர்கள் எண்ணிக்கை *CI-3, Deputation -1 & Zone 7 Inspection vehicles-7)* | : | 11 |
| நீண்ட நாட்களாக பணிக்கு வருகை புரியாமல் இருக்கும் ஓட்டுநர்கள் எண்ணிக்கை | : | 0 |
| தற்போது மண்டலம் -7 லாரி நிலையத்தில் பணிபுரியும் நிரந்தர ஓட்டுநர்களின் எண்ணிக்கை | : | 16 |

| | | |
|---|---|---|
| A | Total Driver Requirement for Zone-7 Lorry Satation(AM/PM/Night) | 88 |
| B | Drivers On O&M Contract | 8 |
| C | Required Drivers for Zone-7 (A-B) | 80 |
| D | GCC drivers available for marchout | 16 |
| E | GCC Drivers on Deputation | 11 |
| F | Total GCC Permanent Drivers available | 27 |
| G | Total Drivers Required forZone-7 Lorry Station(G=C-F) | 53 |
| H | Substitute Drivers for GCC authorized Weekly Off(16/7) | 2 |
| I | Substitute Drivers for GCC authorized leave (16X0.15) | 2 |
| J | Actual total requirement of drivers (J=G+H+I) | 57 |

மேற்கண்ட கணக்கீட்டின்படி, மண்டலம்-7 லாரி நிலையத்தில் அனைத்து பணிகளையும் தொய்வில்லாமல் மேற்கொள்ள கூடுதலாக 57 ஓட்டுநர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது மேற்கண்ட ஓட்டுநர்கள் தேவையை பூர்த்தி செய்ய நிரந்த ஓட்டுநர்கள் இல்லாத நிலையில் தற்காலிக ஓட்டுநர்களை தமிழக அரசின் பொதுப்பணி துறையின் 2024-25 விலைவிவர பட்டியலின்படி குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையில் மின்னனு ஒப்பம் கோரி பணி அமர்த்தலாம் என கருதப்படுகின்றது. அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தப்படவுள்ள தனியார் ஓட்டுநர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியம் கீழ்வருமாறு:

| Rate of Schedule of PWD for the year 2024-25 | | | Administrative Charges (5%) (Rs.) | Total (Rs.) | GST 18% (Rs.) | Rate per day per driver |
|---|---|---|---|---|---|---|
| Basic rate per day per driver (Rs.) | Additional wages for Chennai City (10%) (Rs.) | Total (Rs.) | | | | Grand Total (Rs.) |
| A | B | C | D | E | F | G |
| A | (A x 10%) | (A+B) | (C x 5%) | (C+D) | (E x 18%) | (E+F) |
| 902 | 90.2 | 992.2 | 49.61 | 947.1 | 1,041.81 | 1,229.34 |

Schedule of rates of PWD for the year 2024-25
Rate per day per driver : Rs. 1,229.34/-
Rate per day for 57 drivers (1229.34 x 57) : Rs. 70,072.38/-
Rate for 57 drivers for 180 days (1229.34 x 57 x 180) : Rs. 1,26,13,028.40/-

எனவே, 57 எண்ணிக்கையிலான ஓட்டுநர்களுக்கு நாளொன்றுக்கு ஆகும் செலவீனம் ரூ.70,072.38/- ஆகும். அதன்படி 180 நாட்களுக்கு 57 ஓட்டுநர்களுக்கு ஆகும் தோராய மொத்த செலவீனம் ரூ.1,26,13,028.40 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஆறு இலட்சத்து பதிமூன்றாயிரத்து இருபத்தெட்டு நாற்பது பைசா மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) இச்செலவீனம் 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 – கணக்கு எண். 230-800-400 “Hire Charges” என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

| BUDGET HEAD | |
|---|---|
| Function Centre | 40 – 41 – 09 |
| Head of Account code: | 230-800-400 |
| Budget allotment for the year 2024-2025 | Rs.16,63,34,000/- |
| So far incurred | Rs.6,46,46,631.60/- |
| Expenditure in this bill | Rs.1,20,13,028.40/- |
| Balance Amount | Rs.8,90,74,340/- |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய வட்டாரம், மண்டலம்-7 லாரி நிலையத்தில் இயக்கப்படும் கனரக / இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் மற்றும் இன்ன பிற வாகனங்களையும் 180 நாட்களுக்கு இயக்குதல் பணிகளை காலை / மதியம் / இரவு வேளைகளில் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 57 எண்ணிகையிலான தற்காலிக ஓட்டுநர்களை நாளொன்றுக்கு ஒரு ஓட்டுநருக்கு ரூ. 1229.34/- (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) வீதம் 57 ஓட்டுநர்களுக்கு 180 நாட்களுக்கு (Rs. 1229.34/- x 57 Drivers x 180 Days) ரூ. 1,26,13,028.40/-(ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஆறு இலட்சத்து பதிமூன்றாயிரத்து இருபத்தெட்டு நாற்பது பைசா மட்டும்) செலவீனத்தில் மின்னணு ஒப்பம் கோரி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள அனுமதியும்,
2. இதற்கான செலவீனமான ரூ.1,26,13,028.40/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஆறு இலட்சத்து பதிமூன்றாயிரத்து இருபத்தெட்டு நாற்பது பைசா மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 – கணக்கு எண். 230-800-400 "Hire Charges" என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,
3. இச்செலவீனத்தினை மத்திய மண்டலத்தின் (Central Region) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மத்திய வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண்.40-41-09 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-800-400 என்னும் தலைப்பின்கீழ் கூடுதல் நிதி வழங்கவும்

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர்அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்படி மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.2.ந.க.எண்.எச்2 / 695 / 2025**

**ஆணையர் அவர்களின் 15.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:302 / 2025** **பொருள் எண்.71**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2(மணலி) கோட்டம் 15 முதல் 22 வரையுள்ள பகுதிகளில் சுகாதார களப் பணிக்காக - தற்காலிக தினக்கூலி அடிப்படையில் SHG சுய உதவிக் குழுக்கள் மூலம் பணியமர்த்தப்பட்ட 90 சுகாதார களப் பணியாளர்களின் பணிக்காலம் 19.04.2025ல் முடிவடைகிறது - மேலும் 22.04.2025 முதல் 21.04.2026 வரை ஒரு வருட காலத்திற்கு பணியில் ஈடுபடுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின், 15.03.2024 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2 (மணலி), கோட்டம் 15 முதல் 22 வரையுள்ள பகுதிகளில் கொசுவினால் பரவக்கூடிய மலேரியா டெங்கு, சிக்கன் குனியா முதலிய தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு வீடுவீடாக சென்று கொசுப்புழு கண்டறிந்து அழித்தல், மருந்து ஊற்றுதல், தற்காலிக கொசுப்புழு உற்பத்தி ஆதாரங்களை கண்டறிந்து அழித்தல், வீடு மற்றும் மழைநீர் வடிகால்வாய்களில் புகைப்பரப்புதல், கொசுப்புழுக் கொல்லி மருந்து தெளித்தல் முதலிய பணிகளோடு எலி தடுப்பு பணி மற்றும் கால்நடை பிடிக்கும் பணிகளையும் 19 நிரந்தர பணியாளர்களையும் 90 *SHG* தற்காலிக தினக்கூலி பணியாளர்களையும் கொண்டு மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 90 *SHG* தற்காலிக பணியாளர்களின் பணிக்காலம் வரும் 19.04.2025 அன்று முடிவடைகிறது.

23 நிரந்தர பணியாளர்களில் ஒரு நபர் மூன்று வருட காலத்திற்கும் மேல் எவ்வித தகவலும் இன்றி விடுப்பில் உள்ளார். இரண்டு நபர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டனர். ஒருவர் பணிக்காலத்தில் காலமானார். இவர்கள் தவிர்த்து 19 நிரந்தர பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர்.

தற்போது பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப குடியிருப்புகளின் எண்ணிக்கையும் 34437லிருந்து சுமார் 40,000 வீடுகளாக பெருகியுள்ளது. கூடுதலாக்கப்பட்ட வீடுகள் மற்றும் குடும்பங்களுக்கு ஏற்பவும், தொழிற்சாலைகளிலும் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே பணிபுரிந்து வரும் 78 பணியாளர்களோடு கடந்த ஆண்டு ஆணையர் அவர்களின் ஆணையின்படியும் மற்றும் மன்ற தீர்மனத்தின் படியும் கூடுதலாக 12 நபர்கள் (சுகாதார களப் பணியில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளது) மொத்தம் 90 நபர்களை ஈடுபடுத்துவது அவசியமாகிறது.

இதன் விவரம் பின்வருமாறு

மண்டலம்-2 (மணலி) நிரந்தர பணியாளர்களின் விவரம்

| வார்டு-15 | வார்டு-16 | வார்டு-17 | வார்டு-18 | வார்டு-19 | வார்டு-20 | வார்டு -21 | வார்டு-22 | மொத்தம்- |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 1 | 2 | 7 | 1 | 2 | 2 | 19 |

| வ. எண் | வார்டு | தற்போது பணிபுரிந்து வரும் (SHG) தற்காலிக பணியாளர்கள் | மொத்தம் (SHG) தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 15 | 13 | 13 |
| 2 | 16 | 13 | 13 |
| 3 | 17 | 10 | 10 |
| 4 | 18 | 14 | 14 |
| 5 | 19 | 14 | 14 |
| 6 | 20 | 9 | 9 |
| 7 | 21 | 9 | 9 |
| 8 | 22 | 8 | 8 |
| | மொத்தம் | 90 | 90 |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2ல் சுகாதார களப் பணிக்காக 19 நிரந்தர பணியாளர்கள் பணிபுரிந்து வரும் நிலையில் சுகாதார களப் பணியின் அவசர அவசியம் கருதி *90 SHG* தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். இந்த *90 SHG* தற்காலிக தினக்கூலி பணியாளர்களின் பணிக்காலம் வரும் 19.04.2025 அன்று முடிவடைகிறது.

எனவே, மேற்கண்ட பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளும் பொருட்டு நிர்வாக நலன் கருதி 22.04.2025 முதல் 21.04.2026 வரை தினக்கூலி அடிப்படையில் ஒராண்டிற்கு காலத்திற்கு *90 SHG* பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிகாலத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின், 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையில் முதன்மை செயலர், தொழிலாளர் ஆணையர், சென்னை-6ன் கடித எண்,செ,3/5476/2024-3 நாள்02-05-2024 படியும், *For Additional Chief Secretary to Government labour Welfare and Skill Decvlopment Letter No. 6152/J2/2023-9 date-03-07-*2024ன்படி ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ.753/- என்ற அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பணி விவரம் | தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை | ஒப்பந்தம் காலம் | தினக்கூலி | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | சுகாதார களப்பணிகள் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணிகள் | 90 | 22.04.2025 முதல் 21.04.2026 வரை 365 நாட்கள் | ரூ.753/- | ரூ.2,47,36,050/- |

எனவே,

1. மண்டலம்-2-ல் 22.04.2025 முதல் 21.04.2026 வரை சுகாதார களப் பணி, கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணி மேற்கொள்ள 90 பணியாளர்களை *SHG* சுய உதவிக் குழுக்களின் மூலம் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,

2. இந்த பணியாளர்களுக்கு 22.04.2025 முதல் 21.04.2026 வரை தேவையான செலவீனத் தொகை ரூ.753 *X 90 X 365* = ரூ. 2,47,36,050/- *(Rupees Two crore Fourty Seven lakh thirty Six thousand and fifty only)* யை கணக்கு தலைப்பு எண். 30-*32-02 (ANTI MOSQUITO OPERATION) 210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF-HEALTH WORKS)*-ன் கீழ் செலவினம் செய்யவும்,
3. *SHG* சுய உதவிக் குழுவின் கீழ் குழு உறுப்பினர்கள் இருப்பதால் வருமான வரி பிடித்தம் செய்வதிலிருந்தும் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
4. *90 SHG* சுய உதவிக் குழுவின் மூலம் சுகாதார பணியாளர்களை சுகாதார பணியில் ஈடுபடுத்தவும்,
5. சுகாதார பணிக்கான குழு உறுப்பினர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு ஆணையர் அவர்களின், 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின்படி நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.753/- ஐ வழங்குவற்கு நிர்வாக அனுமதியும்,
6. தற்போது சுகாதார நல பணியாளர்களுக்கு ஆணையர் அவர்களின் 2024- *2025* சுற்றறிக்கையின்படி நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி 753/- வழங்கப்பட்டு வருகிறது அடுத்த ஆண்டு 2025-2026 ஆம் ஆண்டிற்கான ஆணையர் அவர்களால் நிர்ணயம் செய்து உயர்த்தி வழங்கும் தொகையை வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 14.03.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.03.2025 அன்று தீர்மான எண்.056/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 135/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.4.ந.க.எண்.சி2/0228 /2025**

**ஆணையர் அவர்களின் 06.02.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:303/2025** **பொருள் எண்.72**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4 - கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிக்கு - போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் - அண்டை வீட்டு குழுக்கள் (SHG) கீழ் 1147 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர் - அப்பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2025 உடன் முடிவடைவதால் மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.03.2025 முதல் 31.05.2025 வரை மொத்தம் 1147 தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக தூய்மை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், ஆர்.கே.நகர், வியாசர்பாடி மற்றும் இராயபுரம் போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும், மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை ஆகிய நெடுஞ்சாலைகளை உள்ளடக்கிய 35.5 கி.மீ நீளமுள்ள 49 பேருந்து சாலைகள் மற்றும் 393.65 கி.மீ நீளமுள்ள 2846 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் அரசு சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, தண்டையார்பேட்டை ரயில் நிலையம், காசிமேடு சுடுகாடு, முல்லை நகர் சுடுகாடு, சீதாராம் நகர் சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக்கழிப்பிடங்கள் (சுலாப்) , மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மண்டலம்-4, கோட்டம் – 34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் பணிபுரியும் 561 நிரந்தர பணியாளர்களில் (ஓய்வு, பணியிடமாற்றம், பதவி உயர்வு மற்றும் இறப்பு) காரணமாக 68 பணியாளர்கள் போக மீதம் உள்ள 493 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 1147 அண்டை வீட்டு குழுக்கள் (SHG) பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர், சென்னை-6ன் கடித எண். செ3/5476/2024-3, நாள்:02.05.2024ல் தெரிவித்துள்ள *corrigendum*ல் அரசாணை எண்.62ல் சுட்டிக்காட்டப்பட்ட *The DA is linked to the Average Consumer Price Index number of the city for the year 2019/That is 161 points an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance*-ன்படி அகவிலைப்படி ரூ.6593/-ம் மற்றும் *unskilled* தொழிலாளர்களுக்கு *Minimum Rate of Basic Wages* ன் படி ஒரு மாதத்திற்கு (ரூ.13000/- + ரூ.6593/-) ஆக மொத்தம் ரூ.19593/- மாத கூலி கணக்கிட்டு தினக்கூலியாக ரூ.753/- என கணக்கிடப்பட்டுள்ளது-

கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், 10.07.2024 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை, மண்டலங்களிலும் (கல்விதுறை உட்பட) அண்டை வீட்டு குழுவின் (SHG) மற்றும் NMR கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் unskilled தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே, 05.07.2023 முதல் பெற்று வந்த மாத wages ரூ.17,867/- என்ற விகிதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.687/- வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், 01.04.2024 முதல் மாதாந்திர wages ரூ.19593/- என்ற வீதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.753/- என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.237/2024, நாள்:27.11.2024-ன்படி, மண்டலம்-4, தூய்மை துறையில் கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் மேற்கண்ட தூய்மை பணிகள் மேற்கொள்ள 1147 தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள 01.11.2024 முதல் 28.02.2025 வரை மூன்று மாத காலத்திற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர்-4 அவர்களின் ஒப்புதலில் மேற்கண்ட 1147 SHG தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2025 அன்றுடன் முடிவடைவதால், மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.03.2025 முதல் 31.05.2025 வரை மொத்தம் 1147 SHG பணியாளர்களை தூய்மை பணியில் ஈடுபடுத்த ஆணையர் அவர்களுக்கும் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மண்டல அலுவலர்-4 அவர்களின் ஆணை பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

**அட்டவணை**

**துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு**

| வ.எண் | கோட்டம் | மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை | மன்றத்தீர்மானம் பெறப்பட்ட SHG பணியாளர்கள் எண்ணிக்கை | ஓய்வு/இறப்பு காலிபணியிடங்கள் | தலைமை பொறியாளர் (SWM) அவர்களின் சுற்றறிக்கை நாள்:10.08.2023 (தி.க.மே.து.ந.க.எண்.அ 3/3974/2023) | தோராய செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | 34 | 165 | 27 | 133 | 5 | ரூ.753/- | ரூ.753/- x 1147 (SHG தூய்மை பணியாளர்கள்) x 92 நாட்கள் = ரூ.79459572/- ( 01.03.2025 முதல் 31.05.2025 வரை) |
| 2 | 35 | 150 | 36 | 108 | 6 | | |
| 3 | 36 | 130 | 18 | 107 | 5 | | |
| 4 | 37 | 140 | 21 | 112 | 7 | | |
| 5 | 38 | 103 | 31 | 69 | 3 | | |
| 6 | 39 | 87 | 30 | 51 | 6 | | |
| 7 | 40 | 93 | 31 | 55 | 7 | | |
| 8 | 41 | 101 | 44 | 46 | 11 | | |
| 9 | 42 | 102 | 48 | 47 | 7 | | |
| 10 | 43 | 100 | 30 | 68 | 2 | | |
| 11 | 44 | 94 | 25 | 69 | 0 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | 45 | 114 | 29 | 84 | 1 | | |
| 13 | 46 | 99 | 18 | 77 | 4 | | |
| 14 | 47 | 88 | 35 | 51 | 2 | | |
| 15 | 48 | 93 | 52 | 38 | 3 | | |
| 16 | KDG | 55 | 18 | 32 | 5 | | |
| மொத்தம் | | 1714 | 493 | 1147 | 74 | | |

எனவே, மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 1147 தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள 01.03.2025 முதல் 31.05.2025 வரை மூன்று மாத காலத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| (அ) | மண்டலம் -4 , கோட்டம் -34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகள் மேற்கொள்ள 1147 SHG பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 01.03.2025 முதல் 31.05.2025 வரை மூன்று மாத காலத்திற்கு எடுத்துக்கொள்ள அனுமதியும் (90 நாட்கள்), |
| (ஆ) | கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 10.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் 1147 நபர்கள் x 92 நாட்கள் x ரூ.753/- = ரூ.7,94,59,572/- (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று எழுபத்து இரண்டு மட்டும்) அனுமதியும், |
| (இ) | தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் SHG தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை மண்டல அலுவலர் -4 அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும், |
| (ஈ) | தேவைப்படும் பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் மண்டல அலுவலர்-4 அவர்கள் மூலமாக பணியமர்த்திக்கொள்ளவும். |
| (உ) | தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும். |
| (ஊ) | நிதி ஆலோசகர் மூலமாக ரூ.7,94,59,572/- (தலைப்பு எண்: 40-41-03 payment to casual staff conservancy works, கணக்கு குறியீடு எண்.210-100-601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும், |
| (எ) | மன்ற தீர்மானம் பெறப்பெற்ற 1147 தற்காலிக பணியாளர்களில் விடுப்பு துய்க்கும் பட்சத்தில் 10 சதவீதம் பதிலி பணியாளர்களை மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-4 மூலமாக நியமித்துக்கொள்ளவும். |

மேற்கண்ட அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.037/2025, நாள்.14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."
>
> "17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.120/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5நக.எண்.சி2/0165A/2024**

**ஆணையர் அவர்களின் 08.01.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:304/2025** **பொருள் எண்.73**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5 - கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள கோட்டங்களில் இயங்கி வரும் 47 சென்னை பள்ளிகளின் சுற்றுப்புறம், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள 131 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை 01.06.2024 முதல் 30.04.2025 வரை 11 மாதங்களுக்கு பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 21.06.2023 நாளிட்ட ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள கோட்டங்களில் இயங்கி வரும் 47 சென்னை பள்ளிகளின் சுற்றுப்புறம், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள 94 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு மாதத்திற்கு 23 நாட்கள் பணி நாட்களாக நிர்ணயம் செய்து பணி மேற்கொள்ளவும் அதற்கு நாள் ஒன்று ஊதியம் ரூ.424/- நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மன்றத்தீர்மான எண்.014/2024, நாள்.31.01.2024ன்படி, பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 30.04.2024 அன்றுடன் பணி முடிவடைந்துள்ளது.

கல்வித்துறையின் 07.02.2024 நாளிட்ட சுற்றறிக்கையில் சென்னை பள்ளிகள்/ அரசு பள்ளிகளில் உள்ள வகுப்பறைகளின் எண்ணிக்கை, கழிப்பறைகளின் எண்ணிக்கைக்கேற்ப தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி அப்பணியாளர்களுக்கு தினக்கூலியாக ரூ.687/- வழங்குமாறு மண்டலம்-1 முதல் 15 வரையிலான மண்டல அலுவலர்களை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மைத்துறையின் 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின்படி தற்காலிக துப்புரவு பணியாளர்களின் ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.687/- லிருந்து 01.04.2024 முதல் தினக்கூலி ரூ.753/- உயர்த்தி மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ எண். | பணியாளர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | 01.06.2024 முதல் 30.04.2025 வரை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 131 | ரூ.753/- | 286 நாட்கள் | ரூ.2,82,11,898 |

இதனை தொடர்ந்து 01.06.2024 முதல் 30.04.2025 வரை 131 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.753/- வீதம் 753 X 286 X 131 = ரூ.2,82,11,898/- (எழுத்தால் இரண்டு கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து பதினோராயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று எட்டு மட்டும்) தேவைப்படுவதால் இத்தொகையை கணக்கு குறியீடு எண்.20-21-07 மற்றும் கணக்கு

தலைப்பு எண்.230-150-500 தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்து தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே,

1. மண்டலம்-5ல் துப்புரவு பணிகளை மேற்கொள்ள 131 பணியாளர்களை 11 மாதங்களுக்கு 01.06.2024 முதல் 30.04.2025 வரை தினக்கூலி அடிப்படையில் தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,
2. 131 தற்காலிக பணியாளர்களுக்கு, 11 மாதங்களுக்கு 01.06.2024 முதல் 30.04.2025 வரை ஊதியம் வழங்கிட கணக்கு குறியீடு எண்.20-21-07 மற்றும் கணக்கு தலைப்பு எண்.230-150-500ல் 753 X 286 X 131 = ரூ.2,82,11,898/- (எழுத்தால் இரண்டு கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து பதினோராயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று எட்டு மட்டும்) மேற்கொள்ளவும்,
3. 2024-25ம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.2,00,00,000/- நிதியில் இதுவரை செலவு செய்யப்பட்ட ரூ.1,82,05,636/- போக மீதமுள்ள தொகை ரூ.17,94,364/- தவிர்த்து ரூ.2,64,17,534/- நிதி ஒதுக்கீடு செய்யவும்,

இதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, Proposed Construction of Division Office Building at Paper Mills Road in Div-67, Zone-06 கட்டும் பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 4.93 % அதிகம், ஒப்பத் தொகை ரூ.8,11,85,708.44 மற்றும் 18 சதவீதம் சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,46,13,427.51,ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.9,57,99,136.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் **தொகை** விவரம் (+)4.93 % சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ.7,73,71,303.19 | ரூ. 8,11,85,708.44 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ.1,39,26,834.57 | ரூ. 1,46,13,427.51 |
| 3 | (இ) த.நா.க.தொ. ந.வா.1% | ரூ 7,73,713.03 | ரூ 7,73,713.03 |
| 4 | (ஈ) தரக்கட்டுப்பாடு | ரூ. 7,73,713.03 | ரூ. 7,73,713.03 |
| 5 | (உ)ஆலோசனைக்கட்டணம் 2.50% | ரூ. 19,34,282.58 | ரூ. 19,34,282.58 |
| 6 | (ஊ)மின் இணைப்பு கட்டணம் | ரூ. 50,000.00 | ரூ. 50,000.00 |
| 7 | (எ) எதிர்பாரா செலவு | ரூ. 19,30,153.59 | ரூ. 19,30,153.59 |
| | | ரூ.9,67,60,000.00 | |
| இப்பணிக்காக ஒப்புதல் அளிக்கப்படும் மொத்த தொகை | | | **ரூ.**9,99,00,000.00 |

இப்பணிக்கு 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி (+)4.93% அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.9,99,00,000.00ஆகும்.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ. 9,99,00,000.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. Proposed Construction of Division Office Building at Paper Mills Road in Div-67, Zone-06 கட்டும் பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.93% அதிகம், ஒப்பத் தொகை ரூ.8,11,85,708.44 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,46,13,427.51ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.9,57,99,136/-க்கு (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பத்து ஏழு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து நூற்று முப்பத்து ஆறு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. இப்பணிக்கான மொத்த செலவீனத் தொகையான ரூ.9,99,00,000.00-யை Ward Office Building (412 - 400 - 504)-ன் நிதியில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“14.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.130/2025, நாள். 14.03.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 118/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**சி.தி.து.ந.க.எண்.பி1 / 01366 / 2017**

**ஆணையர் அவர்களின் 17.03.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:326 / 2025** **பொருள் எண்.95**

**பெருநகர சென்னை மாநகராட்சி - சிறப்பு திட்டங்கள் துறை - சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (CMRL) சென்னை பிராட்வே பேருந்து நிலையத்தில் குறளகத்தை உள்ளடக்கிய பல்வேறு போக்குவரத்து இணைப்புகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வசதிகளை கொண்ட பல்நோக்கு போக்குவரத்து பேருந்து வளாகம் (Multi-Model Facility Complex) அமைக்கும் பணியினை மேற்கொள்ள - ரூ.822.70 கோடிக்கு திருத்தப்பட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டு - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு காலம் சார்ந்த கடனாக ரூ.506.83 கோடி தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு (TUFIDCO) மேம்பாட்டுக் கழகம் வழங்கும் வகையில் தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு *(TUFIDCO)* மேம்பாட்டுக் கழகத்தால் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பிராட்வே பேருந்து நிலையத்தில் குறளகத்தை உள்ளடக்கிய பல்வேறு போக்குவரத்து இணைப்புகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வசதிகளை கொண்ட பல்நோக்கு போக்குவரத்து பேருந்து வளாகம் *(Multi-Model Facility Complex)* அமைக்கும் பணியினை சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் *(CMRL)* நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

அதன்படி, சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் *(CMRL)* நிறுவனம் விரிவான ஆய்வு மேற்கொண்டு பிராட்வே பேருந்து நிலையத்தில் குறளகத்தை உள்ளடக்கிய பல்வேறு போக்குவரத்து இணைப்புகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வசதிகளை கொண்ட பல்நோக்கு போக்குவரத்து பேருந்து வளாகம் *(Multi-Model Facility Complex)* மேம்பாட்டிற்கான வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்திற்கான ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.*G.O. (Ms) No.111*, நாள்.30.08.2024ன்படி பேருந்து நிலையத்தில் குறளகத்தை உள்ளடக்கிய பல்வேறு போக்குவரத்து இணைப்புகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வசதிகளை கொண்ட பல்நோக்கு போக்குவரத்து பேருந்து வளாகம் அமைக்கும் பணிக்கு திருத்தப்பட்ட நிர்வாக அனுமதி ரூ.822.70 கோடிக்கு பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின் அட்டவணை-5ல் இத்திட்டத்திற்கான நிதி முறைகள் கீழ்கண்டுள்ளவாறு

| பணியின் விவரங்கள் | தொகை (கோடியில்) |
|---|---|
| தமிழ்நாடு அரசின் மூலமான, பேருந்து நிலைய திட்டப் பகுதிக்கு இடைப்பட்ட உபநிதியாக *(VGF)* | ரூ.200.84 |
| சென்னை பெருநகர வளர்ச்சியின் பங்களிப்பாக நடைபாதை மற்றும் பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து வசதிக்காக *(MMI)* | ரூ.115.03 |
| பெருநகர சென்னை மாநகராட்சிக்கு காலம் சார்ந்த கடன் *(TERM LOAN)*, தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் *(TUFIDCO)* மூலமாக | ரூ.506.83 |
| மொத்தம் | ரூ.822.70 |

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.*G.O.(Ms) No.145*, நாள்.22.10.2024ன்படி 2024-25ஆம் நிதியாண்டிற்கான மாநில நகர்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் *(SUIDF)* கீழ் இத்திட்டத்திற்கு ரூ.506.83 கோடி காலம் சார்ந்த கடனாக தமிழக அரசு வழங்கியுள்ளது. இக்கடனை திருப்பி செலுத்தும் காலத்துடன் ஆண்டிற்கு *4%* வட்டி விகிதத்தில் 20 ஆண்டுகள் திருப்பி செலுத்தும் கட்டமைப்பின் இரண்டு தவணைகளுடன், (தவணை-1) 1 முதல் 8 ஆண்டுகள் மற்றும் (தவணை-*2) 9* முதல் *20* ஆண்டுகளாகும்.

இது தொடர்பாக, தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு *(TUFIDCO)* மேம்பாட்டு வாரியத்திடமிருந்து 12.11.2024 நாளிட்ட கடிதம் பெறப்பட்டு, முதல் தவணையினை செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சியும் *(GCC)* தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு *(TUFIDCO)* மேம்பாட்டு வாரியமும் கடன் ஒப்பந்தத்தை மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் மற்றும் எக்ஸ்ரோ *(Escrow)* கணக்கு தொடர்பான ஆவணங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ஏற்பின், காலம் சார்ந்த கடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு *(TUFIDCO)* மேம்பாட்டுக் கழகம் கீழ்கண்ட பரிந்துரைக்கப்பட்ட தீர்மானங்களுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் சென்னை பிராட்வே பேருந்து நிலையத்தில் குறளகத்தை உள்ளடக்கிய, பல்வேறு போக்குவரத்து இணைப்புகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வசதிகளை கொண்ட பல்நோக்கு போக்குவரத்து பேருந்து வளாகம் *(Multi-Model Facility Complex)* அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். *(Ms) No.145*, நாள்.22.10.2024 மற்றும் அரசாணை எண் *(Ms) No.111*, நாள்.30.08.2024 ஆகிய தேதிகளில் முறையே பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு காலம் சார்ந்த கடனாக ரூபாய். 506.83 கோடி தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு *(TUFIDCO)* மேம்பாட்டுக் கழகம் வழங்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
2. பிராட்வேயில் உள்ள பேருந்து முனையம் குறளகத்துடன் ஒருங்கிணைந்த பல்நோக்கு வணிக வளாகம் அமைக்கும் பணியிணை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு *(TUFIDCO)* மேம்பாட்டுக் கழகத்துடன் செயல்படுத்த வேண்டிய கடன் உடன்படிக்கை உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகள் மற்றும் இதனை செயல்படுத்த பொது அதிகாரம் உட்பட மற்ற அனைத்து சம்பிரதாயங்களையும் செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையருக்கு அதிகாரம் உள்ளது என தீர்மானிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3. இத்திட்டத்தினை செயல்படுத்தி இதன் மூலம் வருவாய்தரக்கூடிய சொத்துவரி, தொழில் வரி மற்றும் பிறவருவாய் போன்றவை பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு *(TUFIDCO)* மேம்பாட்டுக் கழகத்திற்கு காலாண்டு / மாதம் வட்டியுடன் திருப்பி செலுத்தக்கூடிய உறுதிபாட்டின்படி எஸ்க்ரோ கணக்கின் வாயிலாக இத்திட்டத்தின் கடன்கள் மற்றும் அனைத்து நிலுவைத் தொகையினை செலுத்தும் வகையில் வழிவகை செய்யப்படும்.

4. தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு *(TUFIDCO)* மேம்பாட்டுக் கழகத்தின் சார்பாக முன் மொழிவு செய்யப்பட்ட கடனுக்கான அசல், வட்டி மற்றும் பிற தொகைகளை திருப்பி செலுத்துவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்கள் சென்னை மாநகர ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வழிவகைகள் செய்ய அதிகாரம் அளிக்கப்படுகிறது.

5. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் *(TUFIDCO)* இந்த திட்டத்திற்காக பெறப்பட்ட கடன்களுக்கு செலுத்த வேண்டிய அசல், வட்டி மற்றும் இதர நிதியை திருப்பிச் செலுத்த தவறும் பட்சத்தில் தமிழ்நாடு அரசால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வரக்கூடிய நிதியிலிருந்து மாநில நிதி குழுவின் பரிந்துரையின்படி அதிகாரப்பகிர்வு மானியம் செலுத்துதல், பிற மானியங்கள் மூலம் சரிசெய்வதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

6. பெருநகர சென்னை மாநகராட்சியில் பிராட்வே பேருந்து நிலையத்தில் பல்நோக்கு ஒருகிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம் அமைப்பதற்கு தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு *(TUFIDCO)* கழகத்தின் மூலம் காலம் சார்ந்த கடனாக பெறப்பட்ட நிதியை திருப்பி செலுத்துவதற்கு ஏதுவாக சொத்து வரி, தொழில் முறைவரி போன்றவற்றில் திட்டமிட்ட உயர்வை செயல்படுத்த சாத்தியக் கூறுகள் இல்லை எனும் பட்சத்தில் இதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஏதேனும் நிதி பற்றாக்குறை ஏற்பட்டு, இதனால் *TUFIDCO*க்கு கடனை திருப்பிச் செலுத்துவதில் பாதிப்பு ஏற்படாது என்ற உறுதிமொழியை பெருநகர சென்னை மாநகராட்சி சமர்ப்பிக்க வேண்டும். இதனை ஈடுகட்டும் விதமாக அத்தகைய சந்தர்ப்பங்களில் மாநில நிதிக்குழுவின் *(SFC)* நிதியிலிருந்து நிலுவைத் தொகையை முதல் முன்னுரிமை அடிப்படையில் கழித்துக்கொள்ள அரசாங்கம் அனுமதிப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இப்பொருள் சம்பந்தமாக, மன்ற தீர்மான எண்.603/2024, நாள்.30.12.2024, தீர்மான நகல் தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு *(TUFIDCO)* மேம்பாட்டு கழகத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதி குழுமம் மூலம் காலம் சார்ந்த கடனை பெறுவதற்கு மன்ற தீர்மானத்தின் நகல் அனுப்பப்பட்டது. அவ்வாறு அனுப்பப்பட்ட மன்ற தீர்மானத்தில் சிறு திருத்தங்கள் செய்து மீண்டும் மன்றத்தின் ஒப்புதல் பெற்று சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் *(TUFIDCO)* மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஏற்பின், காலம் சார்ந்த கடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு *(TUFIDCO)* மேம்பாட்டுக் கழகம் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் ஏற்கனவே மன்ற ஒப்புதல் பெற்ற தீர்மானத்தில் (எண்.603/2024, நாள்.30.12.2024) திருத்தங்கள் மேற்கொண்டு ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 14.03.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 17.03.2025 அன்று தீர்மான எண்.155/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 142/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.14.வ.து.ந.க.எண்.ஆர் / 01921 / 2024**

**ஆணையர் அவர்களின் 28.02..2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 327 / 2025** **பொருள் எண்.96**

**ஏரியா சபா - பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 14, வார்டு - 183 - தற்போது பொறுப்பில் உள்ள வார்டு -183 ன் ஏரியா சபா – 7ன் வார்டு குழு உறுப்பினர் திரு . எம் . சுவாமிநாதன் அவர்களை மாற்றம் செய்துவிட்டு புதிய வார்டு குழு உறுப்பினராக திரு. எஸ் . கோட்டீஸ்வரன் அவர்களை நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி.**

அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.06.2022 மற்றும் அரசிதழ் எண். *358*, நாள.24.06.2022ல் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு நகர உள்ளாட்சி (வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபை) விதிகள் 2022 ன் படி, பெருநகர மாநகர முனிசிபல் சட்டம், 1919 பிரிவு 5 *C* ல் வார்டு கமிட்டி தோற்றுவித்தல் தொடர்பாகவும், பிரிவு *5F*ல் ஏரியா சபை தோற்றுவித்தல் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சிகளில் வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபை தோற்றுவித்தல் தொடர்பாக அரசாணை (நிலை) எண்.92 ல் விதிகள் உருவாக்கப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதிகள் 24 ஜுன் 2022 முதல் அமலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது . அதன் விவரம் பின்வருமாறு .

**வார்டு குழுவின் அமைப்பு :**

1. ஒரு வார்டில் எத்தனை ஏரியாக்கள் உள்ளனவோ, அத்தனை உறுப்பினர்கள் அந்த வார்டு குழுவில் இருக்க வேண்டும் .
2. ஒவ்வொரு ஏரியாவிலிருந்து ஒவ்வொரு உறுப்பினரை மன்றம் பரிந்துரைக்கும்.
3. வார்டின் பிரதிநிதியான, மன்ற உறுப்பினர் அந்த வார்டு குழுவிற்கு தலைவர் *(Chairperson)* ஆவார் .

**வார்டு குழு உறுப்பினரின் தகுதிகள் மற்றும் தகுதியின்மைகள் :**

வார்டு கவுன்சிலராக மற்றும் மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கும், பணிபுரிவதற்கும், வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகுதியின்மைகளே இந்த சட்டத்தின் கீழ் வார்டுகுழு உறுப்பினராக, தேர்ந்தெடுக்கப்படுவதற்கும், பணிபுரிவதற்கும் பொருந்தும்.

**வார்டு குழு உறுப்பினரை பரிந்துரைப்பது:**

- வார்டின், ஒவ்வொரு ஏரியாவின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களுள் ஒருவரை மன்றம், வார்டு குழு உறுப்பினராக பரிந்துரைக்க வேண்டும் .
- இந்த பரிந்துரையின் அடிப்படையில், பரிந்துரைக்கப்பட்டவரிடமிருந்து செயல்படுத்தும் அதிகாரி படிவம் *1*ல் ஒப்புதல் பெற வேண்டும் .
- பிறகு, அவர்களின் விவரங்களை செயல்படுத்தும் அதிகாரி பார்க்க வேண்டும்.

- மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் தகுதி பெற்றவர்களின் பட்டியல் உறுதிப்படுத்துதலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- மன்றம் உறுதிப்படுத்தியதும், செயல்படுத்தும் அதிகாரி பரிந்துரைப்பிற்கான உறுதி ஆவணத்தை ( *Declaration of Nomination* ) பரிந்துரைக்கப்பட்டோருக்கு படிவம்-2ல் வழங்க வேண்டும்.
- தகுதியற்றவர் பரிந்துரைக்கப்பட்டிருந்தால், செயல்படுத்தும் அதிகாரி அதனை மன்றத்திடம் தெரிவித்து, அவருக்கு பதிலாக வேறு ஒருவரை பரிந்துரைக்க கோர வேண்டும். புதியதாக பரிந்துரை வந்த பின்பு , அவருடைய தகுதி மற்றும் விவரங்களை சரி பார்த்த பின்பு, அடுத்த கூட்டத்தில் தகுதி பெற்றவர்களின் பட்டியலை மன்றத்தின் முன் வைக்க வேண்டும் .

மேற்சொன்ன அரசு அறிவுரை மற்றும் சட்ட விதிகளின் படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14 க்குட்பட்ட வார்டு – *183*ன் 10 ஏரியா சபாவிற்கு பின் வருமாறு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு (மன்றத்தீர்மான எண்.*078/2023*, நாள்.*14.08.2024*) மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது .

**<u>தற்போதுள்ள வார்டு 183 ன் 10 ஏரியா சபா உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு .</u>**

| ஏரிய சபா எண் | உறுப்பினர் பெயர் |
|---|---|
| *1* | *P.S.* ஆறுமுகம் |
| *2* | *K.* சோமு |
| *3* | *D.* விஜயபாலன் |
| *4* | *M.* மகேஷ்வரன் |
| *5* | *R.M.* மஹபுப் |
| *6* | *T.R.* ராமகிருஷ்ணன் |
| *7* | *P.* சுவாமி நாதன் |
| *8* | *M.* ஹரிபாஸ்கரன் |
| *9* | *R.* ஆனந்தன் |
| *10* | *S.* கமலக்கண்ணன் |

மேற்சொன்ன *10* ஏரிய சபா வார்டு குழு உறுப்பினர்களில் ஏரியா சபா – *7* ன் வார்டு குழு உறுப்பினர் திரு.சுவாமிநாதன் என்பவர் *VGP Golden Sea View Residents Welfare Association*ன் உறுப்பினராக இல்லாத காரணத்தாலும், அவருக்கு மாற்றாக திரு. கோட்டீஸ்வரன் என்பவரை எரியாசபா – *7* ன் வார்டு குழு உறுப்பினராக நியமனம் செய்யுமாறு பொது நல சங்கத்தின் கோரிக்கை ஏற்குமாறு வார்டு – *183* ன் மன்ற உறுப்பினர் மற்றும் வார்டு குழு தலைவர் ( *Chair person* ) அவர்கள் பரிந்துரை செய்து மனு அளித்துள்ளார் .

மேற்படி வார்டு – 183 மன்ற உறுப்பினர் மற்றும் வார்டு குழு தலைவர் அவர்களின் பரிந்துரையை ஏற்று ஏரியாசபா -7 ன் வார்டு குழு உறுப்பினராக பரிசீலிக்கும் பொருட்டு திரு.*S.*கோட்டீஸ்வரன் என்பவரின் விவரங்கள் அடங்கிய படிவம்–1 இத்துடன்

இணைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மண்டலம்-14ன் வார்டு குழு தீர்மானம் (தீர்மான எண்.179, நாள்.14.08.2024) பெறப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14, வார்டு-183ன் ஏரியா சபா-7ன் வார்டு குழு உறுப்பினர் திரு. சுவாமி நாதன் என்பவருக்கு பதிலாக திரு. S. கோட்டீஸ்வரன் என்பவரை (வார்டு-183 ன் ஏரியாசபா -7ன் வார்டு குழு உறுப்பினராக நியமனம் செய்ய, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.03.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 141/2025, நாள்.17.03.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>தி.க.மே.து.ந.க.எண்.அ7 / 0793 / 2025</u>**

**<u>ஆணையர் அவர்களின் 15.03.2025 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண் : 328 / 2025** **பொருள் எண்.97**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத் துறை - கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மை விதிகள், 2016 - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை திறனுடன் கையாளும் வகையில் வரைவு கட்டுமானம் மற்றும் இடிப்பாட்டு கழிவுகள் மேலாண்மை வழிமுறைகள் 2025 உருவாக்கப்பட்டுள்ளது - ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் அறிவிக்கை வெளியிடப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி வலைதளத்தில் வரைவு கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மை விதிகள் 2025 பதிவேற்றம் செய்யப்பட்டது - பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டது - கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மை வரைவு வழிகாட்டுதல் 2025க்கு மன்றத்தின் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியானது சுமார் 426 ச.கி.மீ பரப்பளவில் 15 மண்டலங்களில் 200 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்த பகுதிகளில் நாள்தோறும் சுமார் 6150 மெ.டன் அளவிற்கு திடக்கழிவுகள் உருவாக்கம் செய்யப்படுகிறது. இது தவிர்த்து தினசரி சுமார் 800 மெ.டன் அளவிற்கு கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் உருவாகின்றன. மேற்கண்ட, கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் பெரும்பாலும் முறையற்ற வகையில் சாலை ஓரங்கள், நடைபாதைகள், காலி மனைகள் மற்றும் மயான பூமி ஆகிய இடங்களில் பொதுமக்களால் கொட்டப்பட்டு வருகிறது.

சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 (மத்திய சட்டம் 29, 1986) பிரிவு 3,6 மற்றும் 25ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை நிர்வகிப்பதற்காக, திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ மத்திய அரசு உருவாக்கியுள்ளது. கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை விதிகள், 2016 ஒவ்வொரு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தும். இது அவர்களின் பிராந்திய பகுதிக்குள், இந்த விதிகளை செயல்படுத்துவதற்கும், கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், பிரித்தெடுத்தல், போக்குவரத்து, செயலாக்கம் மற்றும் அகற்றுவதற்கான எந்தவொரு உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கும் பொறுப்பாகும்.

*TNULB ACT 2023* இன் பிரிவு *199* இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி மற்றும் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை விதிகள், *2016* வழிகாட்டு முறைகள் ஆகியவற்றை பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை வரைவு வழிகாட்டுதல்கள் *2025* தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவு வழிகாட்டு முறைகளை செயல்படுத்துவதற்கு முன்னர் பொதுமக்களின் ஆலோசனைகள் பெறுவதற்காக ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் கடந்த 16.02.2025 அன்று அறிவிக்கையும், பெருநகர சென்னை மாநகராட்சி வலைதளத்தில் வரைவு கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மை வரைவு வழிகாட்டுதல்கள் 2025-ம் பதிவேற்றம் செய்யப்பட்டது. 30 நாட்கள் முடிவுற்ற பிறகு பொதுமக்களிடமிருந்து கீழ்கண்ட ஆலோசனைகள் மற்றும் பதில்கள் பெறப்பட்டன:-

| Sl.No | Date | Feedback / suggestion received from | Feedback / suggestion / Comments |
|---|---|---|---|
| 1 | 16.02.2025 | Chandrasekaran | Debris may be removed by contractors after payment to debris creators and debris may be sold to buyers as in the case of sand. Contractors may be selected on tender basis by PWD. This is my humble suggestion |
| 2 | 16.02.2025 | Govindaram Varma | Today I noticed that public may given their suggestions regarding disposal of construction debris by builders and individuals through Dhinathanthi tamil news paper dated 16.2 2025. In this regard I am one of individual house owner wish to give my suggestion as any construction debris by individual house owner which encroaching the corporation Road should inform to the corporation through online and get transport facilities to clear the debris based on payment according to the weight of debris. My kind request is to establish online complaint like CMWSSB and TNEB which is useful to keep the street clean and avoid the encroachment<br>Of public Road. Thank you very much for GCC and Tamil Nadu Administrator given an opportunity |
| 3 | 17.02.2025 | Govindasamy | அபராதத்துடன் சட்டங்கள் வகுக்க வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியின் இப்படிபட்ட ஏற்பாடுகள் மிகவும் வரவேற்கக்கூடியது. |
| 4 | 17.02.2025 | Ramaswamy | கட்டுமானம் கழிவுகளை கிரசர் மூலம் சிறு தூளாக்கி அதையும் சிமெண்டையும் சேர்த்து செங்கலாக செய்ய வேண்டும். அதை வார்டுக்கு ஒன்று வீதம் அமைக்கலாம். இதைத்தனியாரிடம் காண்டிராக்ட் விட்டால் மாநகராட்சிக்கு வருமானம் கிடைக்கும் கட்டுமானம் இடிப்பவர்கள் இவர்களை தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்யலாம். |

| | | | |
|---|---|---|---|
| 5 | 17.02.2025 | R.D. Selvaraj | There should be one app. It allows to upload the available Debris. Someone require that can purchase through the app.We are planning Chenglepet to Tambaram 4 th lane with the coordination debris be allowed to Drop in the Area Similarly Villupuram Mayiladuthurai Double line Railway route, the waste be allowed to Drop. Similarly to there is burial grounds For Animal big and small Buffalo and Rats |

மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் வரைவு வழிகாட்டுதலில் சேர்க்கப்பட்டுள்ளது. உதாரணமாக *APP*-ல் பதிவு செய்வதற்கும், *Online*-ல் புகார் அளிப்பதற்கும் மற்றும் மறுசுழற்சி முறையில் பொருட்களை விற்பதற்கும் இதில் அடங்கியுள்ளது.

**C & D Waste (Charge and Penalties) – Comparison with other cities / States**

கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மைக்கான வழிக்காட்டுதல்கள் ஹைதராபாத், பெங்களூரு, கர்நடாகாவில் (பெங்களூரை தவிர) போன்ற பெருநகரங்கள் பின்பற்றி வருகின்றன. அங்கு விதிமீறல்களுக்கான விதிக்கப்படும் தொகை, கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நகரம் | விதிமீறல்களுக்கான அபராதம் |
|---|---|
| ஹைதராபாத் | • ரூபாய் 25,000/- முதல்தடவை<br>• ரூபாய் 50,000/- இரண்டாம் முறை<br>• ரூபாய் 1,00,000/- + மற்றும் வாகனம் சிறைபிடிப்பு – மூன்றாம் முறை |
| பெங்களூரு | • ரூபாய் 10,000/- டன்னிற்கு - முதல்தடவை<br>• ரூபாய் 25,000/- டன்னிற்கு - இரண்டாம் முறை மற்றும் அதற்கு மேல் |
| கர்நடாகா (பெங்களூரை தவிர) | அபராதம் ரூபாய் 4,000/- முதல் 8,000/- வரை ஒரு மெட்ரிக் டன்னிற்கு (அனைத்து வகை கட்டுமானம் கழிவு உருவாக்குபவர்களுக்கு) |

தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள *"*வரைவு கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மை வரைவு வழிகாட்டுதல் *2025"* கீழ்கண்டவாறு:-

**பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை - *600003***

**கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மைக்கான வரைவு வழிகாட்டுதல்கள்**

சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 (மத்திய சட்டம் 29, 1986) பிரிவு 3,6 மற்றும் 25ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை நிர்வகிப்பதற்காக, திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ மத்திய அரசு உருவாக்கியுள்ளது. கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை விதிகள், 2016 ஒவ்வொரு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தும். இது அவர்களின் பிராந்திய பகுதிக்குள், இந்த விதிகளை செயல்படுத்துவதற்கும், கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக்

கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், பிரித்தெடுத்தல், போக்குவரத்து, செயலாக்கம் மற்றும் அகற்றுவதற்கான எந்தவொரு உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கும் பொறுப்பாகும்.

*TNULB ACT 2023* இன் பிரிவு *199* இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி மற்றும் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை விதிகள், *2016* வழிகாட்டு முறைகள் ஆகியவற்றை பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை வழிகாட்டுதல்கள் *2025* தயாரிக்கப்பட்டுள்ளது.

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்படி, கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அல்லது குப்பைகள் தனித்தனியாக சேகரிக்கப்பட்டு அகற்றப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இதன் தொடர்பாக, பின்வரும் வழிகாட்டுதல்கள் வெளியிடப்படுகின்றன.

***01.* வரையறைகள்**:- இந்த வழிகாட்டுதல்களில் இருப்பதைத் தவிர கீழ்கண்ட வரையறைகள்:

**(அ) கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள்**

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் என்றால், கட்டுமானப் பொருட்கள், குப்பைகள் மற்றும் இடிபாடுகள் ஆகியவற்றின் கழிவுகள், கட்டுமானம், புனரமைத்தல், பழுது மற்றும் இடிமானத்தின் இதில் எஃகு, அலுமினியம், மரம் மற்றும் மறுபயன்பாட்டுக்கு பெறப்படும் கழிவுகள் அல்லது மறுசுழற்சிக்காக தற்போது மீட்கப்படும் பிற கூறுகள் அடங்காது.

**(ஆ) கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் சேமிக்க நியமிக்கப்பட்ட மையங்கள்.**

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு தளம் என்பது, உரிய அளவுருக்களைப் பின்பற்றி ஒவ்வொரு மண்டலத்திற்கும் பெருநகர சென்னை மாநகராட்சியால் நியமிக்கப்பட்ட மையம் ஆகும்.

**(இ) கழிவுபொருட்கள் மற்றும் குப்பைகள் (செயலற்றவை):**

தூசி, சாலையினை சுத்தம் செய்த கழிவுகள், மழைநீர் வடிகால் வண்டல், சாம்பல், உடைந்த செங்கற்கல், சிமெண்ட் கலவை, உடைந்த கண்ணாடி, கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மற்றும் மெல்லிய மக்காத மற்றும் மக்கும் கழிவுகள் ஆகியவை அடங்கும். ஆனால் மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் நிராகரிக்கப்பட்ட அபாயகரமான கழிவுகள் (வெடிப்பொருட்கள் அதன் தொடர்புடைய பொருட்கள், எரிப்பொருள்கள், இரசாயன கலவைகள், மின்மாற்றிகள், தார் மற்றும் தார் பொருட்கள் போன்றவைகள்) மற்றும் **இணைப்புல் - *2* ல்** சுட்டிக்காட்டப்பட்ட கழிவுகள் இதில் அடங்காது.

**(ஈ) இடிமானம்**: ஒரு கட்டுமானம் அல்லது கட்டமைப்பு போன்றவற்றை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ இடித்தல் அல்லது தரைமட்டமாக்குதல்.

**(உ) அகற்றுதல்:** மறுபயன்பாடு அல்லது மறுசுழற்சிக்கு உதவும் வகையில் பிரிக்கப்பட்ட கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளைப் பெறுவது *Reverse construction* என்று பொருள்படும். மேலும் ஏற்கனவே உள்ள ஒரு கட்டமைப்பின் ஒரு பகுதி அல்லது முழுவதுமாக அகற்றும் போது இந்த நடைமுறை தவறாமல் நடைமுறைப்படுத்தப்படும்.

**(ஊ) அங்கீகரிக்கப்பட்ட வணிகர்**: உரிய ஆய்வுக்குப் பிறகு பெருநகர சென்னை மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தரப்பினர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் பட்டியலிடப்பட்ட லாரி உரிமையாளர்கள், ஒரு கட்டுமானம் உரிமையாளரின் தளத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சியால் இனங்காணப்பட்ட கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி செய்ய கூடிய கட்டுமானம் இடிபாடுகள் சேகரிக்க தகுதியுடையவர்களால் **இணைப்பு 1-ல்** குறிப்பிட்ட இடங்களுக்கு கொண்டு செல்வது.

**(எ) உரிமையாளர்**: பில்டர்/டெவலப்பர் அல்லது எந்தவொரு நபரையும் உள்ளடக்கியது. மேலும் தற்போது எந்தவொரு இடத்தையும் சொந்தமாகவோ, உரிமையாளருக்கு வாடகை செலுத்தி ஒருவரின் பயன்பாட்டில் ஆக்கிரமித்துள்ள கட்டுமானம், கட்டுமானங்களின் ஒரு பகுதி மற்றும் காலிமனை ஆகியோர் அடங்குவர். மேலும் கூட்டு ஒப்பந்தம் மூலம் உரிமைப்படுத்தப்பட்டவர், ஒரு கட்டுமானம் மற்றும் காலி மனையினை பயன்படுத்தும் நபரும் இதில் அடங்குவர்.

**(ஏ) கழிவுகள் உருவாக்குவோர்**. எந்தவொரு தனி நபர் சங்கம், இந்திய ரயில்வே, விமான நிலையம், துறைமுகம் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை உருவாக்கும் அனைத்து கட்டுமானங்கள், இடிமானங்கள் மேற்கொள்ளும் குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியோர் கழிவுகள் உருவாக்குவோர் என கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை விதிகளில் குறிப்பிடப்படுகிறது. "கழிவுகள் உருவாக்குவோர்" நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களின் வெவ்வேறு வகையான கழிவு உற்பத்தியாளர்களுக்கான வரையறைகள் கீழ்கண்டவாறு :-

*i*. **மிகச்சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர்**: சிறிய வீடுகள் பழுதுபார்ப்பு, ஓடுகள், குளியல் தொட்டிகள், அலமாரிகள், வாஷ்பேசின்கள், உடைந்த பீங்கான் சானிட்டரி பொருட்கள் மூலம் *1000* கிலோவுக்கும் குறைவாக கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை எப்போதாவது உருவாக்கும் மிகச்சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர் **இணைப்பு** 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் கழிவுகளை அளிக்கலாம்.

*ii* **சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர்**: கட்டுமானம் புதுப்பித்தல், மறுவடிவமைப்பு, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் போன்றவற்றின் போது கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் உருவாகின்றன. ஒரு திட்டத்தின் மூலம் மொத்த கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் ஒரு மெட்ரிக் டன்னிற்கு அதிகமாகவும் ஒரு நாளைக்கு 20 *MT* க்கும் குறைவாக உருவாக்குவோர் இதில் அடங்குவர். கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு உற்பத்தி ஒரு மெட்ரிக் டன் வரை இருந்தால், **இணைப்பு *3* இல்** உள்ள இடத்திலும், ஒரு மெட்ரிக் டன்னிற்கு கூடுதலாக இருந்தால் **இணைப்பு *1* இல்** உள்ள செயலாக்க மையத்திலும் அளிக்க வேண்டும்.

மேலும், ஒரு திட்டத்தின் மூலம் (அ) ஒரு மாதத்திற்கு 300 மெட்ரிக் டன் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை உருவாக்கினாலோ மற்றும்/அல்லது (ஆ) 600 சதுர மீட்டருக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவு கொண்ட கட்டுமானத்தினை

இடிக்கும் பணி மற்றும்/அல்லது (இ) கட்டுமானம் அல்லது பழுதுபார்க்கும் பணிகள் 6000 சதுர மீட்டர் பரப்பளவிற்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவை உள்ளடக்கியதாக இருந்தால், பெருமளவிலான கழிவுகள் உருவாக்குவோர் வகையினைச் சார்ந்தவராக கருதப்படும் தேவைகளுக்கு இணங்க வேண்டும்.

*iii*. **பெருமளவு கழிவுகள் உருவாக்குவோர்**: ஒரு நாளில் (அ) 20 மெட்ரிக் டன் அல்லது அதற்கு மேல் அல்லது ஒரு மாதத்திற்கு 300 மெட்ரிக் டன் கழிவு உற்பத்தி செய்யும் கழிவுகள் உருவாக்குவோர், மற்றும்/அல்லது (ஆ) 600 சதுர மீட்டருக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவு கொண்ட கட்டுமானத்தின் இடிக்கும்பணி, மற்றும்/அல்லது (இ) 6000 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டுமானம் அல்லது பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்பவர்கள் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை அவர்கள் இடத்திலேயே சேமித்து, **இணைப்பு 1ல்** குறிப்பிட்டுள்ள இடத்திற்கு சென்று சேர்க்க வேண்டும்.

***iv*. சேவை வழங்குநர்கள்**: குடிநீர், கழிவுநீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் சாலைகள், போன்ற சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் சேவை வழங்குநர்களாக வரையறுக்கப்படுகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சியில் பின்வரும் மற்றும் அவற்றின் துணை நிறுவனங்கள் "சேவை வழங்குநர்கள்" எனக் குறிக்கப்படும்:

- பொதுப்பணித்துறை *(PWD)* மற்றும் மத்திய பொதுப்பணித் துறை *(CPWD)*
- சென்னை மெட்ரோ ரயில் கார்ப்பரேஷன் *(CMRL)*
- இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் *(NHAI)*
- இந்திய விமான நிலைய ஆணையம், சென்னை *(AAI*, சென்னை)
- இந்திய ரயில்வே
- சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் *(CMWSSB)*
- சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் (*CMDA)*
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம் லிமிடெட் *(TANGEDCO)*
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் *(TNRDC)*
- தமிழ்நாடு மின்சார வாரியம் *(TNEB)*
- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார மேம்பாட்டு வாரியம் *(TNUHDB)*

*01.* கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை சிறப்பாக நிர்வகிப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியிலேயே கூடுதலாக சேவை வழங்குனர்கள் தேவைப்படின் இணைக்கலாம்.

*02.* தெருக்கள், நடைபாதைகள், மழைநீர் வடிகால்கள், பொது இடங்கள் அல்லது காலி மனைகள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் எந்த ஒரு இடத்திலும் உரிமையாளர்களால் கட்டுமானக் கழிவுகள் எந்த வகையிலும் எந்த நேரத்திலும் கொட்டக்கூடாது.

03. நீரின் போக்கு, நிலத்தடி நீர் ரீசார்ஜ் ஆகியவற்றைப் பாதிக்கும் வகையில், செயலாக்கத் தளங்களாக பெருநகர சென்னை மாநகராட்சியால் அறிவிக்கப்பட்ட **இணைப்பு - *1*** மற்றும் **இணைப்பு** 3 இல் பட்டியலிடப்பட்டுள்ள இடங்கள் தவிர, தாழ்வான பகுதிகளில் எந்த

விதமான கழிவுகளும் எந்த நேரத்திலும் கொட்டக்கூடாது. விதிமீறல்களுக்கு அவ்வப்போது குறிப்பிட்டபடி அபராதம் விதிக்கப்படும்.

*04.* ஒரு கட்டுமானத் திட்டத்தின் சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் / உரிமையாளர்கள்/ டெவலப்பர்கள், ஆகியோர்களால் உருவாக்கப்படும் கழிவுகளை அகற்றுதல்/ செயலாக்கம் ஆகியவற்றிற்கு அவர்களே பொறுப்பாவார்கள்.

*05.* பழுதுபார்க்கும் போது அல்லது சிறிய சீரமைப்பு பணியின் போது சிறிய அளவிலான கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மற்றும் குப்பைகளை உருவாக்கும் கட்டுமானம் ஆக்கிரமிப்பாளர்கள் / உரிமையாளர்கள் அனைத்து வகையான கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள், செயலாக்க முடியாத குப்பைகளை தங்கள் சொந்த வளாகத்தில் குறிப்பிட்ட இடத்தில் சேமித்து வைத்திருக்க வேண்டும். கட்டுமானம் வளாகத்தில் இருந்து கட்டுமான மற்றும் இடிப்பாட்டு கழிவுகளை அகற்றுதல் கட்டுமானம் ஆக்கிரமிப்பாளர்கள் / உரிமையாளர்கள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை அகற்றும் வாகன ஒப்பந்ததாரர், அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் சேவைகளைப் பெறுவதற்கும், டிரான்ஸ்போர்ட்டர்களுக்கு தேவையான அகற்றுதல் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களைச் செலுத்துவதற்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் செயலாக்க கட்டணத்தை செலுத்துவதற்கும் **இணைப்பு -** ***5*** **இல்** கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பயன்படுத்தி கட்டணத்தை செலுத்தலாம். மேலும் கட்டணத்தை செலுத்துவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

06. கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை செயலாக்க முடியாத குப்பைகள் ஈரக் கழிவுகள், மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் மற்றும் வேறு எந்த வகை கழிவுகளான திடக்கழிவுகள், நெகிழிபொருட்கள், சிப்பங்களுக்காக பயன்படுத்தப்படும் பொருட்கள், ஜிப்சம் போன்றவை கலக்கக் கூடாது.

*07.* **இணைப்பு -2இல்** குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அபாயகரமான கழிவுகளும் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளுடன் கலக்கக்கூடாது, மேற்கண்ட அபாயகரமான கழிவுகள் (வெடிப்பொருட்கள் அதன் தொடர்புடைய பொருட்கள், எரிபொருள்கள், இரசாயன கலவைகள், மின்மாற்றிகள், தார் மற்றும் தார் பொருட்கள் போன்றவைகள்) *TNPCB* அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களுக்கோ அல்லது அபாயகரமான கழிவுகளை அகற்றும் தளங்களுக்கோ அவற்றின் கட்டுமானம் உரிமையாளர் / ஆக்ரமிப்போர் தங்களின் சொந்த செலவில் தனித்தனியாக அனுப்ப வேண்டும் மற்றும் தேவைப்படும் போதெல்லாம் இணக்க சான்றுகளை வழங்க வேண்டும்.

*08.* சிறிய மற்றும் அதிக அளவில் கழிவு உருவாக்குபவர்கள் அல்லது மிகச் சிறிய அளவிலான கழிவுகள் 7 நாட்களுக்குள் அகற்றப்படாமல் இருக்கும் கழிவுகள் (குறிப்பாக கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகள்) பெருநகர சென்னை மாநகராட்சியால் அகற்றப்படும்.

மேற்கண்ட கழிவுகள் அகற்றலுக்கான செலவு, அந்தந்த வார்டு பொறியாளர்களால், **இணைப்பு -6 இல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, அபராதத்துடன் வசூலிக்கப்படும்.

*09.* இதன் தொடர்பான விஷயங்களில் கடமைகள் மற்றும் பொறுப்புகள் **இணைப்பு-4இல்** குறிப்பிடப்பட்டுள்ளது.

10. கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் பயனாளர் கட்டணங்களை செலுத்தாமல் இருக்கும் பட்சத்தில் **இணைப்பு 6** ன்படி அபராதங்கள் விதிப்பது தவிர்க்க இயலாது.

11. கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை உருவாக்குபவர்கள் மேற்கூறிய வரை முறைகளுக்கு இணங்காதபோது, **இணைப்பு 7** ல் உள்ளவாறு அபராதங்கள் விதிப்பது தவிர்க்க இயலாது.

## இணைப்பு -*1*

**செயலாக்கத்திற்காக பெருநகர சென்னை மாநகராட்சியால் வடிவமைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவு மேலாண்மை செயலாக்க தளங்களின் பட்டியல்**

| மண்டலம் | வார்டு | வசதியின் பெயர் மற்றும் முகவரி | வசதியினை பயன்படுத்தும் மண்டலங்கள் |
|---|---|---|---|
| *4* | *37* | கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை பதப்படுத்தும் வசதி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் | மண்டலம் *1* முதல் *8* வரை |
| *14* | *184* | கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை பதப்படுத்தும் வசதி, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் | மண்டலம் *9* முதல் *15* வரை |

## இணைப்பு - *2*

**கட்டுமான தளத்தில் காணப்படும் பொதுவான பொருட்கள்**

**கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவு மேலாண்மைக்கான திட்டத்தை தயாரித்தல்**

**அபாயகரமான கழிவுகள்**

| வ. எண் | கட்டுமான வகை | பொருட்கள் |
|---|---|---|
| 1 | நிலத்தினை தோண்டும் பணி, அடித்தளம் அமைத்தல் மற்றும் மேல் கட்டுமான பணிகள் | வெடிபொருட்கள், அது தொடர்புடைய பொருட்கள் மற்றும் நிலத்தினை தோண்ட பயன்படுத்தப்படும் உபகரணங்கள், |
| 2 | | எரிபொருள்கள், வெப்பமூட்ட பயன்படும் எண்ணெய், ஆவியாகும் / எரியக்கூடிய திரவங்கள், குளிரூட்டிகள் மற்றும் கிரீஸ் |
| 3 | | பூச்சிக்கொல்லிகள் |
| 4 | | இரசாயன கலவைகள், அடைப்பான்கள், பசைகள், கரைப்பான்கள் |

| | | |
|---|---|---|
| 5 | | பிளாஸ்டிக், அக்ரிலிக்ஸ் மற்றும் சிலிக்கா |
| 6 | | எலக்ட்ரானிக் பேலஸ்ட்கள், PCBகள், மின்மாற்றிகள், மின்தேக்கிகள், சுவிட்ச் கியர்கள், லீட் கேபிள் மற்றும் எண்ணெய் மற்றும் ஜெல் நிரப்பப்பட்ட கேபிள்கள் |
| 7 | | தார் மற்றும் தார் பொருட்கள் (பிட்டுமின் மற்றும் நீர் புகா வண்ணம் தடுக்கும் கலவைகள்) |
| 8 | | கான்கிரீட் தளம் அமைக்க உருவாக்கும் உலோக மற்றும் மர தளங்களில் பயன்படும் எண்ணெய் மற்றும் கான்கிரீட் தூண்கள் அமைக்க பயன்படும் பாக்ஸ்களில் பயன்படுத்தும் எண்ணெய். |
| 9 | | கல்நார் பொருட்கள் - காப்பு, ஓடுகள் |
| 10 | | பொருட்களை சிப்பம் கட்ட / சேமிக்க உபயோகிக்கப்படும் பேக்கேஜிங் (சிமெண்ட் பைகள், அட்டைப்பெட்டிகள், கொள்கலன்கள் மற்றும் பிளாஸ்டிக் கவர்கள்) |
| 11 | நிறைவுறும் மற்றும் உட்புற | தார்ப்பாய் |
| 12 | அழகூட்டும் பணிகள் | அழுத்தப்பட்ட வாயுக்கள் / சிலிண்டர்கள் |
| 13 | | பேட்டரிகள் |
| 14 | | மரத்தூள் |
| 15 | | 'வண்ணப்பூச்சுகள், நிறமிகள், சாயங்கள் மற்றும் ப்ரைமர்கள் |
| 16 | | பாதரசம் கொண்ட விளக்குகள், ஒளிரும் விளக்குகள் ஆலஜன் விளக்குகள், ஆர்க் விளக்குகள், புற ஊதா விளக்குகள், உயர் அழுத்த சோடியம் விளக்குகள், பாதரச ஆவி விளக்குகள், நியான் விளக்குகள் மற்றும் ஒளிரும் விளக்குகள் |
| 17 | | பாதரசம் உள்ள சாதனங்கள், ரிலேக்கள், கட்டுப்பாட்டு சாதனங்கள், தெர்மோஸ்டாட்கள், வெப்பமானிகள், மானோமீட்டர்கள் மற்றும் பாதரசம் கலந்த கழிவுகள் |

**இணைப்பு - 3**

**கட்டுமானம் / இடிபாடுகள் சேர்ப்பதற்காக அடையாளம் காணப்பட்ட இடங்கள்:**

கீழே உள்ள பட்டியலியிருந்து, கழிவுகளை அகற்றுவதற்கு விருப்பமான அங்கீகரிக்கப்பட்ட இடத்தைத் தேர்ந்தெடுக்கவும். அவ்வப்போது பெருநகர சென்னை

மாநகராட்சியால் கூடுதல் செயலாக்க தளங்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படலாம். கூடுதல் விவரங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் வலைத்தளத்தைப் பார்வையிடலாம்.

ஒரு மெட்ரிக் டன்னிற்கு குறைவாக கழிவுகள் உற்பத்தி செய்யும் மிகச் சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர் இத்தளத்திலேயோ அல்லது பெருநகர சென்னை மாநகராட்சி வலைத்தளங்களில் பதிவு செய்தால், கட்டுமானம் கழிவுகள் இலவசமாக எடுத்துச் செல்லப்படும்

| மண்டலம் | வார்டு | இடம் | *GPS* குறியீடு | |
|---|---|---|---|---|
| 1 | 7 | பக்கிங்காம் கால்வாய் சாலை, சாத்தங்காடு, திருவொற்றியூர். (லாரி நிலையத்திற்கு அருகில், மண்டலம்-1) | 13°9'15.65"N | 80°17'8.28"E |
| 2 | 20 | பகுதி- 5, காமராஜ் சாலை | 13° 9'42.90"N | 80°16'1.56"E |
| 3 | 26 | வீடற்றோர் இரவு தங்குமிடம் அருகே *CMDA* லாரி முனையம் (மாதவரம் *Truck Terminal* பின்புறம்) | 13° 8'51.15"N | 80°13'28.38"E |
| 4 | 37 | கொடுங்கையூர் குப்பை கொட்டும் மைதானம், தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை | 13° 08' 02" N | 80° 16' 09" E |
| 5<br>6 | 58 | பழைய கால்நடை கிடங்கின் ஒரு பகுதி, அவதானம் பாப்பையர் சாலை, சூளை (கார்ப்பரேஷன் பள்ளிக்கு எதிரே) | 13° 05'26.1"N | 80°15'53.8"E |
| 7 | 86 | வானகரம் சாலை, அத்திப்பட்டு குப்பைக் கொட்டும் வளாகம் | 13°05'58.8"N | 80°08'58.6"E |
| 8 | 101 | 1வது பிரதான சாலை, ஷெனாய் நகர் (கஜலட்சுமி காலனி அருகில்) | 13° 4'42.82"N | 80°13'23.15"E |
| 9 | 120 | லாயிட்ஸ் காலனி (கார்ப்பரேஷன் ஐடிஐ பயிலகம் அருகில்) | 13°3'0.69"N | 80°16'21.64"E |
| 10 | 127 | குருசிவா தெரு, எஸ்.எம் பிளாக், ஜாபர்கான்பேட்டை, கோடம்பாக்கம் (ஆர்-10 எம்ஜிஆர் நகர் காவல் நிலையம் அருகில்) | 13°03'70.06"N | 80°20'16.21"E |
| 11 | 143 | நொளம்பூர் கட்டம் *II*, 2வது பிரதான சாலை (மதுரவாயல் தாலுகா அலுவலகம் அருகில்) | 13°04'40.8"N | 80°17'32'76"E |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 158 | நந்தம்பாக்கம் TPF, அடையார் ஆற்றங்கரை அருகே Dn - 158 | 13°02'20646" N | 80°10'24.1"E |
| 13 | 174 | வேளச்சேரி மெயின் ரோடு, குருநானக் கல்லூரிக்கு அருகில், வேளச்சேரி மயான பூமி | 12°59'23.14"N | 80°13'19.24"E |
| 14 | 186 | 200 அடி ரேடியல் சாலை, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் | 12°95'00.92"N | 80°22'86.30"E |
| 15 | 197 | கங்கையம்மன் கோவில் தெரு விரிவாக்கம், காரப்பாக்கம் (தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகத்திற்கு அருகில்) | 12°54'58.33"N | 80°14'11.03"E |

கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுவதற்கான காலம் கீழே உள்ள வரிசை எண்1 இல் உள்ளதைப் போன்று இருக்க வேண்டும். பாதுகாப்பான கழிவு அகற்றல் அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**1. அறிக்கையிடும் காலம்**

a. 1000 கிலோவிற்கும் குறைவான அளவிற்கு: பணி நிறைவுற்ற பிறகு.

**இணைப்பு - 4**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

- பொதுமக்களுக்கான விழிப்புணர்வு திட்டங்கள் தொடங்கப்படும், இது முக்கியமாக கட்டுமானக் கழிவு மேலாண்மை நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பற்றிய தகவல்களைப் பரப்புவதில் கவனம் செலுத்தும்.
- இந்தத் திட்டத்திற்காக பிரத்யேகமாக ஒரு பயனாளர் நட்பு வாடிக்கையாளர் சேவை உதவி எண் (கட்டணமில்லா எண்) உருவாக்கப்படும்.
- சென்னையில் ஒரு மைய இடத்தில் உதவி மையம் செயல்படும்.
- உதவி எண்ணை அழைத்தவுடன், அந்தந்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்படும்.
- பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் ஒரே நேரத்தில் பல இடங்களிலிருந்து கழிவுகளை எடுக்க வாகனங்களை அனுப்புவார்கள்.
- கழிவுகளை எடுத்த பிறகு, பெருநகர சென்னை மாநகராட்சியின் கழிவுகளை செயலாக்கம் செய்யும் பகுதியில் சேர்க்கும் பணி மேற்கொள்ளப்படும்.
- கழிவுகள் அகற்றும் பணி முடிந்ததும், பெருநகர சென்னைமாநகராட்சி அதிகாரிகள் அழைப்பு மைய இடத்திற்கு மீண்டும் பணி முடிவுற்ற அறிக்கையினை அளிப்பார்கள்.

## இணைப்பு - 5

## சேவை கட்டணங்களுக்கான விளக்கங்கள்

### பகுதி I -பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் தவிர மற்ற கழிவு உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டிய சேவை கட்டணங்கள்

| வ. எண் | கழிவு உற்பத்தியாளர்களின் வகை (பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களைத்தவிர) | சேவைக் கட்டணங்கள் ரூபாய் (INR) |
|---|---|---|
| 1. | கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வதற்கு | 1. 1000 கிலோ வரை - இலவசம்<br>2. ரூ.2500.00 (ஒரு மெட்ரிக் டன்னிற்கு மேல் மற்றும் 20MTக்கு குறைவாக) |

இந்த விகிதங்கள் மாறுதலுக்குட்பட்டது, ஏதேனும் காரணத்தால் பெருநகர சென்னை மாநகராட்சியில் மேலே குறிப்பிடப்பட்ட விகிதங்களிலிருந்து சேவைக் கட்டணத்தை மாற்ற விரும்பினால், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் சேவை வழங்குநருக்கான மொத்த செலவுகளை அது ஈடுகட்ட வேண்டும்:

1. கட்டுமானம் இடிபாட்டுக் கழிவுகளை (மனிதவளம் மற்றும் JCB போன்ற உபகரணங்கள்) ஏற்றுதல் மற்றும் கழிவு உற்பத்தி இடத்திலிருந்து கட்டுமானம் இடிபாட்டுக் கழிவு சேகரிப்பு மையங்கள் / கழிவு பதப்படுத்தும் வசதிகளுக்கு அனுப்புவதற்கான போக்குவரத்துச் செலவு (அதாவது எரிபொருள், வாகனங்கள் மற்றும் மனிதவளத்தின் பராமரிப்பு செலவுகள்) ரூ.2500/-1 MT/
2. கட்டுமானம் இடிபாட்டுக் கழிவுகளை செயலாக்கப்படுத்தப்படும் செயலாக்கச் செலவு ஒரு MTக்கு ரூ.800/- புதிய தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்படும் போதெல்லாம் பெருநகர சென்னை மாநகராட்சி வெவ்வேறு கட்டுமானம் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளுக்கு தனித்தனி சேவை கட்டணங்களை பரிந்துரைக்கும்.

<u>பகுதி II - பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் கழிவுகளை சேர்க்க வேண்டிய இடம் :</u>

தங்கள் சொந்த கட்டுமானம் இடிபாட்டுக் கழிவுகளை கட்டுமானம் இடிபாட்டு செயலாக்கத் தளங்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் (இணைப்பு - 1ல் உள்ள இடங்களுக்கு).

1. செயலாக்க வசதிகளில் கட்டுமானம் இடிபாட்டுக் கழிவுகளை பதப்படுத்துவதற்கான செலவுகள் @Rs.800/MT

## இணைப்பு - 6

## அட்டவணை - IV

## அபராதங்கள் (திடக்கழிவு மேலாண்மை துணைச் சட்டம் 2019 5.1 & 8 ஐப் பார்க்கவும்

| வ. எண் | துணைப் பிரிவு / பிரிவு விதிகளின் விவரங்கள் | அபராதத் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | அனைத்து பொது இடங்களிலும் கட்டுமான மற்றும் இடிபாட்டுக்கழிவுகளை முறையற்ற வகையில் கொட்டுதல். | ரூ.5000.00 |

## இணைப்பு - 7

## வரைமுறைகளுக்கு இணங்காததற்கான அபராதங்கள்

| வ. எண் | குற்றம் | பெருமளவு கழிவுகள் உருவாக்குவோர் / சேவை வழங்குநர் /டிரான்ஸ்போர்ட்டர் (INR இல்) | சிறிய அளவில் கழிவுகள் உருவாக்கு வோர் (INR இல்) | சேகரிப்பு & போக்குவரத்து சேவை வழங்குநர் (INR இல்) |
|---|---|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால், திறந்தவெளி மற்றும் பிற பொதுமக்களுக்கு பயன்பாட்டு பகுதிகளில் கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை கொட்டுதல். | கொட்டப்படும் கட்டுமானம் இடிபாட்டுக் கழிவுகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.5000 | கொட்டப்படும் கட்டுமானம் இடிபாட்டுக் கழிவுகளுக்கு டன் ஒன்றுக்கு 3000 | கொட்டப்படும் கட்டுமானம் இடிபாட்டுக் கழிவுகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.3000. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மூலம், வாகனத்தை பறிமுதல் செய்யலாம், இது குற்றங்களுக்கான அபராத தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்திய பிறகு வாகனங்கள் விடுவிக்கப்படும். |
| 2 | கழிவு மேலாண்மை திட்டத்தின் | i. (அ) கட்டுமானம் அல்லது | N.A | N.A |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிபந்தனைகளை பின்பற்றாதது | பழுதுபார்க்கும் பணி 6000 சதுர மீட்டர் மற்றும் / அல்லது (ஆ) இடிபாடு 600 சதுர மீட்டர் எனில், ஒரு நாளைக்கு ரூ.25,000 செலுத்த வேண்டும். | | |

எனவே, தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள **“கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மை வரைவு வழிகாட்டுதல் 2025க்கு”** நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 14.03.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.03.2025 அன்று தீர்மான எண்.057/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********